ஓம் பரப்பிரம்மணே நம :

# அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கி, ஆநந்தத்தைத்
தரவல்லதான அநுபவ விநோத ஞான கலா விலாஸங்கள்
நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் - எஸ். ஜீ. இராமாநுஜலு நாயுடு.

" எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். " (திருக்குறள்.)

COPY RIGHT] [REGISTERED.

கமலம்-4. Vol. 4. } சென்னை: சுக்கில ஞு கார்த்திகை மீ 1 உ 1929-ம் ஞு நவம்பர் மீ 16 உ { இதழ்-44 No. 44

## ஆநந்த தரிசனம்

பாலிற்சுவையும் பனிமலரில் வாசனையும்
போலப் பொருளிடத்தும் புல்லியே—மூலத்
தொருமுதலா யோங்கு முபர்பரனே யின்றுன்
திருவருளை யெங்களுக்குச் செய்.

" இதய மதிலே - இலங்கு நாதனை, நிதமுந் துதித்து - நீக்துவாய் வேதனை." ஒப்பற்ற தேவன், ஸகல பூதங்களிலும் மறைந்து உறைவோன், எங்கும் பரவியவன், எல்லா பூதங்களுக்கும் உயிர், தொழிலுக் கதிகாரி, பூதங்களைப் பாலிப்போன், அனைத்தையுங் காண்போன், ஞானஸ்வரூபி, முற்றும் உடலென்பதற்றவன்.—அவன் பாதமலர் பணிகின்றேன். காலின்றி நடப்பவன், கையின்றிச் செய்பவன், கண்ணின்றிக் காண்பவன், காதின்றிக் கேட்பவன், அறியத்தக்கன வெல்லாம் அவனறிவான், அவனை யறியவோ ஒருவனுமில்லை; வேறு விதமாய் அவனைக் கூறுதற்கு முடியாமல் ஆதி மஹா புருஷனென்று அழைத்தனர்.—அந்த ஆதிநாதனை மனம் மொழி மெய்களால் துதிக்கின்றேன். தியானத்தையும் யோகத்தையும் அநுசரித்தவர் மட்டுமே ஸகல காரணங்களுக்கும் இறைவனுயும், தன் குணங்களால் நன்றாய் மூடப்பட்டும், இருக்கும் அந்த மஹா தேவாத்ம சக்தியைக் காண்பார்கள்.—அந்த சக்தியை வந்திக்கின்றேன்.

---

எவ்வளவு மனமொத்திருந்தாலும் அவ்ரவர்களின் அந்தரங்கங்கள், கற்பு மோசங்கள், சிற்றின்ப சிந்தனைகள் அவரவர்களின் நெஞ்சிலேதான். கணவன்—மனைவியினிடையில் கூட அதுமட்டும் எப்போதுமே வெளிவருவதில்லை,

தோண்டர்கள் போற்று நேயா—துப்பிலா வாதிமூலா,
அண்டர்க ளறியா ரூபா—ஆணேடு பெண்ணு மல்லாய்,
பெண்டிரு மற்ற தேவா—பிணியோடு பெருமை யில்லாய்,
அண்டினே னின்று நாதா—ஆண்டருளபய மின்றே.

***

"பிறந்து பிறந்து சுகம் பெற்றது போதும், பிறவா நெறி கேளாய் பேய் மனமே" என்முர் ஓர் பக்தர். பிறவா நெறிக்கு அமிர்வாச்சியனுன சத்திய ஸ்வரூபனைச் சேர்ந்து இன்புற்ற லன்றி நமக்கு அந்தப் பயம் நிவாரண மாவ தெப்படி? அவன் இன்னுனென்று சொல்லத் தெரியாம லிருக்கும் போது அவனை யெங்ஙன மடைந்து இன்புறுவதெனுங் கவலை நமக்கு வேண் டியதில்லை. அவருடைய லக்ஷணங்களை யெல்லாம் எடுத்துரைக்க வல்லோ மல்லோ மாயினும் சில சுகுணங்களையாவது உணர்ந்து சில சொற்களா லாவது அவனைப் புகழ்ந்து களிக்க அக்கடவுள் அநுக்கிரஹம் செய்தே யிருக்கிறர். அதன் மூலமாய் அவருடைய மற்றப் பிரபாவங்களையும் படிப்படியாய் அறிந்து பேரானந்த முறலாகும். இப்படிப்பட்ட அளவிடப்படாத சுப லக்ஷணங்க ளுள்ள ஆநந்த ஸ்வரூபனை யடைந்தா லன்றே நாமும் ஸதாகாலமும் பேரா நந்தத்தைப் பெற்று பிறவிப் பயம் நீங்கி வாழலாகும். மிதப் பிரயாஸையால் மித பலனும், மிதமான பலனுல் மித சௌக்கியமும் ஸந்தோஷமும் உண்டா வது உலக வியற்கையா யிருக்கக் காணும்போது, பரம்பொருளை யடைந்து அநந்த காலமும் ஆநந்த மெய்துவதான பெரிய காரியத்திற்குச் சற்று விசே ஷப் பிரயாசையை நாம் ஏன் எடுத்துக் கொள்ளக் கூடாது?

ஆதி யநாதியாகி யணுவிற் கணுவுமாகி,
சோதியா யண்டமெங்கும் துலங்கும் பரிபூரணனை,
நீதியா யனுதினம் நினைத்தால்நம தான்மா,
வேதனை யில்லாமல் விளங்கும் மோக்ஷத்திலென்றும்.

***

"இன்பத்துள் ளின்பம், இணையறு வின்பம், அன்புறு பேரின்பமே- பூரணம்; ஆசையாய்க் கண்டறியே." நமது அண்ணலைக் காணுதற்கான அருள் என்னமோ அவ்வளவு கடினசாத்தியமாகவும் இருக்கவில்லை. அவ்வ ளவு தூரத்தில் அதை வைக்கவுமில்லை. எனினும், சோம்பேறியைப்போல் 'உதட்டு வாழைப்பழம் உள்ளே தள்ளுபவ ருண்டோ' என வெறுமனே உட் கார்ந்திருப்பவர்க்கு அது கைகூடாது. அங்ஙனம் சோம்பிக் கிடக்குங் குற்றம் மனிதருடையதாகும். நமதப்பன் ஸர்வ சுலபனுயும், மனதினுல் உணரக் கூடியவனுகியும், படைப்பின் ஸர்வ பதார்த்தத்தின் ஊடாயும் பிரஸன்ன முகத்தோடு ஜ்வலித்துக்கொண்டு நமக்குத் தர்சன மீந்து வருகையில், அதி சுகமாய் அவனருமை பெருமைகளைக் கண்டுணர்ந்து ஏற்றி யேற்றி ஆநந்தக்

---

புருஷன்—மனைவியுமாக ஒண்டிக் குடித்தனம் செய்யும் வீட்டில் மனைவி யின் மாதவிலக்குநாள் சாப்பாட்டுக்குத் திண்டாட்டமான நாள்! அந்தப் புருஷன் சமைக்கப்போய் படுகிற பாடு—பட்டவர்களைக் கேட்டுப் பாரு!

கடலில் முழுகாமல் மந்த மதிகளாய் அஞ்ஞான வுறக்கத்தில் வாழ்நாளை வீணாக்குதல் நமது பேதமை யல்லாது வேறென்னவாகும்?

**திரவியந் தேடவும்—தேகத்தைக் காக்கவும்,**
**தீவாந்தரங் கடல்—காடு மலைகள்தாண்டி,**
**தினமு மலைகிறோம்—சீவ ரக்ஷணைக்காக,**
**சிலநேர மாவது—சீர்வழி தேடோமே.**

***

"செல்வத்துள் செல்வம், சிறிதுங் கெடாத, அல்லலழி முத்தியதே-பூரணம்; ஆராய்ந்து கண்டறியே." மனிதர்களுக்குக் கிடைத்த பேறுகளில் சிறந்த பேறு ஆராயும் சக்தியே. எவன் ஹிருதயத்தில் வசித்துக் கொண்டிருந்தும் அடையக் கூடாதவனா யிருக்கிறானோ, மனதுக்கு எட்டாததா யிருந்தும்—'பேராநந்தப் பெரும்பொரு ளொன்றுளது; நீ அம் மூலதனத்தைப் பெற முயலாய்'—என்று யார் தூண்டிக் கொண்டிருக்கிறானோ, அப்பேர்க்கொத்த திவ்ய வஸ்துவை முயன்றடைந்து இன்பமுறத் துணிந்தோமேல் நமது ஸம்சார மிருத்திய பயங்கள் விலகும்; நாமும் பேரின்ப வழுதினைப் பெற்றுப் பூரிக்கலாம். இவ்வெட்டாப் பொருள் நமக்குக் கிட்டுமோ வென ஐயுற வேண்டுவதில்லை. அவரைக் கிட்டும்படியான சக்தியை யவரே நமக்கு அருள் புரிந்திருக்கிறார். இன்றேல், அவரது புத்திர வாச்சல்லியத்தை தான் எப்படி விளங்கும்? நாம் நமது மனதைப் பரிசுத்தப்படுத்தி அன்பாசனத்தில் அவரை வீற்றிருக்கச் செய்வதே அவரைக் கிட்டும் உபாயமாகும். பிறகு நாம் அவரைப் பிரிந்தவராக ஒருபோதும் எண்ணமாட்டோம்.

சிந்தனை செய்வாய்—மனமே, சிந்தனை செய்வாய்

இந்த வெளி முதலாகிய பூதங்க ளெல்லாம்
படைத்த மெய்யின்பக் கடவுளை (சிந்தனை)

அண்டகோடி நிறைந் ததனிற்கு,
மப்புறமாய் நித்திய அவ்வியக்த ரூபமாய்,
கண்ட மில்லாதந்தக் கடவுளை நிதம்,
கலந் தின்பமுறக் கசிந்துருகி (சிந்தனை)

சராசரங்க ளிரண்டையும் படைத்து,
தன்னுரு காட்டாமல் தனித்து வியாபித்து,
நிற முருவமில்லாத வகளங்க,
நித்தியாநந்தனை நின்னுளறிந்து (சிந்தனை)

---

தகப்பனார் தனியே இருந்து குழந்தைகளைக் கவனித்துக்கொள்வ தெல்லாம் அவர்கள் சுகமாய் இருக்கும் வரையிலேயே. குழந்தைகளுக்கு வியாதி வரினோ மனைவியை உடனே வரச்சொல்லுகிறான் கணவன்! இவனொருவனே சமாளிக்க முடிவதில்லை. ஆனால் பெண்ணுருவம் எதையுமே சமாளிக்கும்.

அறிவுக்கறிவாகிய அண்ணலை,
அறிந்தவனே அமிர்தனுவன்,
குறியற்றுன்னுள் குடிகொண்டவந்தக்
குற்றமில்லான்பதம் சித்தமதிற்கொண்டு (சிந்தனை)

***

"ஒப்பற்ற மேலோர், ஊடாடி கண்டு, துப்பற்றே யுய்யுமிடம்,—பூரணம்; சொல்வ தெளிதல்லவே." எளிதல்லவாயினும், நமது மனேபக்குவத்தால் அவரை வலிய யழைத்து, எமதப்பனே! தொண்டரைப் பிரியாத் தோழனே! காருண்ணியப் பொற்குவையே! எங்கண்ணே! கரும்பே! சீனியே! சக்கரையே! தேனே! தெவிட்டா வமுதே! எனப் பலவாறு அன்னத்துக்கும் நாவுக்கும் அமுதூர, உடல் புளகாங்கிதங் கொள்ள, நமக்குத் தோன்றும் சொற்ப மதலைச் சொற்களால் தியானித்துத் துன்பம் துடைத்து, இன்பம் படைத்து, நரக மார்க்கம் அடைத்து, அண்ணலை யணைத்து, இருவர் ஹிருதயத்தையும் ஒன்றுசேர விணைத்து பேரின்ப பரவசராய் உய்வதற்கு நம்மால் கூடும். முன்பு நமது மனதிற்கு எட்டாதவரா யிருந்தவரையே இப்பொழுது, ஓ! எனது மனேரஞ்சகனே! அமிருதஸ்வரூபனே! ஓ! பேரின்பக் கடலே! பெற்ற தவக்கொழுந்தே! பற்றினவர் பற்றே! என்று உருகி அவரிணை பிரியாது கூடி நீடு வாழவும் முடியும். இப்படிப்பட்ட மஹா புருஷனை யடைந்தால் தானே நாமும் அநந்த காலமும் அளவிடப்படாத ஆத்மாநந்த சுகத்தை யனுபவிக்கலாம். இந்த ஆநந்தப் பிரம்மத்தை ஆசிரயித்தால்தானே நாமும் என்றும் அவருடன் பரமாநந்தமுற்று அவரது ஆக்கியா கைங்கரியங்களைச்செய்து கொண்டிருக்கச் சாத்தியமாகும்.

உலகவின்பங்களில்—ஒன்றும்நிலையில்லை,
அலகிலாத்துன்பத்தில்—ஆழ்த்தும்பெருந்தொல்லை,
பலகாலுமனுபவ—ப்பட்டும் அறிவில்லை.

***

"அழியாத நாயன் அகத்தி லிருக்க, இழிவாக வூரெங்குமே ஏகி மெலிவதேனே?" மூடனுடன் சேருபவன் மூடனுகவே யிருப்பான். அக்கியானியோடு நட்பாள்பவன் அப்படியே யிருப்பான். சுக்கியானியின் நட்பு சுக்கியானத்தையே யுண்டாக்கும். நித்தியாநந்தனைச் சேருபவன் நித்தியாநந்தத்தையே பெறுவான். ஆகவே, நமக்கு நிரந்தர சுகம் வேண்டுமெனில்,—நமது பிறப்பைப் பயன்படுத்த நினைத்து எக்காலமும் மிருத்தியு பயமின்றி பேரின்ப வமுதினைப் பருகிக் களிக்க விருப்புற்றே மெனில்,—எவனுடைய அத்புத மகிமைகளையும், நற்குணங்களையும், லக்ஷணங்களையும் இன்னவை யென மொழிய நமது வாக்கு வன்மையற்று மயங்குகின்றதோ; எவனை நம்

கேட்லாக்கில் இரண்டரை ரூபாய் விலையுள்ள புஸ்தகத்தை உள்ளூர் புஸ்தகக்கடையில் ரூபாய் இரண்டுக்கும் குறைந்த விலையில் வாங்கலாம். அதையே கம்பெனிக்கு எழுதினுல் வி. பி. சார்ஜ் உட்பட மூன்றேகால் ரூபாய் ஆகிவிடுகிறது. (வி. சிவசுப்பிரமணியம்.)

மனதினுலும் எட்டி நெருங்க அசக்தராக இருக்கிறேமோ, எவன் ஆநந்த மான பரமோ அப்படிக்கொத்தவனைச் சரண மடைந்து பேரின்பமுற்று நமது வாழ்நாள் கழிப்போமாக. இங்ஙனம் இந்த சத்திய ஸ்வரூபனையே யடைந்து பேறடையும்படி நங்கருணை வள்ளலை வேண்டிக் கொள்வோமாக.

**பொன்னுனநெஞ்சே யுனக்கென்னபுத்தி சொல்லினும்
பொறிவழியிலேன் போகிருய்—ஐம்பொறிவழியிலேன்போகிருய்?**

***

"நீரில் நுமிழி, நிலையற்ற காயம், பாரில் சதமென்றையோ, படைப்பது மேலறிவோ?" அறிவில்லாது இதுவரை பாழ்த்தது போதும். ஓ! அடியார் அருள் முகிலே! அன்பர்க்காருயிரே! ஆரூத் தெள்ளமுதே! எமது அறியாமையை விலக்கி எம்மை நின் ஸத்ஸ்வரூபத்தை யுள்ளபடி யறிந்து சுக்கியானத்தை யடையும்படி அநுக்கிரகம் புரிவாயாக. ஓ! ஞான தாதா! இந்த சுக்கியானத்தினின்றும் யாம் நழுவாமல் நற்கதி யடையும்படிக்குக் கடைக் கணித்தருள்வாய். ஓ! கருணாகரக் கடவுளே! எம் ஆண்டவனே! எமது இவ்விண்ணப்பத்தை யங்கீகரித்து எமக்கென்றும் நின் ஸ்வரூப விஷயத்தில் சத்கியானமே வளர்ந்து நிலையுறும்படி கருணை கூர்வாய். அங்ஙனம் பரிசுத்த ஞானத்தோடு நின்னைச் சரணடைந்து ஆநந்தமுற்றுய்யும்படி கடாக்ஷிப்பாயாக. ஓம் தத்ஸத்.

இருக்குநாலு வேதமும் எழுத்தறவே யோதினும்,
பெருக்கநீறு பூசினும் பிதற்றினும் பிரானிரான்,
உருக்கிநெஞ்சை உட்கலந்து உண்மைகூற வல்லிரால்,
சுருக்கமற்ற சோதியைத் தொடர்ந்துகூட லாகுமே.

## அவசரத்தின் அலங்கோலம்.

அவசரப்பட்டு இறக்கும் சாதம் பாதி வெந்தும் வேகாததும் போலவே, அவசரப்படுகிற காரியமும் அரை குறையாகவே முடிகிறது. அவசரப்பட்டு எழுதுகையில் அதைப் பெறுவோர்க்கு அந்த எழுத்துகளே தெரிவதில்லை. அவசரப்படுவோர் எது முக்கியமோ அதை விட்டுவிட்டு மற்றதை முடித்துவிடுகிருர்கள். அவசரப்பட்டுச் செய்யும் கைத் துடுக்கோ, சொல்லும் வாய் மொழியோ பிறகு ஒரு பெரிய கலகத்தை யுண்டாக்கி விடுகிறது. அவசரம் வேலையையும் கெடுத்து ஆளையும் கெடுக்கிறது. விவாகமாகி மூன்று வருஷமாகியும் இன்னும் குழந்தை யில்லையே யென்று நொந்துகொண்டு அவசரப்பட்டால் ஆகுமா?

அமிர்தகுணபோதினி

சுக்கில ஸ்ரீ கார்த்திகை மீ 1௳

# ஆத்திர மூட்டியவர்களுக்கு விடுதலை!

## ஆத்திர மூட்டப்பெற்றவர்களுக்கு சிக்ஷை!

ஆம்; அதைப்பற்றி எப்பொழுதும் சிந்தித்துப் பார். ஜாக்கிரதைப்படு. வீணே படுகுழியில் வீழ்ந்திடாதே. இது ஒரு பெரிய விஷயம்; ஆழ்ந்து ஆராய்தற்குத் தகுந்த பாகம்; என்றைக்கும் ஞாபகத்தில் வைக்கவேண்டிய ஒரு முக்கிய குறிப்பு. ஆத்திர மூட்டியவர்களுக்கு மட்டும் விடுதலையா? ஆம், விடுதலை தான்; அவர்களுக்கு விடுதலையே கிடைக்கின்றது. ஆத்திரத்தைத் தூண்டிவிட்ட குற்றம் அவர்கள்மீது சுமத்தப் பெறுவதில்லை; அன்றியும் அவர்கள் நிரபராதிகளாகவும் கருதப்படுகிறார்கள்; அது மட்டுமல்ல; "ஐயோ பாவம்!" என்று உலகத்தாரின் இரக்கத்திற்கும் அநுதாபத்திற்கும் கூட அவர்கள் பாத்திரமாகிறார்கள். அவர்கள் செய்த—"தூண்டிவிட்ட" குற்றம் வெளிக்கு வருவதேயில்லை. ஆத்திர மூட்டியதை ஒரு குற்றமாக எண்ணுவதேயில்லை. ஆகவே, ஆத்திர மூட்டியவர்கள் எத்துணையோ கனத்த தீங்கிற்கும், உலகத்தின் அபவாதத்திற்கும், கொலை-பழி-பாவங்கட்கும் காரணஸ்தர்களாயிருப்பினும், அவர்களின் தூண்டுதலாலேயே அவ்வளவும் விளைந்திருப்பினும், அவர்கள் குற்றமற்றவர்களாகவே கொள்ளப்பட்டுத் தப்பித்துக்கொண்டு போய்விடுகிறார்கள். "நல்ல பிள்ளைக"ளாகவும் ஆகிவிடுகிறார்கள். உண்மையான முதல் குற்றவாளிகளாகிய இவர்கள் விடுதலைபெற்று விடுவது மஹா ஆச்சரியகரமானது. நியாய சட்டங்களால்கூட அவர்களுக்கு சிக்ஷை விதிக்க முடியாது; இதுவரை சிக்ஷை விதிக்கப்பட்டதுமில்லை.

* * *

இனி, ஆத்திர மூட்டப் பெற்றவர்களோ—அந்தோ பரிதாபம்!—அவர்கள் பயங்கரமான—மோசமான—மீள முடியாத—சண்

---

மணிபாஸில் சில்லறைகளைப் போடும் பொழுது கால்—அரை ரூபாய் உள்ளே விழுந்ததா என்று கவனித்துப் பார். உள்ளே விழாமல் தவறிக் கீழேயும் விழுந்திருக்கலாம். உடனே பார்க்காவிடில் அது மற்றவர் சொத்தாகிவிடும்.

டாளத்தனமான காரியங்களைச் செய்துவிட்டு, அதுவும் தம்மை மறந்த—தமக்கே புத்தி ஸ்வாதீனமில்லாத நிலையில் செய்துவிட்டு, அந்த ஆத்திர மூட்டப்பெற்ற நேரம் கழிந்தவுடன் சொந்த புத்தி வந்தவர்களாய் "ஐயோ! ஏன் இந்த அநியாயத்தைச் செய்தோம்?" என்று தங்களையே நிந்தித்துக்கொண்டு திகைக்கிறார்கள்; திகைத்துக் கலங்குகிறார்கள்; கலங்கித் தங்களைக் குற்றம் செய்தோராக உலகம் தூஷிக்குமே என்று நடுங்குகிறார்கள்; நடுங்கி எங்கு ஜனங்கள் கூடி விடுகிறார்களோவென அஞ்சி ஓடி மறையத் துணிகிறார்கள்; மறைந்தும் கொள்கிறார்கள். அதற்குள் ஜனத்திரள் ஒன்று சேர, போலீஸார் ஓடிவர, இவர்களைத் தேடிச் செல்ல, கடைசியில் இவர்கள் கண்டுபிடிக்கப்பட்டுக் குற்றவாளிகளாய்க் கைது செய்யப்பட, இவர்கள் பக்கத்துக்கு வக்கீல்கள் அமர்த்தப் பட, சேகரித்த செல்வமெல்லாம் இதில் சின்னாபின்னமாக, முடிவில் நியாயஸ்தலத்தில் அபூர்வமாய் இரண்டொருவர் விடுதலை பெறப் பெரும்பாலோர் சிக்ஷைகளுக்காளாகிச் சிறை சேர, இதிலிருந்தும் அந்தக் குடும்பமே ஸர்வ நாசமாய் விடுகின்றது! "ஆத்திர மூட்டப் பெற்றவர்க"ளின் கதி இதுவாக, அன்னோர் எய்தும் அலங்கோலம் இங்ஙனமாக, இன்னோருக்கு இத்துணை ஆத்திரம் எழுந்து மூண்டு கொள்ளுமாறு "ஆத்திர மூட்டியவர்க"ளோ மெதுவாகத் தப்பித்துக் கொண்டு விடுகிறார்கள்! உலகப் பழிப்புக்கும் காரணராகாது விலகி விடுகிறார்கள்!! ஆத்திர மூட்டியவர்களுக்கு விடுதலை கிடைக்க, அவர்களால் ஆத்திர மூட்டப் பெற்றவர்களோ உலக நிந்தைக்கும் அரச தண்டனைகளுக்கும் ஆளாகிப் பாதாளக் கிணற்றில் தள்ளப் படுகிறார்கள். பிறகு நேருகின்ற ஒரு பொல்லாப்பினை—ஒரு ஸர்வ நாசத்தை—ஆத்திர மூட்டியவர்களும், ஆத்திர மூட்டப் பெற்றவர்களுமான இவ்விருபாலாருமே ஒன்று சேர்ந்து செய்திருக்க, இதிலே ஒருவருக்கு விடுதலை—மற்றவர்க்கு சிக்ஷையா? முதற் குற்றவாளிகளாகிய "ஆத்திர மூட்டியவர்கள்" தப்பித்துக்கொண்டுவிட, இவர்களின் ஏவுதலாற் குற்றவாளிகளான "ஆத்திரமூட்டப் பெற்றவர்க"ளோ அகப்பட்டுக் கொண்டு விழித்துத் தத்தளித்து, அக்கிரமம் செய்தோராய்க் கருதப்பட்டு அந்தோ தண்டனைகளுக்கும் ஆளாகிறார்கள். இது அநியாயத்திலும் அநியாய மன்றோ? அநியாயந்தானாயினும், உலகம் தோன்றியது முதல் இதுகாறும் நிகழ்ந்து வருவதும் இதுவே; இனி நிகழப் பெறுவதும் இவ்விதமே தான். அதாவது, ஏவிய முதற் குற்றவாளி தப்பித்துக்கொள்ள, இரண்டாவதான ஏவப்பெற்ற குற்றவாளி சிக்ஷை பெறுதலே!

***

---

என்னதான் காபி ஹோட்டலில் சாப்பிட்டாலும் வீட்டில் புசிக்கிற ஒரு கவள அன்னத்திற்கு இணையாகாது. அது அடக்குகிற பசியை காபி ஹோட்டல் அடக்காது. அவசரத்துக்கும் வெளியூரிலுமே, காபிஹோட்டல் சரி.

கிறிஸ்து வேதத்திலுள்ள ஆதாம்—ஏவாள் இறைவனால் தடுக்கப்பெற்ற விருக்ஷத்தின் கனியை யுண்டு மரண சாபத்தினைப் பெறுகிறார்கள். இவர்களே முதன்முதலாக விரும்பி அக்கனியைப் புசித்தனரா ? இல்லையில்லை. இவர்கள் ஒரு சாத்தானால் ஏவப்பெற்று அதன் பின்னரே அப்பழத்தை யருந்த இச்சித்தனர். இதில் முதல் குற்றவாளியான சாத்தான் எந்த சிக்ஷைக்கும் ஆளாகாது தப்பித்துக்கொண்டு விட, அவனால் ஏவப்பெற்ற இவ்விருவர்கள் மட்டும் குற்றவாளிகளாய் சிக்ஷிக்கப்படலாயினர். இது பரிதாப மன்றோ ? மதாசாரியர்களின் ஆவேசம் காரணமாக, அவர்களால் தூண்டிவிடப்பட்டு ஆத்திர மூட்டப் பெற்றோர் புரிந்த கொலை பழி பாவங்கள் கொஞ்சமா? இதில் காரணபுருஷர்களான மதாசாரியர்கள் பரமோத்தமர்களாகிவிட, அவர்களால் ஏவப்பெற்றோர் பாவமூட்டையைச் சுமக்கலாயினர். விவாகம் முடிந்து அந்த விவாக முறையில் குழந்தைகள் உற்பவிக்கப் பெறாமல், தவறு வழியிலும், விபசாரத்தின் பயனாகவும் பிரஜோற்பத்தி யுண்டாகிப் பிற்காலத்தில் ஸமூகத்தவரால் அந்த நீசமான வழியில் தோன்றியவர்கள் ஒதுக்கப்பட்டும் வெறுக்கப்பட்டும் விலக்கப்பட்டும் அவமதிக்கப்பட்டும் போக, இந்த அவமானங்கட்கெல்லாம் இவர்களா காரணர்கள் ? இவர்களைத் தோற்றுவித்த முதற் குற்றவாளிகளான தவறு வழியில் நடந்தோர் சிக்ஷிக்கப்படாமற்போக, அதன் பயனாக உதித்த இவர்களோ ஒரு உத்தம ஸமூகத்தில் சேர்த்துவைத்து எண்ணப்படுதற் கியலாதவர்களாய்க் கேவலப்பட நேருகிறது. முன்னவர்கட்கு விடுதலை ! பின்னவர்கட்கு சிக்ஷை !! எவ்விதப் பிணியுமில்லாத ஒரு சுகுமாரியை, அவளை மணந்த ஆடவன் தான் அக்கிரமத்தில் தேடிக்கொண்ட மேக ரோகங்களுக்கெல்லாம் உட்பட வைத்து விடுகிறான். இந்த முதற் குற்றவாளியும் தண்டனைக்குத் தப்பித்துக்கொள்கிறான். இனி இவ்விருவர்பாலும் தோன்றும் மக்களுக்கு இவர்களின் மேகநோய்கள் கர்ப்பத்திலேயே ஊன்றிக்கொள்கின்றன. நிரபராதிகளான இந்த பின் சந்ததிகள் அந்நோய்களைச் சுமந்து அல்லற்பட நேருகின்றன. எதிலும் முதற் குற்றவாளிக்கு விடுதலை ! அன்னோரின் சம்பந்தத்தைப் பெற்றவர்கட்கோ சிக்ஷை !! இது என்ன அநியாயம்?

***

இவை யாவும் விலக்க வசமற்றுப்போயும், விதிவசச் சார்பினதாகவும் நிகழ்ந்தனவாகக் கொள்ளப்படினும், குற்றத்திற்கு மூலாதாரமா யிருந்து ஏவினோர் சிக்ஷைக்காளாகாது தப்பித்துக் கொண்டு

---

ஒரு வேலையைச் செய்யத் தொடங்குகையில், மற்றொரு வேலை எதிரே வந்து நின்று தன்னை முதலிற் செய்யும்படி பலவந்தப்படுத்துகிறது. உடனே அதைச் செய்து, பிறகுதான் முதலில் தொடங்கியதைச் செய்ய நேருகிறது,

விட்டன ரென்பது மட்டும் மறுக்க முடியாத உண்மை. ஒரு அரசாங்க உத்தியோகஸ்தர் நிரபராதியான ஒருவனை மிக்க கேவலமாக அவமதித்து கனத்த ஹிம்ஸைப்படுத்திவிட, அதில் அவர் மூட்டிய ஆத்திரத்தில் ஹிம்ஸை யுற்றோன் தன் பொறுமையின் எல்லையை மீறி அவரை எதிர்த்துக் கையை யோங்கி விடுகிறான். இதன் பின் அவன் எதிர்த்ததே பெருங் குற்றமாகி அவனுக்கு சிக்ஷை விதிக்கப்பட, அவனை அவ்வாறு ஆத்திரமுறச் செய்த உத்தியோகஸ்தரோ தப்பித்துக் கொள்கிறார். உத்தமியான ஒரு பெண்மணியின் கற்பில் ஸம்சயிக்குமாறு ஒரு தூர்த்தன் அவளது கணவனுக்கு ஒரு வித ஆத்திரத்தை மூட்டிவிட, அதிலிருந்து அக்கணவன் அப்பெண் மணியை ஹிம்ஸைக்கும், படுகாயங்கட்கும், கொலைக்கும் உட்படுத்தி விட, அதன்பயனாக கணவன் குற்றவாளியாகிக் கைது செய்யப்படுகிறான். ஆத்திர மூட்டிய தூர்த்தனோ தப்பித்துக் கொள்கிறான். இனி மற்றோரிடத்தில் தன் மனைவியை மிகவும் ஹிம்ஸித்துச் சித்திரவதை செய்ததாகவும், அடித்ததாகவும் ஒரு ஆடவன் குற்றஞ் சாட்டப்பட, அவ்வாறு அவன் செய்யும்விதமாக ஆத்திர மூட்டிய மனைவியோ நிரபராதியாய்த் தப்பித்துக் கொள்கிறாள்; அவள் அவனைச் செய்த கேவலங்களும்,எதிர்ப்புகளும்,சச்சரவுகளும்,தூஷணைகளும், மட்டு மரியாதையின்றி நடந்த நடத்தைகளும் மூடப்பட்டுப் போய், அவை குற்றங்களாகக் கொள்ளப்படாமல், அவற்றால் ஆத்திர மூட்டப் பெற்றவனின் கிரியைகள் மட்டும் பெரும்பாதகச் செயல்களாகக் கருதப்பட்டுப் போகின்றன. தன் தாயின் ஏவுதலால் தன் மனைவியைத் துன்புறுத்தியவன் அகப்பட்டுக் கொள்ள, அவனுக்கு அத்தகைய ஆத்திர மூட்டிய அன்னையோ தப்பித்துக் கொள்கிறாள். சகோதரர்களுக்குள் நேரிடும் சச்சரவுகளுக்கு அவர்களின் மனைவிகளே காரணமாகி ஆத்திர மூட்டுவிக்க, பிறகு நேரிடும் சண்டை காயங்களில் சகோதரர்கள் சிக்கிக்கொள்ள, அவர்களின் மனைவிகளோ திரைக்குள் பதுங்கி மறைந்து விடுகிறார்கள். தன்பாட்டில் தெய்வமே யென்று கிடந்தவனை மற்றொரு திமிர் பிடித்த திம்மராயன் வலிய வம்புக்கு இழுக்க, அதில் குற்றமற்றவனுக்கு உண்டாகிய ஆத்திரத்தில் அத்திம்மராயனை யடித்து வீழ்த்திக் கனத்தகாயங்களுக்குள்ளாக்கி விடுகிறான். இந்தக் காயங்கள் காரணமாகத் திம்மராயன் நிரபராதியாகிக் காயங்களை யுண்டாக்கிய குற்றமற்றவனுக்குச் சிக்ஷை கிடைக்கின்றது. காயங்கள் பட்ட ராயன் முதலில் மூட்டிய ஆத்திரத்தினாலேயே இதுநேர்ந்திருப்பினும், அந்த முதற் பிசகை அவனே செய்திருப்பினும், அது கவனிக்கப்படாமலே போய்விடுகின்

---

அழகுள்ள வேலைக்காரி ஒரு ஆபத்துக்காரி. அவள் வீட்டுக்காரிக்குப் போட்டிக்காரியாகி வீட்டு ஆண்மகனின் இன்பக்காரியாகி விடுவதும் உண்டு. வீட்டு ராணிகளே! கணவனை அவளுடன் தனியாக விடவேண்டாம். எச்சரிக்கை!

றது. ஓர் பரத்தை ஒருவன்மீது அதிக வாஞ்சையுடனும், மற்றவனின் பால் அன்பற்றும் நடந்து ஆத்திர மூட்டிவிட, அதிலிருந்தும் இவ்விருவரும் கை கலக்க நேர்ந்து அடிதடி காயங்களாகி அவதிப்படவும் குற்றவாளிகளாகவும் நேர, இவ்வளவுக்குங் காரணமாக நின்று ஆத்திர மூட்டியவள் தப்பித்துக் கொண்டு விடுகிறாள். இவ்வண்ணமே இவ்வுலக ஸம்பவங்கள் ஒவ்வொன்றினையும் நெடுக ஆராயுமிடத்து முதற் காரணமா யிருந்து ஆத்திர மூட்டியவர்கள் குற்றவாளிகளாகாமற் தப்பித்துக் கொள்ள, உலகமும் அன்னோருக்காகப் பரிந்து பேசவும் வர, ஆத்திர மூட்டப் பெற்றவர்களோ உலக நிந்தைக்கும், வீண் அபவாதங்கட்கும், சிறைக்கும், தூக்குத் தண்டனைக்கும் உரியவர்களாகி அலங்கோலப் படுகின்றனர். இது நாளைக்கும் நடக்கும் செய்தி. தினசரி அநுபவமும் இவ்வண்ணமே தான்.

***

இனி, இவ்வாறு ஆத்திரமூட்டப் பெற்றோர் கொதித்தெழுந்து பிழையின்பாற் படாமலும், வரம்பு மீறி அவகேடுறாமலும் தம்மைத் தற்காத்துக் கொள்ளும் வகை யாங்ஙனம் என்பது வினா? வீட்டினுள்ளும் வெளியிலுமாக நேருகின்ற சச்சரவுகளி னிடையே கலக்கச் சம்பவிக்கின்ற துரதிர்ஷ்டசாலியான ஒருவன், தனக்குப் பிறரால் ஆத்திர மூட்டப் பெற்ற காலையில் அத்தருணம் தன்னில் தானே சிந்தித்துத் தெளிந்துக் கொள்ள வேண்டியதென்ன? (தனக்கு) "ஆத்திர மூட்டியவர்களுக்கு விடுதலை" கிடைத்து, அவர்கள் வெகு பக்குவமாய்த் தப்பித்துக் கொள்ளுகிறார்களென்பதைப் பற்றியே தான். அவர்கள் அங்ஙனம் தப்பித்துக் கொள்வதையும், அவர்கள் மூட்டிய ஆத்திர வசத்தில் சிக்கிய தானே அடாததும் செய்துவிடக்கூடுமென்பதையும், உணர்ந்து கொள்ளுகிறபோது—அந்த சமயத்தில் சட்டெனத் தன் மனத்தை யடக்கி நிறுத்தி, அந்த ஆத்திரக் குற்றத்தின்பாற் படாமல் ஒதுங்கிக் கொள்வதற்கு என்ன வழியென்பதை அவசரத்துடன் யோசித்துப் பார்க்கக் கடவன். அந்த யோசனைகளைச் செய்தலான ஒன்றுக்கு மட்டுமே அவன் கண்டிதமாய் அத்தருணத்தில் தன் மூளையை உபயோகிக்கக் கடவன். ஒரு நிமிஷ யோசனைக்குப் பிறகு சற்று தெளிவு தோன்றி, அதிலிருந்தும் இன்னும் பல நிமிஷங்கள் யோசிப்பதற்குரிய சாந்தமான ஹிருதயமும், அதற்கான சாவகாசமும், அவனுக்குக் கிடைத்து விடும். அதற்கு மேலும் சிலநிமிஷங்கள் யோசிக்க அத்தருணத்தில் அவன் சக்திவந்தனாய் விடுவான். அவ்விதம் சக்திவந்தனாகி ஒரு புதுத்

---

யூநாநி—சித்த—ஆயுர்வேத வைத்தியர்கள் தங்களுக்கே அதிக வியாதி வந்துவிட்டால் ஆங்கில டாக்டர்களிடம் செல்லுகின்றனர். அந்த டாக்டர்களோ தமக்கு எத்துணைப் பிணி வரினும் இந்த நாட்டு வைத்தியர்களிடம் செல்லுவதில்லை. அவசரமான ஆபத்துகளில் ஆங்கில வைத்தியந்தான்.

தீர்மானம் கொள்வதற்கு அத்தருணம் ஒரு புது சக்தியும் அவனுக்குத் துணையாக வந்து உதவிக்கொண்டு, அவனுக்கு திடமான மனத்தையும் புதிய பலத்தையும் உண்டாக்கிக் கொடுத்துவிடும். உடனே அவனுக்கு ஒரு புதிய தெளிவு பிறக்கின்றது; அவனுடைய கண்களில் ஒரு புதிய ஒளி தோன்றுகின்றது; அவன் வதனம் ஒரு கம்பீரமான தன்மையில் நின்று அவனை ஒரு வீரன் போன்றும் வெளிக்குத் தோற்றுவிக்கின்றது. உடனே அவன் ஒரு தனி வீரனாய் விடுகின்றான். ஆத்திர மூட்டியவர்களுக்கு விடுதலையானால், ஆத்திர மூட்டப்பெற்றோர்க்கும் விடுதலை கிடைக்கும்படி இதோ செய்துவிடுகிறேன்—இதோ அதில் வெற்றி பெற்று விடுகிறேன்—என்று வீர உள்ளத்துடனும் உரத்த தொனியுடனும் கூறித் தன் நெஞ்சுக்கும் அதைத் தெரிவிக்கிறான். அந்த சமயம் அவனுடைய நெஞ்சு எவ்வித நிலையிலிருக்கிறது?—அதற்குச் சில நிமிஷங்களுக்கு முன்னர் அந்த நெஞ்சு என்ன நிலையிலிருந்தது? முதலில் அவனுடைய நெஞ்சு ஆத்திர மூட்டப்பெற்றதாய் விட்டது. அந்த ஆத்திர உக்கிரகத்திலே அந்த நெஞ்சுக்குத் திக்கு திசையே தெரியவில்லை! தலை—கால் இன்னின்ன பக்கத்திலிருக்கிற தென்பதுங் கூடத் தெரியவில்லை! அதற்கு அறிவே அந்த சமயம் இல்லை! இன்னதுதான் செய்கிறோமென்பதைக்கூட உணரவியலாத அத்துணைக் கோபாக்கினியில் மூழ்குண்டு அட்டகாசம் செய்ய ஆரம்பித்தது! கொலைகளோ அடிதடிகளோ எதைச் செய்யவும் அது துணிந்து விட்டது! நான் செய்வதே சரி, அதுதான் தக்கது என்பதே அந்த ஆத்திர சமயத்தில் அது தெரிந்துகொண்ட நியாய சாஸ்திரம்! இது நெஞ்சினுடைய முந்திய ஆத்திர மூட்டப் பெற்ற நிலையாகும். பிறகு நேர்ந்ததென்ன? அத்துணைக் கொதிப்புடன் துள்ளியெழுந்த நெஞ்சைத் தன்னதாகக்கொண்ட மனிதன் தன் நெஞ்சுகொண்ட கோரணிகளை ஒருபுறம் இருக்க விட்டுவிட்டு, தான் யோசனா புருஷனாய்—இந்த சமயம் தான் செய்ய வேண்டியதென்ன?——என்பதைப்பற்றி வெகு அவசரமாய் ஆலோசிக்கத் தொடங்கிவிட்டான். நிமிஷங்கள் செல்லச்செல்ல, யோசனைகளும் ஒன்றின்மே லொன்றாகத் தோன்றிக்கொண்டேபோக, திறந்து வைக்கப்பட்ட சோடா புட்டிபோல் நெஞ்சினது ஆத்திரக் காற்றும் நெஞ்சினின்றும் வெளிப்பட்டவாறிருக்க, கடைசியில் யோசனா புருஷன் ஒரு திடமான மனத்தினனாய்த் தான் தடுமாறி விடாதபடி சமாளித்துக்கொண்டு ஒரு உறுதியான பொறுமையினுடைய—சகிப்பினுடைய எல்லைக்கு எட்டிவந்து ஊன்றி நின்று கொண்டுவிட,

---

குழந்தைகளே இரக்க சிந்தையுடன் பிச்சை கேட்போருக்கு இடச் செல்லும்பொழுது அவர்கள் பிரியப்படி விட்டு அந்தத் தர்ம புத்தியை வளர்க்க வேண்டும். அதைத் தடுப்பது கூடாது. தர்ம குணம் நன்றாக வளரட்டும்.

அந்த சமயத்தில் காற்றெல்லாம் வெளியேறிவிட்ட புட்டிக்குள்ளிருக்கும் சோடாத் தண்ணீர் போன்ற நிலையில் அவன் நெஞ்சும் ஆத்திரக் காற்றடங்கித் தணிந்த நிலையினதாகிவிட, ஓ! அந்த சமயத்தில் அந்த மஹா வீரன் வீரகேசரியாய்த் தன் ஐம்புலன்களையும் அடக்கியவனாய், ஆத்திர மூட்டியவர்களின்மீது எவரும் பிரமிக்கும் வாறாக வெற்றிகொண்டு விடுகின்றான்! இதனின்றும் ஆத்திர மூட்டப் பெற்ற அவன் கம்பீர ஸிம்ஹமாய் வெற்றியின் கர்ஜனையோடும் விடுதலை கொண்டுவிடுகின்றான்! ஆத்திர மூட்டியவர்களோ வெட்கிப் போகின்றனர்; அவனுடைய தன்னைத் தானே யடக்கி யாண்ட ஒரு நிதானிப்பினது பராக்கிரமத்தைக் கண்டு நாணித் தலை கவிழ்கின்றனர். ஆத்திர மூட்டப்பெற்றோன் எவ்வித இடர்களுக்கும் பொல்லாங்குகட்கும் தன்னை உட்படுத்திக்கொள்ளாது அந்த சோதனா ஸமுத்திரத்தைத் தாண்டித் தப்பித்துப் போய்விடுகிறான். இது அவன் பெற்ற முதல் வெற்றி! அந்த வெற்றியின் ருசிகரத் தன்மையை அவன் தெரிந்துகொண்டு விட்டபின்பு, மீண்டும் அடுத்தடுத்து எந்தச் சோதனையிலும் அவ்விதமான வெற்றி பெறுவதிலேயே அவன் கண்ணாகிவிடுகிறான்! அவன் வாணாள் முற்றிலும் வெற்றியின் ஓயா முழக்கமே தொனிக்கின்றது! “ஜெய பேரிகை கொட்டடா” என்று ஆநந்தமாய்த் துள்ளுகிறான். அவனை வெல்வார் யார்? அவனை வெல்லும் வல்லுநர் இம்மகிதலத்தில் ஏது? அவனை இடர்க்கடலின்கண் வீழ்த்துவாரும் இனி ஏது? அவன் மீது ஏவவிட்ட எந்த ஆத்திர மூட்டுவிக்கும் பாணமும் அவனைத் தாக்காமல் விலகி, அவனது பாதமலர்களில் சரணடைந்து விடுகின்றது! ஓ! இதுவன்றோ மஹா வெற்றி!!

***

வெற்றி பெறுவதற்கு இன்னொரு சுலப வழியும் உண்டு. நீ பிறரால் ஆத்திர மூட்டப்பெற்ற காலையில், நீ ஆத்திரப் படுவதற்குப் பதிலாக உடனே அடங்கிப் போ. “எப்படி ஐயனே அடக்குவது?—அது மஹா கஷ்டமான சமாளிப்பு ஆயிற்றே” என்பாயாகில், அதற்கும் ஒரு ஜால வித்தை யுண்டு; அதை நன்றாகக் கற்றுக்கொள். அந்த ஜாலவித்தையாவது:—நீ ஆத்திரம் காட்டுவதற்குப் பதிலாகக் கனத்த ஓயாச் சிரிப்பை உன் உள்ளத்திலிருந்து வருவித்துக்கொள். சிரிப்பு வராவிடினும் பலவந்தம் செய்து வரவழைத்துக்கொள். நீ ஆத்திரங் கொள்ளும்படி பேசப்படுகிற ஒவ்வொரு வார்த்தைக்கும் கனத்த சிரிப்பை வெளியில் கொட்டிக்கொண்டிரு. இவ்விதம் வெளிக்குக் கலகலவென்று நகைத்துக் கொண்டே

---

ஜனங்களுடைய அநுதாபத்தை ஸன்மார்க்க நடத்தையால் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாகப் பெறமுடிகிறதோ அதற்கேற்றபடி விருத்தியும் மதிப்பும் அதிகரிக்கும். குடும்பஸ்தனுக்கு ஸன்மார்க்கமே க்ஷேமம்.

உள்ளுக்கு ஆத்திரத்தை யடக்கி ஜீர்ணப்படுத்தி விடுவதற்கான யோசனைகளை நெடுகச் செய்துகொண்டு போ. இவ்விதம் யோசிப்பதற்கு நீ வெளியில் கொட்டிக்கொண்டிருக்கிற அந்தக் கலகலச் சிரிப்பு உனக்கு வேண்டிய சாவகாசத்தையும், நிதானிப்பதற்குப் போதுமான நேரத்தையும் உண்டாக்கிக் கொடுக்கும். முடிவில் நீ உன்னுள் எழுந்த ஆத்திரத்தை சிரிப்புச் சாமர்த்தியத்திலே முழுதும் அடக்கி ஜெயவீரனைய் வெளிக்கு முன்னிலும் அதிகமான சிரிப்பைக் கூடை கூடையாகக் கொண்டுவந்து கொட்டி விடு. அப்போழுது உன் ஆத்திரத்தை நீ வென்றவளுய் விடுவாய். இந்தச் சிரிப்புக்குக் "கோபச் சிரிப்பு" என்று பெயரல்ல; "சாந்தச் சிரிப்பு" என்று பெயர். இந்தச் சிரிப்பைக் காட்டித்தான் பூர்வம் தர்மபுத்திரர் இராஜ சபையில் பாஞ்சாலியை மானபங்கப் படுத்தியபோது ஆத்திரத்தை யெல்லாம் அடக்கியவராய், "தர்மமே ஜெயம்" என்று வெற்றி கொண்டார். இவ்விதம் வெற்றி பெற்றபிறகு மெதுவாக அப்பால் அக்கிரமஸ்தர்கட்குத் தக்க சிக்ஷை கொடுக்கப்பட்டது. இந்த வழியிலும் நீ பிரயத்தனித்து வெற்றி கொள். பெண்மணியே! அறியாமையும் அடமும் காரணமாக உன் கணவன், மாமி, நாத்தி முதலானோர் உனக்கு ஆத்திர மூட்டியபோதிலும், நீ புன்னகையுடனே கூடி நின்று உள்ளுக்கு உன் சித்தத்தை யடக்கி ஆத்திரத்தைத் தணித்து ஸம்பூர்ணமான வெற்றிகொள்ளப் பார். அதுதான் உனக்கு உன் இல்லற வாழ்வில் மங்களம் செய்யும். எதிலுமே நீ தினமும் வெற்றி பெறு.

***

இந்த அபூர்வ வெற்றி எவருக்கும் கிடைக்கக்கூடியது தான். ஆடவர் மகளிர் இருபாலாரும் பெறத்தக்கது தான். உலக வாழ்வில் பிழைபடாதிருத்தற்கும், மனோ சாந்திக்கும் இந்த வெற்றிமலையின் தரிசனம் அத்தியாவசியகரமானது. இந்த வெற்றிமலையின் சிகரத்துக்குப் போகும் படிகள் முதலில் மட்டும் ஒரே உயரமாய் வெகு தூரத்திற்கு மேனோக்கிச் சென்றிருக்கின்றது. இந்தப் பாதைக்கு 'முழங்கால் மடக்கி' என்று பெயர். இந்தப் படிகளில் ஏறுகையில் எத்தகையோருக்கும் முழங்கால் சோர்ந்து போய் வலி எடுத்துக் கொள்ளும். சொல்லற்கரிய ஆயாசமும் பெருமூச்சும் உண்டாகும். இந்த முழங்கால் மடக்கியைத் தாண்டிவிடின், அப்பால் இறங்குவதும் ஏறுவதுமாகவே வெற்றிமலைச் சிகரத்தின் பாதை இருக்குமாதலின் பிறகு சிரமமென்பதே தோன்றுது. அதி சுலபத்திலும், வெகு சீக்கிரத்திலும் வெற்றிமலையின் சிகரத்தை

---

ஒரு தினத்தின் அதிர்ஷ்டமும், ஏமாற்றமும், வேலையும் அன்றையகாலைத் தபால்களில் தெரிந்துவிடுகிறது. படித்தவர்களுக்குப் பத்திரிகையும், வியாபாரிகளுக்குக் காலைத் தபாலுமே காலைப் பலகாரம்போல் முக்கியமானதாகிறது.

எட்டிப் பிடித்துவிடலாம். ஒரு முறை இவ்விதம் ஏறிப் பழக்கப் பட்டுவிட்டவர்களுக்கு அடுத்த தடவையில் ஏறும்போது சிரமம் வெகுவாய்க் குறைந்துவிடும். இவ்வித வெற்றிக்கு முதலில் தெளிந்த அறிவு வேண்டும், துணிவு வேண்டும், திடமான உள்ளம் வேண்டும், உறுதி வேண்டும், சாந்தம் மேலோங்கவேண்டும், நிதானிப்பும் அத்துடன் இணைக்கப்பட வேண்டும்; இத்தனையும் ஒன்று கூடிக்கொண்டதும் அந்த நிமிஷமே ஒரு புதிய சக்தி எதிர்ப்பட்டுக் கொள்ளும். அது ஆத்திர சித்தத்தை அடக்கிவிடும்; அறிவின் ஒளியை — சாந்தத்தின் மலர்ச்சியை — பொறுமையின் பரிமள வாடையை—மேலுக்கு உயர்த்திவிடும். அதுகாலையில் ஆடவரனைவரும் வெற்றி வேந்தராய் விடலாம்; மகளீர் யாவரும் வெற்றி யுற்ற மகாராணிகளாய், எங்கும் புகழ்கொண்ட கல்யாணிகளாய் விடலாம். இவ்வுலகும் இல்லறமும் இனிப்புக்கடலாக மாறிவிடும்.

***

கடைசியாக, ஒரு சிறு உதாரணம் சொல்லிமுடிப்போம்:— எவ்வளவோ செலவிட்டவன் ஒரு வீசை வெல்லத்திற்கு—" அதற்குள் தீர்ந்துவிட்டதா?"—என்று தன் இல்லாளைச் சீறுகின்றான். அவளும் அடக்கமில்லாது சிடுசிடு வெனப்பட்டு—" நானா தின்று விட்டேன்?"—எனக் கோபங் கொதித்துப் பேசி அவனுக்கு ஆத்திர மூட்டி விடுகிறாள். ஆத்திர மூட்டப்பெற்ற இவனோ தன்னை மறந்து அவள்மேல் புலிபோல் பாய்தற்குச் செல்கிறான். அந்த அவிவேக மடந்தையோ அவனது ஆத்திரக் கைகளிற் சிக்கி மொத்துண்டு நசுங்கி ஓலமிடுகிறாள். அண்டை வீட்டுச் சண்டை கண்ணுக்குக் குளிர்ச்சியெனப் பலரும் அங்குவந்து கூடுகின்றனர்; தெருவும் சிரிக்கின்றது; அன்றைய வேளைப் புசிப்பும் தவறித் திண்டாட வைக்கின்றது! நங்கையை நசுக்கிய நாயகனையோ நால்வரும், "நாசகாலகா! உனக்கென்னடா கேடு?" எனத் தூற்றுகின்றனர். ஆத்திர மூட்டிய அணங்கோ நல்லவளாகி விடுகிறாள். அவள் எதிர்த்தது எதுவும் வெளியில் வருவதில்லை. செலவிட்டவனுக்கே நிந்தையும் சேர்கிறது. இவ்வளவுக்கும் ஒரு வீசை வெல்லம் காரணம்; அதன் விலையோ ஐந்தே அணா! "இந்த சோற்பத்திற்கு இவளிடம் என் பேச்சு?"—என்று அந்த ஆடவன் தன்னை யடக்கிக் கொண்டு, ஆத்திர மூட்டிய அவளுடன் வாதிடாது ஒதுங்கிச் சாந்தமாய் விட்டிருப்பானாகில், அன்று அந்த வீடு அமர்க்கள மாகாது. வேளைப் புசிப்பும் காலத்தில் ஆகிவிடும். கடையிலிருந்து வாங்கி

---

மிகப் பிரசித்தி பெற்றவர்கட்குப் பெயர் சுருங்கிவிடுமாம். பாலகங்காதர திலகர் என்பது "திலகர்" என்றானது. புகையிலைச்சுருட்டு என்பது "சுருட்டு" என்றானது. மூக்குப் பொடியும் "பொடி" எனச் சுருங்கியது!

வந்த வெல்லத்திற்குக் காப்பி வைத்துச் சம்பிரமமாய்ச் சாப்பிட்ட விருந்தாளிகள் விருந்து முடிந்து சென்றுவிட, ஆய்விட்ட வெல்லத்திற்காக வீட்டிற்குள் மிச்சமாய் நிற்கிற புருஷனுக்கும் மனைவிக்கும் சண்டை! இந்த ஒரு உதாரணம் போலவேதான் மற்றசங்கதிகளும்! ஆத்திரமூட்டுவதற்குக் காரணமா யிருப்பவைகளும் மிக மிக அல்பமாயுள்ளன. இந்த அல்பத்திலிருந்தேதான் பெரிய சச்சரவு, பெரிய கலகம், பெரியதான ஆத்திர மூட்டப்படுகை—யாவுமாகும். அத தருணத்தில் திடமனதோடு நிதானித்துப் பிழையின்பாற் படாது சகிப்புடன் தன்னையாண்டு அடக்கிவிடும் தன்மையே பெரிய வல்லமையும் பெரிய சாமர்த்தியமுமாகும். "ஆத்திர மூட்டியவர்களுக்கு விடுதலை"யாயின், ஆத்திரமூட்டப்பெற்றவர்கட்கும் விடுதலை யில்லையா? ஓ! உண்டு!! ஆத்திரமூட்டப்பெற்றவர்களும் விடுதலை காணலாம். அதனைக் காணும்வழி அவரவர்தம் மனோதிடத்தைப் பொறுத்தது. மனத்தை யடக்கியாண்டு அதனைத் தன் ஊழியனாக்கி தான் அதன்மீது ஆணை செலுத்தும் அரசனாக உயர்ந்து கொள்ளும் வலுவைப் பொறுத்தது. அந்த வலுவை இந்த நிமிஷமே, இப்பொழுதே நீ பெற்றுக்கொள்ளக் கடவாய். இடுக உன் மன திற்கு உடனே ஒரு கட்டளையை! அக்கட்டளை பின்வருவதே:—

பேயா உழலுஞ் சிறு மனமே! பேணுயென் சொல் இன்று முதல்
நீயா ஒன்றும் நாடாதே, நினது தலைவன் யானே காண்;
தாயாம் சக்தி தாளினிலும், தருமம் எனயான் குறிப்பதிலும்
ஓயாதே நின் றுழைத்திடுதி; உரைத்தேன் அடங்கி உய்யுதியால்.

ஓ! நீயே வீரன்! வீரத்துடனே உன் மனதிற்குக் கட்டளை யிட்டுவிட்டாய்! அவ்விதமே அதை அடக்கிச் செம்மைப் படுத்தக் கடவாய். இனி உனக்கு வெற்றி நிச்சயம்! ஆத்திர மூட்டப் பெறினும் நீ ஆத்திரப்படமாட்டாய்! உனக்கு விடுதலை திண்ணம்! வெற்றி மலையின் சிகரத்தை நீ எட்டிப்பிடித்து விடுவாய்! இனி வெற்றி மேல் வெற்றிதான்! பாரதபுத்திரா! கற்புலக்ஷண உத்தமீ!— முயன்றால் முடியாதது எது? என்உன்னால் முடியாது? முயன்று பார். முயன்று, முயன்று, உன் சித்தத்தை அடக்கி அதை வென்று உறுதியுடன் நின்று "ஜெயபேரிகை கொட்"டுக. வாழ்க. மங்களம்.

---

எவ்வளவோ சாமர்த்தியசாலிகளான ஆடவர்களிற் பலருக்கு சாதத்தை வடிக்கக்கூடத் தெரியவில்லை. அவர்கள் பானையிலுள்ள கொதிக்கும் சாதம் வடிக்கையில் சாதம்—கஞ்சியில் விழுந்து கஞ்சியோ கையிலும் விழுகிறது!

---

தேசத்தின் முன்னேற்றம் முற்போக்கு எப்படியிருக்கிறது? அது தனித் தனிக் கக்ஷிகள் என்கிற நீர்ச்சுழலுக்குள் புகுந்துகொண்டு ஒவ்வொருவரையும் அதற்குள் அமிழ்த்துகிறது. அதற்கேற்பப் பத்திரிகைகளும் தூண்டுகின்றன,

# சிறுமணித்திரள்

(359-ம் பக்கத் தொடர்ச்சி.)

## "எகிப்திதன்" என்னும் ஆங்கில தத்துவஞானி அருளிய பதினாறு பொன் மொழிகள்.

618. ஒன்றையும் மீறி இச்சியாதே. புற விஷயங்களும் நிகழ்ச்சிகளும் உன் கருத்து நிறைவேறுவதற்கு இடையூறுகளை விளைவிக்குமானால் அதற்காக அலறாமல் உன்னைத் திருத்தி மாற்றி வெல்வாய். இழந்த பொருள்களை இழந்து விட்டதாகப் பாவியாதே: அவைகள் ஜகத் பிதாவின் உடைமைகளெனத் தேர்ந்து, அவைகளை அவரிடமே திருப்பி ஒப்பித்து விட்டதாக எண்ணுவாய்.

619. மானபங்கத்தையும் நிந்தை மொழிகளையும் அகௌரவமும் பழிப்புரையுமெனக் கொள்வதி னின்றே சஞ்சலமும் பழி தீர்க்க வேண்டுமென்ற உக்கிரக எண்ணமும் உண்டாகின்றன.

620. உன்னுடைய சத்துரு உன் உள்ளேயே யுளன் என்பதை அறிந்து சதாகாலமும் உள்ளாராய்ச்சி செய்து, கழிப்பன கழித்து, ஏற்பன ஏற்றுத் திருத்துவன திருத்தி, மாற்றுவன மாற்றி உய்வாயாக.

621. வெளிக்கு எவ்வளவு பராக்கிரம ஆடம்பரங்களுடன் தோன்றிய போதிலும், மானுடன் பதரே: ஆதலால், எந்த மனிதனையும் சுயாலோசனை என்பது இல்லாது நம்பித் தொடர்ந்து அலையாதே.

622. இன்னவிடர்கள் இடையூறிடுக்கண்கள் வலி வருத்த மேக்கமாகியவைகள் உன் திறமையைப் பரீக்ஷித்துப் பகிரங்கப்படுத்தவே நின்று நிலவி, உன்னைச் சார்ந்து அலைப்புறுத்துகின்றன என்பதை மனதி லிருத்துவாய்.

623. கடற் பிரயாணத்தை யொத்துள வாணாள்; பாசப் புயல்களால் புறட்டப்படலாம். ஆசைச் சுழல்களிலகப்படலாம், துன்பப் பாறையில் மோதப்படலாம், எனினும் கவலையுறாதே, துடிக்காதே, ஜயமும், தோல்வியும், இறப்பும், பிறப்பும், உயர்வும், தாழ்வும் அவனையே காரணமாகக் கொண்டுள. தளரா மனத்துடன், அயரா வூக்கத்துடன், பதறா வுள்ளத்துடன் தீமைகளைத் தைரியமா யெதிர்த்து அடக்கவும் மாற்றவும் பிரயத்தனிப்பாய். வெற்றியும் தோல்வியும் உன்னைச் சார்ந்தனவல்ல.

624. அஞ்சி ஓடி மூலையிற் பதுங்காதே! உலகை உற்றுப் பார். சீர்மையைக் கவனி. எழிலை உணர். இலக்கணத்தை ஊகி, லக்ஷியத்தை அறி!

625. ஜீவகாலம் குறுகவே, வாணாள் ஒடுங்கவே, கூக்குரலிடாது, நெட்டுயிர்க்காது, இழிய பிரார்த்தனைகளுக்கு உட்படாது, சந்தோஷமாய், நிர்மல மனத்துடன், உட்சாந்தியுடன், —வேஷதாரிகள் நடிப்பு முடிந்தவுடன், மேடையை விட்டுச் செல்வது போல்,—உலகை விட்டு அகல்வாய்.

626. உடைமையினால் உடல்உரங் குன்றுகிறது; உரிமையினால் உளங் குவிகின்றது.

627. பொருள்களல்ல, நிகழ்ச்சிகளல்ல, ஆனால் அவைகளைப் பற்றிய நம்முடைய விசித்திர அபிப்பிராயங்களே நம்முடைய அல்லல்களுக்கு மூலகாரண மாவன.

628. மெய்த் தத்வ ஞானிகளின் குணதிசயங்களென்ன? குண நடத்தைகளிலும், சொல், செயல்களிலும், தூய்மையும் மேன்மையும் பொருந்தி விளங்குதல்; தூஷணை பூஷணைகளால் பாதிக்கப்படாதிருத்தல், உணவு, பானம், பந்தயம், லாபம், நஷ்டம் முதலான சிற்றறிஞரால் போற்றிச் சிலாகிக்கப்படும் அற்பங்களைப் பற்றிப் பேசாதிருத்தல்; மௌனம், அடக்கம் பொறுமை, உண்டி சுருங்கல், சதா காலமும் சத்திய சுந்தர மங்கள விஷயங்களைப்பற்றிய தியானத்தில் தோய்ந்திருத்தல்; வாழ்க்கைக்கு அதி அத்தியாவசியமானவைகளையே கொள்ளல்; பிறருக்கு உண்டாகும் ஜயாபஜயங்களால் உள்ளங் கலங்காதிருத்தல்; வீண் தர்க்கங்களிலும் இழிய சம்பாஷணைகளிலும் பிரவர்த்திக்காம லிருத்தல் என்பனவேயாம்.

629. உனக்கு ஆகாதவைகளில் தலையிடாதே; இடர் நேர்ந்தாலும், அதிசீக்கிரத்தில் அதைவிட்டு நீங்குவாய்.

630. தேகத் தடிப்பையே பிரதானமாகக் கொண்டு மனோ வளர்ச்சியை விடுத்தல் மந்தமாக்களின் விசேஷ குணமாகும்.

631. உன் பெருந் தன்மையைச் செயல்கள் வாயிலாக அறிவுறுத்துவாய். உபந்நியாசங்களும் புத்தகப் படிப்பும் மாத்திரம் ஒருவனுடைய குண வொழுக்கங்களைத் திருத்த வல்லனவல்ல.

632. தேகாரோக்கியம், மனோதிடம், உள்ளத் தூய்மை பரோபகார சிந்தனை ஆகியவைகளே நல் வாழ்க்கையின் லக்ஷிய மாவன.

633. இழிய சிந்தனைச்செயல்களின் ஆட்சிக்குட்பட்ட வாழ்க்கை, கடுவிசை மண்டிப் புரண்டோடும் காட்டாறு போன்றது. அறம் தங்கிய ஆன்மா, தெள்ளிய இனிய வற்றாதவோர் ஊற்றுக்குச் சமமானது.

**கணியூர் P.S.M.E. முஹம்மது**

**யாக்கூபு சாஹிப்,**

சொந்த மனைவியைத் தூற்றுவதெல்லாம் தன்னை அவள் விட்டுப் போகாள் என்ற நினைவால். தன் ஆசை நாயகி எத்துணைப் பிழை செய்யினும் பொறுப்பதேன்? எங்கு தன்னை விட்டு விலகிவிடுவாளோ என்றே. தன்னவளானதும் "அடி" என்கிற பட்டத்தை ஆடவன் அவளுக்குச் சூட்டுகிறான். அதற்கு முன்னரோ வெகு மரியாதையான சொல்லில் அன்பான அழைப்பு. அது ஒருகாலம்! இது ஒரு காலம்!! ஏங்கி என்ன செய்ய?



# பெரியாரின் மொழிகள்



(284-ம் பக்கத் தொடர்ச்சி.)

466. Kindness to the wronged is never. Without its excellent reward,—Holy the human-kind and ever.—Acceptable to God.

JOHN GREENLEAF WHITTER.

அநியாயம் செய்யப் பெற்றவருக்கு அன்பு செய்தல் ஒருக்காலும் உயர்ந்த வெகுமதி யளியாதிராது ; மனித சமூகம் பரிசுத்தமடைய அடைய அதை ஏற்றுக் கொள்ளக் கடவுள் எப்பொழுதும் சித்தமாக இருக்கிறார். —ஜான் கிரீன்லீப் விட்டியர்.

467. Happy art thou, as if every day thou hadst picked up a horse-shoe. LONGFELLOW.

ஒவ்வொரு நாளும் நரி முகத்தில் விழித்ததுபோல நீ சந்தோஷமாயிருக்கிறாய். —லாங்பெல்லோ.

468. Nature gives to every time and season some beauty of its own. DICKENS.

ஒவ்வொரு காலத்திற்கும் ஒவ்வொரு ருதுவிற்கும் இயற்கைத் தேவி தன் அழகிலிருந்து கொஞ்சங் கொடுக்கிறாள். —டிக்கன்ஸ்.

469. Nothing useless is, or low ; Each thing in its place is best. EMERSON.

ஒரு சாமானேனும் வீண்போவது மில்லை, இழிந்ததுமல்ல ; அதனிடத்தில் அதுவே உயர்ந்தது. -எமர்ஸன்.

470. Bring in great logs and let them lie, To make a solid core of heart. Be cheerful.

TENNYSON.

பெரிய பெரிய ஓக் மரக்கட்டைகளைக் கொண்டுவந்து அடுக்கி ஹிருதயத்தைத் திடப்படுத்திக்கொள் ; சந்தோஷமாயிரு. —டென்னிஸன்.

471. Oh yet we trust that somehow good, Will be the final goal of ill, To pangs of nature, since of will, Defects of doubt, and taints of blood. TENNYSON.

துன்பங்களுக்கும், இயற்கையிலேயே உண்டாகும் கஷ்டங்களுக்கும், மனமாறச் செய்யும் பாவங்களுக்கும், சந்தேகத்தால் ஏற்படும் தவறுகளுக்கும், இரத்தக் கறைகளுக்கும் இறுதியாக நன்மையையே சென்றடைவோமென்று, என்றைக்கும் நம்புகிறோம்.

—டென்னிஸன்.

472. There is no substitute for thorough going, ardent, and sincere earnestness. DICKENS.

நேர்மையான, ஆர்வம் மிகுந்த, உண்மையான அக்கரைக்கு (ஊக்கத்

கிணற்றில் ஜலம் எடுக்கும் பக்கெட்டுகளின் அடிப்புறம் கெட்டுவிட்டால் அதை எறிந்துவிடாமல் ஐந்தணா செலவில் அடித்தகடு போட்டுவிட்டால் 12-அணா விலையுள்ள புதிய பக்கெட்டுக்குச் சமமாய் விடும். பழுதுபார்த்தது புதிது

திற்கு)ப் பதிலாகக் கொள்ளப்படும் பொருள் வேறொன்றுமில்லை.

—டிக்கன்ஸ்.

473. Lives of great men all remind us, We can make our lives sublime. LONGFELLOW.

பெரிய மனிதர்களுடைய ஜீவிய சரித்திரங்களெல்லாம் நம் வாழ்வினை யும் அத்துணைப் பெருமை யுடையதா கச் செய்துகொள்ளலா மென்று ஞாபகப்படுத்துகின்றன.

—லாங்பெல்லோ.

474. Love is sunshine, hate is shadow, Life is checkered shade and sunshine; Rule by love. LONGFELLOW.

விருப்போ சூரிய ஒளி, வெறுப் போ நிழல், வாழ்க்கையோ ஒளியும் நிழலும் கலந்தது; அன்பால் ஆளுக.

—லாங்பெல்லோ.

475. As we live and work, we should always be thinking of those who are to come after us. RUSKIN.

நம் வாழ்க்கையிலும், வேலையிலும் எப்பொழுதும், நமக்குப் பின்னும் மனிதர் வசிக்கப் போகிறார்கள் என் பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். —ரஸ்கின்.

476. Who loves not knowledge? Who shall fix; Her pillars? Let her work prevail.

TENNYSON.

அறிவை யார்தான் நேசிப்பதில்லை? அறிவுத் தூண்களை யார் நிலை நிறுத் தப் போகின்றனர்? அறிவின் வேலை என்றும் நிலைத்திருப்பதாக.

—டென்னிஸன்.

477. Heaven suits the back to the burden. What a nice thing it is to think that is should be so. is n't it? DICKENS,

கடவுள் சுமைக்குத் தகுந்தபடி முதுகைச் செய்திருக்கிறார். அதை நினைக்கும்பொழுது எத்துணை அற் புதமா யிருக்கிறது; இல்லையா?

—டிக்கன்ஸ்.

478. Golden visions wave and hover, Golden vapours, waters streaming, Landscapes moving, changing, gleaming. I am like a happy lover Who illumines life with dreaming!

LONGFELLOW.

தங்கமயமான காட்சிகள் கண்முன் தாண்டவமாடுகின்றன; தங்க மய மான ஆகாயம் பரந்திருக்கின்றது; தங்கநிறத்தண்ணீர் ஊற்றெடுத்தோடு கின்றது; நிலக்காட்சி க்ஷணத்திற்கு க்ஷணம் மாறுபடுகிறது; அசைகிறது, ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறது; நான், வாழ்க்கையைக் கனவைக் கொண்டு பிரகாசிக்கச்செய்யும் ஆநந்த மான காதலனைப் போன்றிருக்கி றேன். —லாங்பெல்லோ.

479. There are some people who can be merry and can't be wise, and some who can be wise (or think they can), and can't be merry. DICKENS.

சிலர் எப்பொழுதும் ஆநந்தமா யிருக்கிறார்கள், ஆனால் அறிவாளர்க

---

உங்கள் வீட்டுச் சிறுவர் சிறுமியர்களிடம் "அமிர்த குணபோதினி"யைக் கொடுங்கள். அது வீட்டுப்படிப்பாக இருக்குமானால் பாடசாலைப்படிப்பில் நன்கு தேறலாம். ஒரு ரூபாய் செலவில் மக்களை எவ்வளவோ உயர்த்தலாம்.

ளாயிருக்க முடிவதில்லே; சிலர் (அவர்கள் எண்ணிக்கொள்வதுபோல்) அறிவாளிகளாயிருக்க முடிகின்றது, ஆயின் ஆநந்தமாயிருக்க முடிவதில்லே. —டிக்கன்ஸ்.

480. The greatest of all feelings is an utter forgetfulness of self. RUSKIN.

எல்லா உணர்ச்சிகளிலும் மிக்க உயர்ந்தது தன்னே அறவே மறத்தலாம். —ரஸ்கின்.

481. Know that we must trust and hope, and neither doubt ourselves, nor doubt the good in one another. DICKENS.

எப்பொழுதும் விசுவாஸத்துடனும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டுமென்பதையும், நம்மை நாமே சந்தேகிக்கவோ அன்றி அயலாருடைய நேர்மையைச் சந்தேகிக்கவோ கூடாதென்பதையும் அறிந்துகொள். —டிக்கன்ஸ்.

482. I recommend you to take care of the minutes, for the hours will take care of themselves.

LORD CHESTERFIELD.

நிமிஷங்களேச் செலவிடுவதைப் பற்றிக் கவலே யெடுத்துக்கொள்; அங்ஙனமாயின் மணி நேரம் தன்னேப்பற்றித் தானே கவலே யெடுத்துக்கொள்ளும்.—லார்டு செஸ்டர்பீல்ட்.

K. C. பிச்சுமணி ஐயர்.

## அந்தக் குற்றம் எவர் மீது?

அவ்வளவு தூரம் வந்தவர்கள் அருகிலிருக்கும் நெருங்கிய நேசர்கள் பந்துக்களின் வீட்டுக்குச் செல்லாமலே திரும்பிவிடுவதேன்? அவர்களே இவர்கள் மனம் நெருங்கிக் கலவாதிருக்கலாம். அவர்கள் தங்களே எவ்வளவோ பிரியமாய் நடத்தியிருந்தும் தங்களின் வஞ்சகத் தன்மையைக் காட்டியவர்களா யிருக்கலாம். தூர ஒதுங்கி ஒட்டாமலும் எட்டிப்போயிருக்கலாம். அதனுல் அவர்கள் வீட்டுக்குச் செல்லவும், சென்று தங்கிப் புசித்துவரவும் நாணிப் பின்வாங்குவதா யிருக்கலாம். ஆகவே, குற்றமுள்ள நெஞ்சு குறுகுறு வென்று நோவெடுப்பதில் மௌனமாகத் திரும்பி விடுகிறுர்கள் போலும்! கடைசியில் குற்றம் எவர்கள் மீது? இவர்கள் மீதே. இவ்விதம் பேதமனது படைப்பானேன்?

ஒரு ஸ்திரீயினிடத்து இச்சைமிகுந்து அதற்காகப் பல புருடர்கள் போரிட்டு மடிந்ததாக சரித்திரங்கள் உண்டே யன்றி, ஒரு ஆடவனின் நிமித்தம் பல ஸ்திரீகள் போரிட்டு இறந்ததாகக் கதைகளிலும் இல்லே. சகிப்புக் குணத்தில் பெண்கள் பெரியவராவர். மூட ஆடவர்க்கு அவசர புத்தியே கதி.




# ஏழு வாலிப யோகிகள்.

(332-ம் பக்கத் தொடர்ச்சி.)

தன்னை ஒரு பைத்தியக்காரனாக நினைத்தார்கள் என்று அறிந்த மால்கஸ் மண்டியிட்டு அதிகாரிகளைப் பணிந்து, கிளியன் மலையிலுள்ள குகைக்குத் தன்னுடன்கூட அவர்கள் வருவார்களாகில் தன் நண்பர்களைக் காண்பிப்பதாகச் சொன்னான். அப்பொழுது, தான் கூறினவற்றின் உண்மை விளங்குமென்றும் பகர்ந்தான். டெஷியஸ் சக்ரவர்த்தியின் கடுமையான கட்டளைக்குப் பயந்து தாங்கள் ஓடினதாகவும், அது நிகழ்ந்தது அன்றைக்கு மூந்தின நாளே என்றும் உரைத்தான்.

***

பிறகு, செயின்ட் மார்ட்டின் (St. Martin) என்ற குருவும், ஆன்டி பேட்டர் (Antipeter) என்ற ஸர்வாதிகாரியும் (Consul) இவ்விந்தையான விஷயத்தின் உண்மையை அறிய வேண்டுமென்ற எண்ணத்துடன் இவனுடன் சென்றனர். ஜனங்களில் அநேகர் இவர்களைப் பின்தொடர்ந்தனர். டெஷியஸ் சக்ரவர்த்தி மால்கஸ் முதலிய எழுவரும் மறைந்திருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து அவ்விடத்தில் தானே அவர்கள் பசிப்பிணியால் மரணமுறும்படிக்கு அக்குகையின் வாயிலை அடைத்துவிடக் கட்டளையிட்டிருந்தானென்பதை ஜனங்கள் படித்தும் கேட்டும் இருந்தார்கள். ஆனால், இவை நிகழ்ந்து முந்நூற்று எழுபத்திரண்டு வருடங்களாகின்றன. இவ்வாறிருக்க, இப்பொழுது மால்கஸ் என்ற பெயருடன் ஒருவன் தோன்றித் தன் நண்பர்களை அப்பொழுதுதான் விட்டுப் பிரிந்ததாகக் கூறுவது விந்தையாயிருந்தது.

***

நிற்க, கிறிஸ்துவக் கோயில் மத சம்பந்தமாகச் சில தர்க்கங்கள் ஏற்பட்டிருந்தன. புதைக்கப்பட்ட உடம்பு மறுபடியும் உயிர் பெற்றெழுதலான "மாமிச உத்தனம்" (Resurrection) என்னும் கொள்கையில் பல கிறிஸ்தவர்கள் நம்பிக்கையின்றி இருந்தனர். இதனால் அச்சமயம்

---

சொந்த புருஷனைத் திருப்திபடுத்தாத சொகுசுக்காரி கள்ளப் புருஷனின் இஷ்டப்படி நடக்கிறாள். ஆனால் அந்த ரகசியக் கணவனுக்கோ அவள் குழந்தை அழுவது அதன் தந்தையன்றாதலின் நெஞ்சில் சுருக்கென்று தைப்பதில்லை, அதை ஒரு வேடிக்கையாய்க் கேலிசெய்துவிட்டு அலக்ஷியமாயிருக்கிறான்.

ஆண்டுவந்த கிறிஸ்தவ சக்ரவர்த்தி மிகவும் நொந்தவராய் உபவாசமிருந்து தேவதா பக்தியில் மனம் ஈடுபட்டவராய்க் காலம் கழித்து வந்தார். இக்கொள்கையில் எல்லாக் கிறிஸ்தவர்களும் நம்பிக்கை வைக்கும்வரை சக்ரவர்த்தியின் மனம் ஸந்தோஷமடையாதென்பது மார்டின் குருவுக்குத் தெரியும். இவ்வாலிபனைப் பின்தொடர்ந்து போம்பொழுது தியாடோசியஸ் (Theodosius) சக்ரவர்த்தியின் முறையைக் கேட்டுக் கிறிஸ்தவர்களின் அவநம்பிக்கையை நீக்குதற்பொருட்டே பகவான் இவ்வாலிபனை அனுப்பியுள்ளார் போலும் என்று குரு கருதினர்.

***

ஜனங்கள் இதைப்பற்றிப் பலவாறு பேசுவாராயினர். கிலியன் மலையிலுள்ள குகை பெரிய கல்லொன்றல் அநேக வருடங்களாக மூடப்பட்டிருந்ததென்பதை அவர்கள் அறிவார்கள். யெபீஸஸ் நகரவாசிகளிலொருவன் இம் மலையினடிவாரத்தில் ஒரு குதிரை லாயம் கட்டுவதாகத் தீர்மானித்திருந்தான். ஆனல், இவனல் அனுப்பப்பட்ட ஆட்கள் குகையின் வாயிலை மூடியிருந்த கல்லைப் பிசகாய் உடைத்தனர். டெஷியஸ் சக்ரவர்த்தியின் காலத்தில் மூடப்பட்ட அக்குகையின் வாயில் இப்போது இந்த ஆட்களால் திறந்து விடப்படுவதாயிற்று.

***

நிற்க, மலையை அணுகியவுடன் மால்கஸ் எல்லோருக்கும் முன் குகையில் நுழையவே அங்கு சூழ்ந்திருந்த இருட்டால் அவனுடைய உருவமே மற்றவர்களுக்குத் தெரியவில்லை. அச்சமயம் மூந்நூற்று எழுபத்திரண்டு வருடங்களுக்கு முன்பு கிறிஸ்தவர்களால் இரகசியமாய் அக்குகையின் வாயிற்படியில் பொதிந்து வைக்கப்பட்டிருந்த இரண்டு வெள்ளிச் சாசனங்களைக் குரு கண்டு அவைகளின் மீதிடப்பட்டிருந்த முத்திரைகளையுடைத்து அவற்றில் எழுதப்பட்டிருந்தவற்றை ஆவலுடன் தன்னைச் சுற்றி நிற்கும் ஜனங்களுக்குக் கேட்கும்படி உரத்து வாசித்தனர். அதில் டெஸியஸ் சக்ரவர்த்தியின் கொடுமையான உத்தரவும், மத வைராக்கியங் கொண்ட எழு வாலிபர்கள் உயிருடன் அக்குகையில் மூடப்பட்டதுமான விஷயங்கள் வரையப்பட்டிருந்தன.

***

குரு குகையில் நுழையவே ஜனங்களெல்லோரும் உட்புகுந்தனர். அந்த அன்றுதான் அலர்ந்த ரோஜாப்பூவென வாடா முகத்தினராய் "நீங்கா நித்திரை செய்த" எழு வாலிபர்களைக் கண்ணுற்றனர்.

***

இவ்விளைஞர்களுக்கு முந்நூறு வருடங்களும் மற்றும் ஓர் இரவு போல் இருந்தன. அவர்கள் நித்திரையிலிருந்தபொழுது நாட்களும் மாதங்களும், வருஷங்களும் நிமிஷமாய்ப் பறந்தன. யெபீஸஸ் ஒரு கிறிஸ்துவ நகரமாக மாறிற்று. கிறிஸ்தவச் சக்ரவர்த்தி அதனை ஆண்டுவந்தார்.

***

---

கடல்:—வாழிய கடலே! வாழிய கடலே!!
உலகினுக் கியைந்த வொருதுணைக் கருவியே!
அலகிலா வுருவ மடைந்தோய்! நிலத்தினை
ஆக்கி யன்புடன் காக்கும் பாவாய்!

இவர்களைக் கண்ணுற்ற குரு பெரிதும் சந்துஷ்டி யடைந்தவராய் தீயாடோசியஸ் சக்ரவர்த்திக்கு வரும்படி சொல்லியனுப்பி அவர் வந்தபின் இவர்களைக் காண்பித்துக் "கடவுளின் திருவிளையாடலையும் அவரின் அற்புதச் செயல்களையும் பாருங்கள்" என்று கூறினார். இதனைக் கண்ட சக்ரவர்த்தி மன மிக மகிழ்ந்து ஸந்தோஷ ஸாகரத்தில் மூழ்கினவராய் அவ்வெழுவரையும் ஆலிங்கனம் செய்துகொண்டு ஆநந்த நீர் பெருக, "உங்களைப் பார்ப்பதானது பகவான் "லேஸிரஸாய்" (Lazarus) எழுந்த காட்சியைக் காண்பது போலிருக்கிறது" என்று கூறித் தன் குடி ஜனங்களில் பலர் மறுபடியும் உயிர்பெற்று எழுதலான கோள்கையில் நம்பிக்கை யில்லாதவர்களுக்கு நம்பிக்கை யுண்டாகுமாறு புரிந்த கடவுளின் காருண்யத்தைப் புகழ்ந்து அவரைப் பலவாறு துதித்தார்.

***

இவ்வெழு வாலிபர்களும் தங்கள் மனம் முற்றும் கடவுள்பால் ஈடுபடுத்தினார்களாகக் கீழே உட்கார்ந்து மண்டியிட்டுத் தங்கள் சிரங்களைத் தரையிற் படும்படி குனிந்து அவ்வண்ணமே யிருந்து தங்கள் ஆன்மாக்களைக்கிறிஸ்துவினிடத்து ஐக்கியம் செய்தனர்.

***

இக்காட்சியினைக் கண்ட சக்ரவர்த்தி அவர்களை மறுபடியும் கட்டிக்கொண்டு முத்தமிட்டுக் கண்ணீர் பெருக இறைவனை வணங்கினார். பின் அவர்களொவ்வொருவருக்கும் வெள்ளி பொன்னாலாய விலையுயர்ந்த கல்லறைகளைக் கட்டும்படிக்கு ஆக்ஞாபித்தான். ஆனால், அன்றிரவில் அவ்வெழுவரும் சக்ரவர்த்தியின் கனவில் தோன்றித் தாங்கள் முன்னிருந்த குகையிலேயே அவர்களின் சரீரங்களை வைத்துவிடுமாறு வேண்டினார்களாகச் சக்ரவர்த்தியும் அவ்விதமே மறுநாள் அச்சரீரங்களை அக்குகையிலேயே இட்டு அதன் வாயிலை அடைத்து நவரத்தினங்களால் அதனை இழைத்துப் பலவிதமாக அலங்கரித்து முத்திரைகளையும் வைத்தான். இவ்வாறாக, அந் நீங்கா நித்திரை செய்தோர் மறுமுறையும் ஊழிக் காலத்தில் (Great Resurrection) எழுவதன்பொருட்டு இன்னும் நித்திரைசெய்துகொண்டேயிருக்கின்றனர். வருடந்தோறும் ஜூன் மாதம் 27-ம் தேதி மேற்படி ஏழு வாலிபர்களுடைய சரித்திரத்தை நினைத்துக் கொண்டாடும் வருஷாந்தர உத்ஸவம் அங்கே இன்னும் நடந்துவருகின்றதாம். கடவுளின் மகிமை காணுவதருமை. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

(முற்றிற்று.)

ச. முனிஸ்வாமி பிள்ளை.
"சாஸ்வதிசபை"த் தலைவர், டர்பன்.

***

[கடவுளால் ஆசீர்வதிக்கப்பெற்ற இவ்வெழுவரின் மகாத்மியம் இருந்தவாறென்னே! இன்னோர், தாம் இத்

---

அண்ணன், தம்பி, மைத்துனன், மருமகன் போன்ற நெருங்கிய உறவினர்கள் இல்லாதோர் தமது தொழில் காரியங்களுக்கு வேலையாட்களை வைத்துக்கொண்டு அவர்களின் சகாயத்தில் தங்களின் வேலைகளை நடத்திக் காலம் தள்ளிக் கொள்கிறார்கள். வேலைக்காரர்களே அவர்களுக்கு உறவினர் போல!

துணைக் காலம் நீடிய துயில் கொண்டிருந்ததை உணர்ந்த பொழுதிலேனும் தம்மைக் குறித்துப் பெருமை பாராட்டினரோ? இல்லை. இறைவனின் அருளைவியந்து பின்னும் அதிகமான பக்குவமெய்திப் பரமனைத் துதித்துப் போற்றினரன்றி கர்வ சிந்தை மேவிடப் பெற்றாரில்லை. **அகங்காரத்துவம் சமான்ய மாந்தர்கட்கே உண்டாவது.** அன்னோர்தாம் தம்மைப் புண்ணிய புருஷர்களெனத் தம் காலுக்குத் தாமே முத்தமிட்டுக்கொள்வர். உணவு வேண்டி நகர்நோக்கி நடந்த மால்கஸ் தன்னைச் சூழ்ந்துள்ள ஞானப் பிரபையை யுணரானாய்ச் சாமான்ய நிலையில் இருந்தனனே யன்றித் தன்னைக் கொண்டாடிக்கொள்ளும் சிந்தையில் நினைந்தானில்லை. தனது நெடுங்காலத் துயிலின் விளக்கம் உணர்ந்த காலையிலும் அவன் நிலை மிக்க வணக்கத்துடன் தலை தாழ்ந்ததாகவே காணப்பட்டது. உண்மை கண்ட பெரியாரும் ஞானிகளும் தம்மைக் குறித்த பெருமைகளை அறியாராய்ப் பேதையர் போன்றே தோற்ற நிற்பர். இவ்வாறாய மகான்கள் — தமக்கு ஈவதும் இடுவதும் கடவுளையே சேருமென்று கூறிப் பொருள்பறிப்பாரின் — வழியிற் போகார். தீர்க்கதரிசிகளாகவும் ஞானாசாரியர்களாகவும்" மட்டுமே நிலவி உபதேச ரத்ந மாலைகளை வழங்கி உலக மாந்தரை உய்விக்க வைத்து மறைவர். இவ்வெழு வாலிபர்களும் இறைவன் தங்கட்கு நியமித்த மதப் பிரசாரத் திருப்பணிகளை ஆமளவும் செய்து முடித்து இறுதியில் தடைக் கல்லில் மோதுண்டனராயினும், அவ்வளவில் அது நின்றுவிடவில்லை. அவர்கட்குப் பிறகு, அவர்கள் துயில் விழித்தெழுவதற்கு முன்பு சென்ற முன்னூற்றெழுபத்திரண்டு வருடங்களிலும் கடவுள் மற்றவரைக்கொண்டு நிறைவேற்றுவிப்பதானார். அதனை மீண்டும் அந்த எழுவரும் சிந்தை புளகிக்கக் காணுமாறு செய்யவே அன்னோரைத் துயிலினின்றும் விழித்துக்கொள்ளப் புரிந்தார்போலும். பின் எழுவரும் பூவுலகுக்கு வந்த வேலை முடிவுற்றதாதலின் அன்னோரும் பரமனைச் சேர்ந்தனர் போலும். இறைவனது அருட்பிரகாசத்தின் திறத்தினைவிளக்கிக்காட்ட வல்லதான உருக்கமுள்ள இச்சரிதை எக்காலத்தினும் நினைவு கூறத்தக்கதாகும். — ப-ர்.]

பலநாளும் புசித்தோர் தான் துரோக நினைவுடன் வேறுபடுவானன்றி, ஒன்றிரண்டு தடவை எப்போதோ வந்து உண்டு சென்றவர் ஒரு நாளும் அன்பு மாறார் — தூர அகலார் — குற்றங்காணார் — கோட் சொல்லி யாகார். பின்னுக்கு உதவுபவரென்று எவ்வளவோ செலவிட்டு நடத்த, அங்குதான் பகையும் விலகுதலுமாகிச் செலவிட்டவன் ஏமாறவும் வயிறு எரிந்து திகைக்கவும் வைக்கிறது. அவன் ஐயோ வென்று கதறுகிறான்.

---

பத்திரிகை படிப்பதில் ஒரு ருசி தோன்றிவிட்டால் பிறகு கல்வி தானே பெருகிவிடும். பத்திரிகையின் வாசிப்பு இல்லாத வீடு மழைமுகங்காணாத காடு.




# கடவுள்.

எங்கணும் விளங்குறு மிறைவனே ! எண்குணந்
தங்கிய வொருபெருந் தலைவனே ! ஒப்புயர்

வில்லா தோங்கிய வீரனே! என்றும்
எல்லாந் தானா யிலகிடும் பொருளே !

இன்பமோ டெழிலு மன்புட னருளும்
நண்ணிய நாதனே ! புண்ணிய முதலே !

உருவுடை யாயோ ? உருவிலியேயோ?
உருவரு விலாயோ ! உடையையோ ? உணர்கிலேன்;

என்னண மெளியே னின்னை யண்முகோ ?
உன்னுமா றறியேன் ; உணருமா றறியேன்;

பன்னுமா றறியேன் ; பாடுமோ றறியேன்;
வணங்குமா றறியேன் ; வாழ்த்துமா றறியேன்.

இணங்கி யென்னையு மெடுத்துக்
காத்தல் வேண்டும் பூத்தநின் னருளே.

பரிதிமாற் கலைஞர்.

---

வீட்டு வேலைக்காரியிடம் வெள்ளிக்கிண்ணியைக் கழுவக் கொடுப்போர் ஜாக்கிரதையாய் வாங்கி வைக்காவிடில் மாயமாகிவிடும். நான் பார்க்கவில்லையே, இங்கே தானே கழுவி வைத்தேன் என்று சொல்லி விடுவாள் வேலைக்காரி. பிறகு அது போனது போனதே. சாமான்கள் காணமற்போவதும் கடின வியாதிகள் தோன்றிக்கொண்டு கதறவைப்பதும் அடுத்த ஒரு நிமிஷ மாத்திரத்திலாகும்.

# எங்கள் சக்கரவர்த்தி!

எங்கள் வீட்டில் ஓர் செல்வன் இருக்கிறன் ;
என்னெனன்பேன் அவன் ஈந்திடும் இன்பத்தை!
பொங்கு தண்மதி போன்ற அவன் முகம்
புன்சிரிப்பு தவழ்ந்து பொலியுமால் ;
தங்கக் கட்டியினும் அவன் சீரியன்
சலிப்பிலாத உற்சாக முடையவன் ;
மங்கலம் என்பர் நன்மனை மாட்சியை
மற்றதன் கலன் நன்மகப்பேறன்றே! (க)

ஒளி பொருந்தி பரந்துந லன்பொடு
ஊக்கமும் உயர் தூய்மையும் தண்மையும்
களிநடஞ் செய்யு மன்னவன் கண்களைக்
கண்டவர் மனத்திற் களி கொள்வரால் ;
தெளிவி லாதன வேலுமவன் பகர்
தீஞ்சுவை மழலை மொழி தன்னிலே
மிளிரும் இன்பம் குழலிலும் யாழிலும்
வேறு பற்பல கருவியிலும் உண்டோ? (உ)

பலபல அவன் செய் விளையாட்டுகள்
பார்க்கின்றோரைப் பரவசம் செய்வன ;
நிலமதி லவன் ஓடிவருகையில்
நேர் நின்(று) ஆர்வம் பெருகத் தழுவியே
குலவிக் கொஞ்சி யான் கொள்ளுமோர் இன்பத்தைக்
கூற லெவ்விதம்? அன்னவன் செய்யுமோர்
கலகலத்த சிரிப்பினைக் கேட்பவர்
கவலை யாவும் மறந்து சிரிப்பரே. (ங)

மாசிலாத கண்ணாடி அனைய நன்
மனத்தினன் கர(வு) அற்ற அவனேனை
ஏசினாலும் பெருகிடும் இன்பமே ;
இனிய வாயிற்செஞ் சிறுவிரல் வைத்தவன்

---

ஒரு பலம் எடைக்குப் படிக்கல்லைப் போடாமல் தேய்ந்து எடையிற் குறைந்த ஜார்ஜ்—எட்வர்ட் உருவங்கள் பதித்த காலணாக்களைப்போட்டு நிறுத்துவது பெரிய மோசடி! கனத்திருக்கிற விக்டோரியா உருவுள்ள காலணாக்களைக் கடைக்காரர்கள் போடுவதேயில்லை. இது ஒரு வியாபார தந்திரம்!

பேசுவான் சினந்தே சில வார்த்தைகள்
பேரிதும் யான் மெய்ப் பரவசனகவே,
நேசியாதவர் யாவர்? அவன்றனை
நெருங்கிக் கொஞ்சி மடியில் அமரவே! (சு)

செங்கை கொட்டிச் சிரித்துக் குதித்திடும்
செல்வன் எம்மவன் கந்தனே? கண்ணனே?
நங்கைமீர்! நம்பிகாள்! உங்கள் மக்களை
நன்கு பேணுமின் தெய்வத்தை ஒக்கவே,
துங்க மாதவர் குழவியை ஒப்பராம்
துன்ப மோட்டுமின் சேய்களைப் பேணியே,
இங்கு வந்தொரு முத்தம் அளித்தனன்
யாரவன்? எங்கள் "சக்கரவர்த்தி"யே. (ரு)

—ஆரியூர். வ. பதுமநாப பிள்ளை.

## மூன்று ஆசிரியர்களின் மொழி.

"என்னவோ எழுத நினைத்தேன். நினைத்தது மறந்து விட்டது. உடனுக்குடன் எழுதி வைத்துக்கொள்ளாத கருத்துகள் கடலில் மூழ்கிய கப்பல் போலாம்" என்கிறார் ஒரு ஆசிரியர். அதிக வேலையிருக்கையில் இரவெல்லாம் விழித்து எழுதக்கூடிய சக்தியைத் தந்துதவும் பரமாத்மா வின் கருணையை என்னென்பதோ என்கிறார் மற்றோர் ஆசிரி யர். தாமே எல்லா வேலைகளையும் செய்துகொண்டு உழைக் கும் பிரசித்த நாவல்களின் ஆசிரியரொருவர்—"நான் சோம் பேரி யென்பது தங்கட்குத் தெரியுமே; மற்றவை யெல்லாம் வீண் சாக்குப்போக்குகளாகவே எல்லோருடனும் சேர்ந்து கொண்டு நானும் சொல்லுகிறேன்" என்கிறார். எத்தனையோ சுறுசுறுப்பாகச் செய்தும் பாக்கிக் கிடப்பதால் தம்மைச் சோம்பேரி என்று இவர் தூற்றிக்கொள்கிறார் போலும்!

எவளோ ஒருத்தி தனக்கு "மனைவி" என்று வந்துவிட்டால் அவளு டைய ஆயுள் வரைக்கும் உடை, நகை, உணவு தரவேண்டிய கஷ்டத்துடன், அவள் போடும் குட்டிகளுக்கும் வேறே 'சப்ளை' செய்யவேண்டி வருகிறது. இது ஒரு தீராத் தொல்லையாய்ப் படாதபடி அவள் ஊட்டுகிற அந்த சிற்றின் பமும், மனைவி மக்கள் என்கிற பாசமும் மனிதனை மயக்கி விடுகிறதாக்கும்!



# ஹாஸ்ய சஞ்சீவினி



**உபாத்தியாயர்:**—சூரியன் பெரிதா? அல்லது நம் இந்தியா பெரிதா?

**மாணவன்:**—இந்தியாவே பெரிது.

**உபாத்தியாயர்:**—எப்படி சொல்?

**மாணவன்:**—முழுச் சூரியனையும் ஒரே தரத்தில் பார்க்கமுடியும். இந்தியாவையோ நின்ற இடத்திலிருந்தபடியே முற்றிலும் பார்க்கமுடியாது.

வே. கிருஷ்ணபிள்ளை.

2. மழை பெய்து பாதையில் சேறு தங்கி வழிச் செல்வோருக்கு அது ஒரு பெரிய உபாதையாயிருக்கையில், ஓர் சிறுவன் அந்தச் சேற்றின்மீது மணலைத் தூவிக்கொண்டிருந்தான். அதைக்கண்ட ஒரு கிழவர், அப்பா, இதுதான் புண்ணியம், என்றார். அதற்கு அச்சிறுவன், 'ஐயா, இது புண்ணியமல்ல, இது மணல்' என்று பதில் கூறினான்.

3. ஒரு ஸ்திரீ தோட்டத்தின் வழியாய்ப் போய்க் கொண்டிருக்கையில் அங்கிருந்த மயில்களையும் தோட்டக்காரனையும் கண்டு, இந்த மயில்கள் தங்களுடைய வாலிலுள்ள சிறகுகளை எப்போதாவது கீழே போடுகின்றனவாவென்று சேட்டாள். தோட்டக்காரன் நாலா பக்கத்திலும் திரும்பிப் பார்த்தபின் மெதுவான குரலுடன் "அம்மா! இந்த மயில்கள் அதிக பிடிவாதமானவைகள்; அவைகளின் எதிரே துட்டை எறிந்தாலொழிய இறகுகளைப் பிடுங்கவும் விடுவதில்லை" என்றான்.

4. **தந்தை:**—என்னுடைய நிலைமை உனக்கு வராதிருக்கவே இவ்வளவு பாடுபட்டேன்.

**குமாரன்:**—அது என்ன நிலைமை?

**தந்தை:**—நீ இப்போதுள்ள செல்வ நிலைமையிலேயே நானும் இருந்தேன். என் தந்தைக்குப் பிறகு சகல செல்வங்களையும் துஷ்ட சகவாசத்தால் இழந்து ஏழையாகி மலேயா நாட்டில் கூலி வேலை செய்து என் சாமர்த்தியத்தால் மறுபடியும் தனவானானேன்.

**குமாரன்:**—உங்களின் சொந்த அநுபவத்தை உங்களுக்குப் பிறகு நானும் கண்டறிய விரும்புகிறேன்.

5. டிராம் வண்டியில் ஏறிய இரண்டு ஸ்திரீகள் இடமின்மையால் நின்று கொண்டிருக்கையில் வண்டியின் வேகத்தில் சமாளித்துக்கொள்ள தன்னுடைய சிநேகியின் கையென்று ஒரு மனிதனுடைய கையைப் பிடித்துக் கொண்டாள். பிறகு சற்று நேரமானதும் திரும்பிப் பார்த்துத் தான் ஒரு மனிதனின் கையைப் பற்றியிருப்பதைக் கண்டு அச்சத்துடன் நாணி தன் கையை உதறினாள். அம்மனிதன் சிரித்தபடியே, அம்மா, பாதகமில்லை, அந்த கை வேண்டாவிட்டால் இந்தக் கையைப் பிடித்துக் கொள்ளுங்கள் என்று தன் மற்றொரு கையை நீட்டினான்.

6. ஒரு நாயைச் சிறுவனொருவன் அடிக்க, அது அவனைத் துரத்திச் செல்ல, அதைக் கண்ட சிறுவனின்

---

எந்த இடத்தில் ஒரு புதிய ரயில்வே ஸ்டேஷன் ஏற்படுகிறதென்று கவனித்துக்கொண்டிருந்து, உடனே அங்கு ஒரு காபி ஹோட்டல் கூரையையோ கட்டடத்தையோ கட்டிவிடுவதில் சிலர் சாமர்த்தியசாலிகளாயிருக்கிறார்கள்!

தாய் அந்நாயை நையப் புடைக்கவே நாய் ஒரு மூலையில் பதுங்கிக் கொண்டது. அதைப் பார்த்துச் சிறுவன்—"ஐயோ பாவம், நீஏன் வீணாக அடிபட்டாய்? உன் கோபத்தை அம்மாளிடம் காட்டலாமா? அம்மாளுக்கு உன்னைவிட அதிக கோபம் வருவது வழக்கமாயிற்றே. என் தகப்பனாரே என் அம்மா முன் அஞ்சி நடுங்கையில் நீ எம்மாத்திரம்?" என்றான்.

7. ஒரு நாவிதன் பாதி க்ஷவரத்தில் தன் கத்தி எப்படி யிருக்கிறதென்று க்ஷவரம் செய்து கொள்கிறவனைக் கேட்க, அதற்கவன், கட்டிக் கொண்ட பிறகே ஒருத்தியின் குணம் தெரிவது போல் உன்னிடம் தலையைக் கொடுத்த பிறகே உன் கத்தி ஓர் மொக்கைக் கத்தி யென்று தெரிகிறது; நான் உன்னிடம் படும்பாடு போதும், சீக்கிரம் செய் என்றான்.

8. ஓர் உபாத்தியாயர் பிள்ளைகளை நோக்கி, பிள்ளைகளே—**கு**—என்னும் எழுத்தானது எந்தப் பதத்தின் கடைசியில் வந்தாலும் நான்காம் வேற்றுமையின் உருபு என்பதை அறியுங்கள்; உதாரணம்:—இராமனுக்கு, ஊருக்கு— எனக் கூறிவிட்டு, ஓர் பையனைச் சுட்டிக்காட்டி வேறு இரண்டு உதாரணங்கள் கூறு என்றார். அம்மூடப்பையன் உடனே **புறாகு**, **குடகு**, **முறுக்கு**, **இங்கு**, **அங்கு** என்று பதிலளித்தான்.

9. வினா:—உன் வயது என்ன?

விடை:—நான் சரியாக எப்படிக் கூறுவது? ஒவ்வொரு நிமிஷமும் என் வயது அதிகமாகிக் கொண்டு போகுதே.

10. தன் குமாரன் பணத்தை வீண்செலவு செய்கிறானென்று அவன் அனுப்பும்படி எழுதிய பல கடிதங்களுக்கும் பதில் தாராமல் இருந்தார். பையன் தனக்குப் பணம் வாராமையால் "பணம் எங்கே?" என்று ஒரு அவசரத் தந்தி யடித்தான். "பணம் என்னிடம் வீண் செலவாகாமல் பத்திரமா யிருக்கிறது" என்று தந்தை யிடமிருந்து பதில் தந்தி வந்தது.

11. கோணல் மாணலாயிருந்த ஒரு முறுக்கை எடுத்துக் காண்பித்து அது எந்த எழுத்தைப் போலிருக்கிறதென்று ஒரு தந்தை தன் குமாரனைக் கேட்க, அதற்கு அவன் உங்களுடைய கோணலான இங்கிலீஷ் கையெழுத்துபோலிருக்கிறதென்றான்.

12. "என் மனைவி மூக்காயி" என்று ஒருவர் இன்னொருவரிடம் சொல்லத் தொடங்க, அதற்குள் மற்றொருவர் "என் மனைவி கருப்பாயியிடம் அந்த மூக்காயி" என்று ஆரம்பிக்க, அப்போது பக்கத்திலிருந்தவர் "அந்த மூக்காயி கருப்பாயியிடம் சண்டை போடுகையில் என் மனைவி இருளாயி மத்தியஸ்தம் செய்ய வந்தாள்" என்று சங்கதியைச் சொல்லத் தொடங்க, அதைக் கேட்டவர் இதேதப்பா எல்லாம் "ஆயி" மயமா யிருக்கிறதே என்று அதிசயப்பட்டாராம்!

வீட்டுப் பெண்கள் எதிர்—பக்கத்து வீட்டுப் பெண்களுடன் சண்டை யிட்டுக் கொண்டால் அதிலிருந்து பேச்சும், பெண்கள்கூட்டம் போடுவதும்நின்று இரவல் தருவதும் ஒழியுமாம்!



# பிரபஞ்ச நவீனங்கள்

1. ஏழாவது எட்வர்ட் அரசரை நமக்குத் தெரியும். மூன்றாவது எட்வர்ட் அரசர் இங்கிலாந்தை யாண்ட நாளில் 14-பவுன்தான் ஐகோர்ட் ஜட்ஜிகளுக்கு பிரதிமாதத்திலும் சம்பளமாகத் தரப்பட்டதாம்.

2. பிரேஜில் நாட்டில் முந்திரி மரத்தில் காயம் உண்டாக்கி அதினின்றும் ஒழுகும் சிவப்பு பிசினியைக் கொண்டு புஸ்தகங்களைப் பயிண்டு செய்கிறார்கள். இந்தப் பிசின் புஸ்தகத்தைப் பூச்சிகள் அரிக்க நெருங்க விடுவதில்லையாம். கரையான் அரிக்காதபடி மரங்களுக்கும் புஸ்தகங்களுக்கும் இப்பிசினியை வார்னிஸோடு கலந்து பூசப்படுகிறது. மரத்து ரசம் துணிமேல் குறிகள் போட சேராங்கொட்டைக்குப் பதில் அங்கே உதவுகிறது. பட்டையானது தோலைப் பதப்படுத்த உதவுகிறது. மரத்தின் கட்டை விவசாயக் கருவிகளுக்கும், அடுப்புக்கரி செய்யவும் உதவுகிறது. படகுகள் செய்ய இது பக்குவப்பட்டிருக்கிறது.

3. பதின்மூன்றாவது இலக்கம் மேல்நாட்டில் ஒரு அசுபமாய்க் கருதப்பட்டு வெறுக்கப்படுகிறது. பாரீஸ் நகரில் கதவுகளில் குறிப்பிட்டுள்ள எண் 12-க்குப் பிறகு $12\frac{1}{2}$ என்று போடப்பட்டு அதற்கு அடுத்த கதவில் 14-என்று இருக்குமாம். 13-என்பதே கிடையாதாம். காரணம், இயேசுநாதரை சிக்ஷை செய்வதற்குப் பிடித்த காலத்தில் 12-விருந்தினருடன் அவரும் ஒன்றாகி ஆக 13-பேராகக் காணப்பட்டதால் அந்த இலக்கத்தைக் கிறிஸ்துவ மரபினர் வெறுக்கின்றனராம். ஹிந்துக்களில் சிலர் 18-என்ற இலக்கத்தை விரும்புவதில்லை. காரணம் 18-நாள் நடந்த பாரதப்போரின் முடிவு ஒரு பயனுமில்லாமற் போனதேயாம்.

4. சீனா தேசத்தார் விசேஷமாய் அரிசியை முக்கிய உணவாக உபயோகப்படுத்தினாலும், அவர்கள் எலும்பு பருத்து வலுவு அதிகப்பட்டிருக்கும் காரணம் என்ன? அவர்கள் உமியைக் கொளுத்திக் கிடைக்கும் சாம்பலை உலைக்கு இடும் ஜலத்தில் நனையவைத்து வடிகட்டி அந்த ஜலத்தில் சாதத்தைப் பொங்குவார்கள். கஞ்சி வடிகட்டுவதில்லை. உமிச்சாம்பலில் ‘பிராகாசத’மும், சாம்பல் காரமும் அதிகம் இருப்பதால் தேகத்து எலும்பை வலுக்கச்செய்கிறது. உமியிலும் தவிட்டிலும் இச்சத்துள்ள பதார்த்தங்கள் அதிகமிருப்பதால் தவிட்டைத் தின்னும் பசுவுக்குப் பால் அதிகம் சுரக்கிறது.

5. ஒரு கடியாரத்தில் தனித்தனியாய் 175 விதமான ஒட்டுகள் சேர்க்கப்பட்டுள்ளதாம்.

6. இந்தியாவிலுள்ளது போலவே இங்கிலாந்திலும் சில குருட்டு நம்பிக்கைகள் இல்லாமலில்லை. வெள்ளிக்கிழமை யன்று வைத்தியரை யழைத்து மருந்துண்டால் குணமாகாதாம்.

---

கையில் காசு இல்லாததினாலேயே ஒரு வீட்டின் புசிப்பு நின்றுவிடுவதில்லை. கடன் வாங்கியாயினும் அன்றைப் பொழுது போய்விடுகிறது. ஆனால் அந்த அவசரத்துக்குக் கடன் தந்தோருக்குத் திருப்பித் தருவோர் சிலரே.

எணியின் கீழ்செல்வது துரதிர்ஷ்டமாம். மேஜையின்மீது மூன்று மெழுகுவர்த்தி யிருந்தால் அது துரதிர்ஷ்டத்திற்கு அடையாளமாம். உப்பைக் கீழே கொட்டக்கூடாதாம். வெள்ளிக்கிழமை யன்று நகத்தைக் கத்தரித்துக்கொள்ளல் பெரிய ஆபத்தாம். வீட்டிற்குள்ளேயே குடையை விரிப்பது துரதிர்ஷ்டத்திற்கு அறிகுறியாம்.

7. ஸர் ஆம் ராத் ரைட் என்பவர் செய்த ஆராய்ச்சிகளி லிருந்து கண்ணீரில் 'வைஸோஸைம்' என்ற ஒரு சத்து இருப்பதாகவும், அது வியாதிப் புழுக்களைக் கொல்லும் சக்தியைக் கொண்ட தென்றும், இந்த சத்து தேகத்தின் எல்லாப் பாகங்களிலும் ஓரளவு இருக்கிறதாலும், கண்ணீரில்தான் இச்சத்து மிக வலிமை பொருந்தியதா யிருக்கிற தென்றும் கண்டுபிடிக்கப்பட்டுளது. ஒரு சிறுதுளிக் கண்ணீரைக் கோடிக் கணக்கான வியாதிப் புழுக்கள் நிறைந்திருந்த குழாயொன்றில் தெளித்தவுடன் அப்புழுக்களெல்லாம் கரைந்து அழிந்து போயினவாம். ஆயினும் கண்ணீரை எப்படிச் சேகரிப்பதென்பது தெரியவில்லை. நினைத்தபோதெல்லாம் கண்ணீர் விடுவது இயலும் காரியமா ?

8. காபிக்கொட்டையின் ஆதி உற்பத்தி ஸ்தலம் பெர்ஷியா தேசமாம். பிறகுதான் அரேபியாவாம். அதை ஒரு பானமாக உபயோகிக்க ஆரம்பித்தது 16-ம் நூற்றாண்டிலாம்.

9. லண்டன் நகரில் ஒரு ரோட்டிலாவது இரு பக்கத்திலும் மனிதர்கள் போகிறதற்கென்று அமைக்கப்பட்ட பக்கவழி யில்லாமல் இராதாம்.

10. லண்டன் நகரில் வீடுகளினுடையவும், ஷாப்புகளினுடையவும் அநேக பாகம் பூமிக்குள் கட்டப்பட்டிருக்கிறது. ஒருவன் தன் வாழ்நாள் முழுவதும் லண்டனைப்பற்றி எவ்வளவு புஸ்தகங்கள் வாசித்தாலும், அதை நேரே போய்ப் பார்த்தாலொழிய அது இன்ன விதமாய் இருக்கிறதென்று அறியமாட்டானென்பது நிச்சயமாம்.

## கலகக் கொள்ளி !

சும்மா இருக்கிற வீட்டில் எதிர்வீட்டுப் பெண் ஒரு புதுச் சேலையைக் கொண்டுவந்து காண்பித்து வாங்கத் தூண்டுகிறாள். அவ்வீட்டிலுள்ள பெண் அதை உடனே வாங்க வேண்டுமென்கிறாள். கணவன் தன் கையில் பணமில்லையென்கிறான். "எனக்கென்றால் பணம் இருக்காதுதான்" என்று கணவனைச் சீறுகிறாள். கணவன் எரிச்சலுடன் அவளை நோக்குகிறான். இதிலிருந்து ஒரு கலகமும் மூண்டு விடுகிறது. சமாதானமாக இருக்கும் வீட்டில் இவ்விதம் எதிர் வீட்டிலுள்ள பெண்கள் கலகக் கொள்ளியை வைத்து விடுகிறார்கள். இது வலிய வரும் சனியன்! பெரிய தொல்லை !!

# ரகர—றகர பேதங்கள்.

(255-ம் பக்கத் தொடர்ச்சி.)

133. மாரன்—மன்மதன், மாறன்—பாண்டியன். (133) மாரன் வந்தெதிர்ப்பினும் கொற்கையாளியாகிய மாறன் அஞ்சுவனோ?

134. மிருது—மென்மை, மிறுது—சமுத்திரப் பச்சை. (134) உலகத்தில் மிறுதுவைப்போல் மிருதுவான பொருள் ஒன்றுமில்லை.

135. முருக்கல்—முருக்குதல், முறுக்கல்—திருகல். (135) கயிற்றுக்கு அதிக முருக்கேறினதால் அது என் கையினின்று முறுக்கிக் கொண்டு போயிற்று.

136. மெய்யுரை—சத்திய வாசகம், மெய்யுறை—கவசம். (136) தருமர் மெய்யுரையைத் தன் மெய்யுறைக்குள்ளணிந்து யுத்தம் பண்ணினார்.

137. வரித்தல்—பூசுதல், வறித்தல்—வறட்டல். (137) சட்டியில் நெய்யை வரித்ததினுள் கடலையைப் போட்டு வறித்தல் மணமாயிருக்கும்.

138. வருத்தல்—துன்புறுத்தல், வறுத்தல்—வறட்டல். (138) கடலை வறுத்தலைப்போல் என்னை வருத்தாதே.

139. வரை—மலை, வறை—துவட்டற் கறி. (139) வரையில் வறைத்தது என் பங்குக் கெங்கே.

140. வர்க்கம்—வகுப்பு, வற்சம்—குதிரைக் கயிறு. (140) அந்தந்த வர்க்கத்தின் வற்கத்தை அதது ஸ்தானத்தில் வை.

141. விரகு—அழித்தல், உணர்வு சமர்த்து. விறகு—சமிதை. (141) இருப்பு வண்டிக்கு விறகு வேண்டி வரகறிந்த வோர் விடலையைக் கூவி உன் விறகு தோன்ற விறகு வெட்டி வந்து வண்டித் தீயில் விரகுறச் செய் என்றான்.

142. விரல்—அங்குலி, விறல்—வெற்றி. (142) வீரன் விரல் கொண்டு பிடித்த வாளால் விறல் பெறுவான்.

(ரகர—றகரம் முற்றிற்று.)

புஸ்தகத்தை இரவல்பெறுவோர் அதன் விலையிற் பாதியைக்கொடுத்துப் பெறுவதே நியாயம். ஏனெனில் இரண்டு ரூபாயுள்ள புஸ்தகம் இரவல் பெறுவோரால் அழுக்கடைந்து நசுங்கி கிழிந்து, பாதி விலைகூடப் பெறாதபடி பாழ்படுகிறது. ஆதலின் அந்த நஷ்டத்தை முந்தியே செலுத்தி விட்டு இரவல் கேட்பதே முறை.

ஒரு புஸ்தகத்திலுள்ள விஷயங்களை அறிவதற்கு அதைப் பணம் கொடுத்தே பெறவேண்டியிருக்கிறது. இரவலாக அப்புஸ்தகத்தைப் பெறுவோரோ இலவசத்தில் நக்கிவிட்டுப் போய்விடுகிறார்கள்! இது விவாகச் செலவில்லாமல் ஒரு பெண்ணிடம் ஆநந்தமாகச் சுகித்து விட்டு வெகு தந்திரமாய் மறைவதுபோலிருக்கிறது!

# குழந்தைகள் பக்கம்

## நான்கு நாய்க் குட்டிகள்.

இராமனின் வீட்டிற்குப் பக்கத்தில் ஒரு தோட்டம் உண்டு. அந்தத் தோட்டத்தில் ஒரு நாய் நான்கு குட்டிகளுடன் படுத்துக் கொண்டு இருந்தது. அந்த நாய்க்கு ஒரு பிடி சோறு போடுகிறவர்கள் இல்லை. நாய்க்குட்டிகளும் பசியால் வாடி மெலிந்து கிடந்தன. இராமன் இந்த நாய்க்குட்டிகளைத் தோட்டத்தில் கண்டான். அவற்றின் பசியைப் பார்த்து, உடனே சாதம் கொண்டு வந்து போட்டான். நாயும், நாய்க் குட்டிகளும் ஆவலோடு தின்றன.

2. தினமும் இராமன் தவறாமல் சோறு போடுவான். அவைகளும் சுகமாக இருந்தன. ஒரு நாள் இராமன் தன் தாதாவைப் பார்க்க ஊருக்குப் போனான். போனவன் ஆறு நாட்கள் வரையில் அங்கேயே தங்கி விட்டான். அப்போதும் நாய்க்குட்டிகளை மறக்கவில்லை.

3. இராமன் ஊருக்குப் போன பிறகு நாய்க்குட்டிகளை யாரும் கவனிக்கவில்லை எந்த வீட்டிற்குப் போனாலும் துரத்தினார்கள். அவைகளுக்குச் சோறும் கிடைக்கவில்லை. நாய் என்ன செய்யும்? அதன் பெரிய வயிற்றுக்கே சோறு



அகப்படாது, அது குட்டிகளுக்கு எங்கிருந்து சோறு போடும்? மூன்று குட்டிகளும் பசி பொறுக்காமல்

எங்கோ ஓடிப்போய் விட்டன. கடைசி குட்டிக்கு எழுந் திருக்கவே பலமில்லை. அதன் தாயான நாய் அதைச் சுற்றிக்-கொண்டே கவலையாய்க் கிடந்தது. ஏழையின் கவலையை யார் கவனிப்பார்கள் ? ஏழையின் பட்டினியும் பாடும் யாருக்குத் தெரியும் ?

4. கடைசியில், பட்டினியால் வாடி அந்த சின்ன நாய்க்குட்டி இறந்து போயிற்று. அதன் தாய் அதைப் பார்த்து அழுது கொண்டே இருந்தது. அப்போது இராமன்ஊரிலிருந்து வந்தான். வந்ததும் தோட்டத்திற் குப் போனான். நாய்க்குட்டி செத்துக் கிடப்பதைப் பார்த்து மிகவும் வருத்தப்பட்டான். "இத்தனை பெரிய வீடுகள் இருக்கின்றனவே! எந்த வீட்டாராவது நாய்க்குட்டி களுக்கு இவ்வளவு சோறு போடக்கூடாதா? போட்டால் குறைந்து போகுமா? ஐயோ ! பட்டினி போட்டுக் கொன் றார்களே ! இந்தப் பாவம் விடுமா?" என்று துக்கத்தோ டும் கண்ணீர் விட்டான். அதை நான்கு பேர் வேடிக்கை பார்த்தார்கள். வேடிக்கை பார்க்கிறவர்கள் உண்டே தவிர, வேண்டியதைச் செய்கிற மனிதர்கள் இல்லை.

5. நாய்க்குட்டிகள் மட்டும் இப்படிக் கஷ்டப்பட வில்லை; எவ்வளவோ பேர் கவனிக்க மனிதர்கள் இருந் தும், கவனிக்கப் படாமல் கஷ்டப்படுகிறார்கள். ஏழைக ளைத் தான் முக்கியமாய் கவனிக்க வேண்டும். அவர் களுக்கு நம்மால் ஆன உதவி செய்ய வேண்டும். "அம்மா ! பிச்சை போடம்மா!" என்று எவராவது கேட் டால், பிடி அரிசி யாவது போட்டு அனுப்ப வேண்டும். ஏழைகளிடம் அன்பாய் இருந்தால் அதைப் பார்த்துக் கடவுள் சந்தோஷப் படுவார். தர்மம் செய்வது வீண் போகாது. தர்மம் தலை காக்கும். உன்னால் ஆன உத வியை யாருக்கும் செய். அது உனக்கு நல்லது செய்யும்.

---

எவ்வளவு பெரிய பெண்ணாயினும் கணவனாரின் நினைப்புக்குள்ளும் கைக் குள்ளும் சிறு பெண்ணாகவே காணப்படுகிறாள். தாதாவுக்குப் பாட்டியார் அவருக்கு அடங்கிய சிறு பெண்தானே! அவ்வளவு பெரிய அம்மையை அந்தத் தாதா என்னடி—வாடி என்றுதானே அழைக்கிறார்.

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

விகடப்பிரதாபன்

REGISTERED TRADE MARK

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

# மதப்பேயின் போராட்டம்!



இந்தவிகடப்பிறவிக்கு சும்மா இருக்க மனம் தாளுகிறதேயில்லை. எப்படியோ வாய்திறந்து கொள்ளுகிறது! அதற்கேற்றாற்போல ஒவ்வொரு விஷயமும் என் கண்ணெதிரில் மாட்டிக் கொள்ளுகிறது! காதுகளிலும் அடிபட்டு விடுகிறது! அப்பாலும் சும்மா இருக்க முடிகிறதா? மதத்தின் உண்மையான தத்துவங்களை மறந்துவிட்டு அதை ஒரு சடங்காகவும் ஆசாரமாகவும் கொண்டு விட்டு, அதற்காக முட்டிக்கொண்டும் முணுமுணுத்துக் கொண்டும் மோதிக்கொண்டு மோசம் போகிற சங்கதியில்தான் நேசம் வைத்து உலகம் கலகம் செய்கிறது! அந்த மதத்திலிருந்தால் ஆண்டவன் பதம் கிடைத்து விடும்; இந்த மதத்திலிருந்தால் இகபரசாதகம் உண்டாய்விடும் என்று தொண்டையைக் கிழித்துக் கொள்ளுகிறார்களே தவிர அண்டையிற் சென்று பார்ப்பதில்லை. பக்குவம் முற்றிக்கொள்ளுமுன்னாலேயே கர்வம் முதிர்ந்து போய் விடுகிறது! உண்மையானதொரு மனோ பக்குவத்தையே எல்லா மதங்களும் விரும்ப, அந்த முக்கிய சங்கதியைச் சாதனைப் படுத்துவது கஷ்டமாச்சுதே யென்று அதைக் கீழே அமுக்கி விட்டு, ஆடம்பர ஆவேச ஆரவாரங்களை மட்டும் மேலுக்கு இழுத்துக் கொண்டு மேளம் கொட்டப் புறப்பட்டு விடுகிறார்கள். கடைசியில் இது நல்ல தனத்தை விட்டு பேய்த்தனத்தில் மாட்டிக் கொண்டுவிட, அந்தக் கூத்துகளின் ஆட்டபாட்டமே இப்போது எங்கெங்கும் காண்கின்றது!

பேய்களிலெல்லாம் பெரிய பேய் பொல்லாத கர்வம் பிடித்த, கெட்டுப் போன மதப்பேயைப்போல, விகடனாகிய நான் என் ஜென்மத்திலும் வேறொரு பேயைப் பார்த்ததேயில்லை! இந்த மதப்பேயை என் கோணத்தடியால் எத்தனை முறையடித்துப் புத்தி பண்ணினாலும் ஒழிந்தேனா சனியன் என்று இன்னமும் போராடிக்கொண்டே தான் இருக்கிறது! இந்தப் பேயானது ஒவ்வொருவரையும் ஆட்டாத ஆட்டமில்லை! படுத்தாத பாடுமில்லை. குபேர சம்பத்துள்ளவனைக்

---

உன் பெட்டியில் என்னென்ன எங்கெங்கே இருக்கிறதென்று பிறர் அறிந்துகொள்ளும்படி செய்யாதே. உன் பெட்டியைத் திறக்கையில் எவரையும் அருகில் வைத்துக்கொள்ளாதே. அது ஆபத்து. இரவல் தரவும் வரும்.

கோமணாண்டி யாக்குகிறதும் இந்தப் பேய்தான்! சோம்பேறி ராமன்களைச் சோறுபோட்டு வளர்க்கிறதும் இந்தப் பேய்தான்! பெண்டாட்டி பிள்ளைகளை யெல்லாம் விட்டுப் பித்தனாய்த் திரியவைக்கிறதும் இந்தப் பேய்தான்! பொன்னான மேனிகளைப் புழுதிபடிய வைக்கிறதும் இந்தப் பேய்தான்! மொட்டை யடித்துக் காவி யுடுக்க வைப்பதும் இந்தப் பேய்! பக்தர்களென்றும், பாதிரிகளென்றும், பண்டாரங்களென்றும் பலரைத் தயாராக்குகிறதும் இந்தப் பேய்தான்! தாடி ஜடை வளர்த்துக் காடி வேஷமாக்குகிறதும் இந்தப் பேய்தான்! நாணமுள்ள மனிதர்களையும் நடுத்தெருவில் தப்பை கொட்டித் தாளம்போட்டுக் குரங்காட்டம் ஆடச் செய்வதும் இந்தப் பேய்தான்! ஒரு ஊராருக்குள்ளாகவே பகை, பாவம், வன்மை, கக்ஷி ஜாதிபேதம், சாப்பாட்டு பேதம், அடிதடி, உயிர்வதை, கொள்ளை, கூச்சல்—இவை முதலியவைகளை உண்டாக்கிக் கொண்டிருக்கிறதும் இந்தப் பேய்தான்! யோக்கியரை அயோக்கியராகவும், படித்தவர்களை முட்டாள்களாகவும், மானஸ்தர்களை ஈனஸ்தர்களாகவும், பெரிய மனிதர்களை விளையாட்டுப் பையன்களாகவும், நாகரீகமுள்ளவர்களைக் காக்கன் போக்கன்களாகவும் மாற்றி இழிவு படுத்துகிறதும் இந்தப் பேய்தான்! ஒரு நாள் வேஷத்துக்கு மீசையைச் சிறைத்துக்கொள்பவன் போல ஒருநாள் திருவிழாவுக்கு ஊர்ப்பட்டபணத்தை ஊதி சாம்பலாகச் செய்வதும் இந்தப் பேய்தான்! அன்றைக்கு மாத்திரம் உயிர் போனாலும் தெரியாத அவ்வளவு ஆவேசத்தைக் கிளப்புகிறதும் இந்தப் பேய்தான்! கோர்ட்டுக் கச்சேரியை ஊட்டி வளர்க்கிறதும் இந்தப் பேய்தான்! கல்விச் சண்டை, எழுத்துச் சண்டை, பத்திரிகைச் சண்டை, வாய்ச் சண்டை, உதாசீனப் பேச்சுச் சண்டை, ரோந்தை வார்த்தைச் சண்டை, கைச்சண்டை, தடி சண்டை, கத்திவெட்டு சண்டை, கடைசியாக உயிரை முடிக்கிற சண்டை வரையில் ரோஷத்தை உண்டாக்கி வருகிறதும் இந்தப் பேய் தான்!

***

இடையூறுக் கிடமாகிய அஞ்ஞானத்தை நீக்கிப் பேரின்பந் தருவதாகிய மெய்ஞ்ஞானத்தை நேராய் விளக்கத்தக்க மேன்மை தங்கிய வேதவிதிகளைக் கடந்து, அதற்கு முழுவதும் விரோதமாக உடன் கட்டை யேறுதல்,—தீப்பாய்தல்,—நரபலி யிடுதல்,—காளி-துருக்கை-பிடாரி முதலாகிய தேவதைகளுக்குச் சிறப்புகள் செய்யப்படுகிற காலத்தில் அநேக எருமைக் கடாக்கள் ஆடுகள் கோழிகளைக் கொல்லுவிப்பதும்,—மதுபானங்கள் செய்கிறது மல்லாமல் காமவிகாரக் கொச்சைப் பாட்டுகள் பாடி நிருவாணக் கூத்தாடுதல்,—சத்தி பூசையில் மதுமாமிசத்தோடு பூசைசெய்து ஸ்திரீயை ஆடையின்றி நிற்கச்செய்து அபிஷேகம் தீபாராதனை முதலாகிய சோடச உபசாரத்தோடு பூசை செய்தல்,—மசானத்தில் கபாலத்தில் கள்ளை நிரப்பிக் குடித்துக் கூத்தாடுதல்,—சிலரால் செய்யப்படும் திருவாராதனையில் மச்சிய மாமிசங்களுண்டு, மத்திய பானமும் செய்து, முத்திரையைத் தரித்து மகா பாதகங்களைப் போக்குமென்று

---

கையில் பணமில்லாமல் திண்டாடிக் கெஞ்சிக் கடனுக்குக் கடையில் அரிசி வாங்கிவந்து வீட்டுக்காரன் போட, அவன் மனைவியோ அதில் பாதியை எதிர்வீட்டு அம்மாளுக்குக் கடன் கொடுத்துவிடுகிறாள். இது பெண்களுக்குள் நடக்கிற ரகசிய வியாபாரம்! ஒருவர் கஷ்டம் மற்றவர் அறிவதில்லை

ஆரவாரித்தல்,—கங்கைக்கு ஒரு குழந்தையைக் கொடுப்பதாகச் செய்து கொள்ளப்பட்ட பிரார்த்தனைப் பிரகாரம் தாயானவள் பின்பு பெற்ற குழந்தையைக் குளிப்பாட்டி மஞ்சள் பூசி வஸ்திரத்தால் அலங்கரித்து அதைக் கங்கை யினிடத்திற்குக் கொண்டுபோய் ஆழத்தில் விட்டு விடுதல்,—ஒருவன் இறந்தால் அவனுடைய வருஷாப்தீகத்தில் இறந்தவனுடைய இஷ்ட லாபங்களை யெல்லாம் நிறைவேற்றுகிற நிமித்தம் குருமார்கட்கு மச்சிய மாமிசம் மத்திய பானம் பண்ணுவித்தல்,—ரவிகலு பூஜை செய்வித்தல்,—இத்தனை புண்ணிய புருஷரோடு சங்கமஞ் செய்கிறதாக ஸ்திரீகள் பிரார்த்தனை செய்து கொள்ளல்,—ஒருத்தியைப் பசுவியாக்கப் பிரார்த்தித்துக் கொள்ளுதல், —(பசுவியென்றால் ஒரு தேவதைக்கு ஒரு சேங்கன்றை பொலி எருதாகப் பிரார்த்தனை செய்து விடுவதுபோல் ஒரு பெண் குழந்தையை ஒரு பிடாரி கோயிலுக்கு வேசியாகப் பாவித்து விட்டு விடுகிறது.),—உச்சிச் செடலாடுதல்,—பக்கச் செடலாடுதல்,—பாதி பிராணனிருக்கச்சே தானே கங்கையில் விழுந்து இறந்து போதல், —முதலியவைக ளெல்லாம் மதப்பேய் செய்கிற காரியங்கள் தான்!

***

இன்னும் வடகலை தென்கலைச் சண்டையில், பிராமணர்களுக்கு மட்டுமே போராட்டமாய், பிராமணரல்லாதார்க்குள் அந்தச் சச்சரவு இல்லாதிருப்பதேன்? வடகலை நாமமிட்டுள்ள கோயிலானால் வடகலையாரான அர்ச்சகர் முதலானோருக்குக் காணிக்கைகள் மூலமாய் கனத்தலாபம்வரும்; இவ்விதமே தென்கலைக் கோயிலானால் தென்கலை நாமமிட்ட அர்ச்சகர் போன்றோர்க்கு தக்ஷணை முதலியவற்றால் நல்ல வரும்படி யிருக்கிறது. ஒரு கலையுள்ள கோயில் மற்றொரு கலையாக மாற்றப்பட்டால் அதுவரை சுரண்டிவந்த கலையாருக்கு அந்த லாபம் போய் விடுவதில் அவர்கள் ஆத்திரம் மீறி ஹைகோர்ட்டு வரை வியாச்சிய மாடுகிறார்கள். பிராமணரல்லாதார்க்கு எந்த வரும்படியும் சுண்டல் தோசையும் இல்லாததால் அவர்கள் இந்த விவகாரங்களிற் புகாமல் தகப்பன் பாட்டன் எந்தக் கலை நாமம் இட்டனரோ அவ்வளவில் நின்று தெய்வத்தைத் துதித்த மட்டில் ஒதுங்கிக் கொள்ளுகிறார்கள். இவ்விதமாக மதப்பேய் பணத்தாசை கொண்ட பேயாகவும் மாறிக்கொள்ளுகிறது! பரிசுத்தமான கோயிலையே தனது வரும்படிக்கு இடமான வியாபார ஸ்தலமாகவும் ஆக்கிவிடுகிறதும் இந்தப் பேய் செய்கிற வேலை தான்!

கோயில்கள் கட்டிக்
கூறுகெட்ட வேசையை
வாயினிலாட வைத்துப்—பூரணமீ
வாய் பார்த்தல் முத்தியாமோ?

***

இனி தெய்வத்தைத் தியானிக்கும் விதமோ அது வெகு வெகு வேடிக்கை! காலில் செருப்பிட்ட படியே போகிற போக்கில் கோவிலையோ சாமியையோ ஒருகும்பிடுபோட்டுக்கொண்டு நடக்கிறது! தான் செய்கிற அக்கிரமத்திற் கெல்லாம் கடவுளைத் துணையாகக் கூப்பிடுகிறது! தான் இச்சித்த அயலானது பெண்

தகப்பனாரின் சிநேகிதர்கள் வேறு. அவரது குமாரனின் சிநேகிதர்கள் வேறு. தாயாரின் சிநேகைகள் வேறு. குமார்த்தியின் சிநேகிதிகள் வேறு. கைக்குழந்தைக்கு வேண்டிய நேச நேசிகளோ அதுவும் வேறுதான்!

தனக்குக் கிடைத்தால் தேங்காய் உடைப்பதாகப் பிரார்த்தனை செய்து கொள்வது! ஒரு வீட்டிலிருந்து ஒன்றைஅப்பிக் கொண்டுபோகையில் தன் தெய்வம் எவரிடமும் அகப்படாமல் தன்னைக் காப்பாற்றுமென்று எண்ணிக் கொள்ளுகிறது!—அந்நேரத்தில் ஒரு பிரார்த்தனையும் கூடச் செய்து கொள்கிறது! தன் மோசபுத்திகளுக் கெல்லாம் கடவுளைத் தன் பங்காயிருக்கும்படி கோரிக்கொள்வது! தன் எதிராளி சீக்கிரத்தில் பச்சைப் பல்லாக்கு ஏறிவிடச் செய்ய வேண்டுமென்று வேண்டிக் கொள்வது! தான் செய்தகொலை வெளிவராதிருக்கக் கோரிக் கொள்வது! கடவுளின் பெயரைச் சொல்லிக் கொண்டு ஜனங்களை ஏமாற வைத்து எவ்வளவு பணக்கொள்ளை யடிக்கக் கூடுமோ அவ்வளவுக்கும் இரும்புப் பெட்டியில் சேர்த்துப் பூட்டிட்டுக் கொள்வது! வியாபாரத்தில் உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் மோசமாயும் சுயநலமாயும் நடந்துகொண்டுவிட்டு, அதைப் பரோபகாரத்திற்குச் செய்வதாகப் பசப்பி அதில் கடவுளையும்கூட இழுத்துச் சேர்த்து ஒட்ட வைக்கிறது! இன்னும் ஆயிரம் விதமான சுய இச்சைகளுக் கெல்லாம் இந்த மதப்பேய் துணையாகிக் கூத்தாடுகிறது! விபசாரமும் இந்த மதப் பேயால் தான்! வேலையற்ற சோம்பேரிகள் பிழைப்பதும் இந்த மதப் பேயால்தான்! எவ்வளவுக்கு அதிக பணம் தானம் செய்கிறானோ அவ்வளவுக்கு மோக்ஷமென்று—முக்தி யின்பப்பெரு வீட்டினையே கூறுகூறாக விலைபோட்டு விற்பதும் இந்த மதப் பேய் செய்கிற வேலைதான்! இந்த மதஸ்தருக்கும் அந்த மதஸ்தருக்கும் சண்டையாகி ஒருவர் கோயிலை ஒருவர் இடித்துத் தள்ளுவதும், அடி குத்து உதைகளால் சிங்காரிப்பதும், கலகமென்று வந்து போலீஸார் பலரைக் கைது செய்து சிறையில் அடைப்பதும், அதற்கு வக்கீல்கள் ஏற்பட்டு வயல் அறுப்பு அறுக்கப் புறப்படுவதும் மதப்பேயின் காரியம் தான்!

* * *

ஸந்தோஷப்படுவதற்கும் வீட்டுக்கோர் துணைக்குமாகக் கல்யாணம் செய்யப்போக, அதற்குப் பதிலாக ஸந்தோஷமென்பது ஸஞ்சலத்தினும், வீட்டின் துணைக்கு என்பது வீட்டிற்கே ஒரு கொள்ளியாயும் ஆவதாகில் எப்படி யிருக்குமோ அவ்விதமே மதப்பேயின் மதியீனமான போராட்டச் சங்கதியும் இருக்கிறது! வேண்டித்தவம் இருந்து வெகு விரதங்கள் புரிந்து மக்களை அருமையாய்ப் பெற்றெடுக்க, கடைசியில் அந்த மக்களே தன் கழுத்துக்குக் கத்தியானால் எவ்வளவு குளிர்ச்சியாய் இருக்குமோ அப்படித்தான் நல்லதுக்கென்று அமைந்த மதங்களும் மதப்பேயின் போராட்டக்காரர்களிடம் சிக்கிக் கொண்டு திண்டாடுகிறது! தெய்வத்தை நினைத்துத் தீவினையகற்றி, மனத்தை ஓரிடத்தில் இழுத்துக் கட்டித் தியான முதலியவற்றில் செல்லவிடுத்துப் பரம சாம்பிராஜியமாகிய முக்தி நிலையை அடைவதற்காக ஆங்காங்கு மதங்கள் தோன்றப் போக, அந்த மதத்தின் வழியே கடைசிவரையும் சென்று குறித்த இடத்தைக் கிட்டி இறைவனடி காண்பதற்குப் பதிலாக நடுவழியிலேயே

---

ஆலயமானது கடவுளைக் குறிக்கிறது. ஆலயத்திலுள்ள விக்கிரகங்கள் கடவுளின் எண்ணத்தை உண்டுபண்ணுகின்றது. பூஜை முதலியவைகள் செய்யப்பட்டவர்களுக்கும் தரிசிக்கப்பட்டவர்களுக்கும் பக்தியை உண்டாக்கி ஆநந்தத்தைப் பெருக்குவிக்கின்றன. யாவும் மனோ பக்குவத்திற்குத் தக்கபடி.

நின்றுகொண்டு வாய்மதம் பேசி மதப் பேயின் போராட்டத்தில் இறங்கிவிடுவதானுல், இவர்கள் போய்ச் சேர வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேருவது ஆ! ஆண்டவனே அது எப்போதோ?

***

கலகமுண்டான வீட்டில் சோற்றுக்கே தாளமாய், அடுப்புகூட மூட்டப்படாமலும் போவதுபோல, இந்த மதப்பேய்ப் போராட்டக்காரர்களும் அங்கும் கெட்டு இங்கும் கெட்டு வீணராகிறுர்கள்! இந்த அதனப் பிரசங்கப் பேயின் அஞ்ஞானத்தைச் சொல்லவேண்டுமானுல் இன்னும் எத்தனேயோ இருக்கிறது. சொன்னுலும் என்ன பிரயோஜனம்? கேட்கிறவர்களெல்லாம் என்னையே திருப்பிக் கொண்டு, "விகடன் மகா ஆங்காரியையா! இவன் மாத்திரமென்னமோ மதமில்லாமல் உலகத்தில் வாழ்கிறவன் போல் பேசுகிறுன்" என்று என் மீதே சுள்ளென்று முகம் சுளித்துச் சிள்ளென்று எரிந்து விழுவார்கள். விகடன் ஒரு ஜாதி ஒரு மதமல்ல; எனக்கு எல்லா மதமும் சம்மதமே. எந்த மதத்திலும் அந்த ஒரு தேய்வந்தான். அதைத் தியானித்துக் கொண்டு பரவசப்படப் பொழுதில்லாமல் எதெதிலேயோ கையிட்டுக் கொண்டு, இந்த உலகமாகிய இரவல் வீடும் இரவல் சோறும் சதமென்று நினைத்துக் காலம்போக்கி விடுகிறுர்களே என்பதைத்தான்விகடன் கருத்தாய்க் குறிப்பிட்டுச் சொல்ல வந்தேன். ஒவ்வொரு மதத்து நூல்களிலும் முன்னுக்குப்பின் எவ்வளவோ முறண்பாடுகள் இருக்கலாம். இந்தக் காலத்தில் ஒத்துக்கொள்ளாததாகவும் போகலாம். கட்டுக்கதைகள் போலவும் தோன்றலாம். இதையெல்லாம் ஆராயப்புகின் அன்னமும் சுன்னமாய் உண்பதற்கே நேரமுமில்லாது போய் விடும்! இந்த ஆராய்ச்சியில் சொந்த மதத்தில் விருப்பம் கெட்டு, எந்த மதத்தில் புகுந்தாலும் அங்கங்கு வீட்டுக்கு வீடு மண்ணடுப்பாகத்தான் இருக்கும். ஆகவே, வேண்டிய முக்கியத்தைத் தெரிந்துகொண்டு அதில் பக்குவப்படப் பார்ப்பதே பிழைத்துப் போவதற்குத் தக்க வழி. நெய்க்குத் தொன்னே ஆதாரமாயிருப்பதுபோல, அந்தந்த மதத்திற்கும் ஆதாரமாயிருக்கிற அம்சங்கள் சில உண்டு. அவற்றை நன்கு தெரிந்துகொண்டு மதித்து மதத்தின் வசமாய் நில்லுங்கள். மதம் காட்டுகிற வழியில் சென்று ஞானத்தைக் கண்டடையுங்கள். அதற்கான பக்குவத்திற்கு ஆசைப்படுங்கள். ஆனல் என்றைக்கும் முக்கியத்தை மறந்து உதவாததைத் தொட்டுக் கொள்ளாதீர்கள். மதப்பேயினிடம் மயங்கி அகப்பட்டுக்கொள்ளாதீர்கள். நடுவழியிலும் நில்லாதீர்கள் என்பதே விகடன் ஒரு முடிவாகச் செய்யும் எச்சரிக்கை! பிறகு உங்கள் பாடு! ராம்! ராம்! சுபம்! சூ! சுவாஹா!!

---

எப்படி யெல்லாமோ உயர்ந்திருந்த மனுஷ்யன் இப்போது இப்படியாய் இத்தனே சாதுவாக மாறிப்போயிருக்கிறுன் என்று ஒருவனேக் குறித்துச் சொல்லும்படியாகவும் காலம் ஆக்கிவிடுகிறது. அவ்வளவுக்கு அடங்கியும் போகிறுர்கள். மனுஷன் துள்ளுவதெல்லாம் தன்னவர்கள் உள்ளவரையுமே.

தாசிகளின் வீட்டிலேயே சிலர் சஞ்சரிக்கிறுர்கள். அவர்களேப்பற்றித் தப்பிதமாய் எவரும் சொல்லுவதில்லே. அவர்களும் நடத்தை தவறி மாறுவதில்லே. இவர்களும் உதவாது போகாரெனத் தாசிகள் இடம் தருகின்றுர்கள்.



தீபாவளியில் பட்டாசுக்கட்டுக ளுக்குச் செலவிடாதவர்கள் சிறுவர் சிறுமியரில்லாத வீட்டினர்தானும்!

***

பெருவியாதி அதிகரிப்பதன் காரணம் அதைத் தீர்ப்பதாய்ப் பசப் புகிற வைத்திய விளம்பரங்கள் போட்டியுடன் பெருகிவிட்டதாலாம்!

***

"திருநோக்கால், பரிசத்தால் திகழும் வாக்கால்" அரிவையரை நோக்கும் பந்துக்கள் எத்தனை பெய ரென்று ஒரு கணக்கு எடுக்கவேண்டு மாம்!

***

எத்தகைய பந்துவின் நல்ல மன மும் விகாரப்படுவது இரவில்தானும்! விழித்தபடியே உறங்குவதுபோலிருப் பார்களாம்! அவ்வீட்டிற்கு வந்தவர்க ளும் அவ்வீட்டிலிருப்போருமான பெண்கள் ஜாக்கிரதைப்பட வேண்டு மாம்!

***

அடிக்கடி காப்பித்தூள் இரவல் கேட்கிற தயிர்க்காரியிடம் அதற்குக் சரிவிலையாகத் தயிர்—வெண்ணெய் கொடுத்துவிடு என்று சொல்லிவிட் டால் பிறகு கேட்க வரமாட்டாளாம்!

***

என் அம்மாவின் வயிற்றில் பிறந் தது சரி, என் அப்பாவின் வயிற்றி லிருந்து பிறவாதபோது அவருக்குப் பிறந்தேனென்பது எப்படி என்று ஒரு சிறுவன் விகடனைக் கேட்டா னும்!

***

"சும்மா என் தம்பி அடிக்கி முன்" என்று ஒரு சிறுமி விகடனி டம் கூற, அதற்கு விகடன் அத்தம்பி யைத் தூக்கிப் பார்த்துவிட்டு, இவ்வ ளவு பளுவுள்ள தம்பி இலவசமாய்க் கிடைத்ததற்கு, அவன் அடிக்கிற அடிகளும் பட்டுக்கொள்ளத்தான் வேண்டுமென்றானும்!

***

தன் செயலால் மனது நொந்தவர் களுக்குத் தான் ரிப்ளை கார்டு அனுப்பிவிட்டதினுலேயே பதில் வந்துவிடாதாம்! ***

வீட்டுக்காரன் செலவுக்கு இல்லா மல் ஏங்குகையில் அங்கு இலவசமாய் உண்ணவந்த விருந்தாளி அந்த செல வைச் செய்வாராவென்றதற்கு விக டன் அவர் சொல்லாமலே கம்பி நீட்டுவாரென்றானும்!

***

மாமியுடன் இருக்கமாட்டே னென்ற பெண்ணைப் பார்த்து விக டன், அவள் வீடும் சட்டிப்பானையும் தான் உன் வீடும் உன் சட்டிப்பானை யுமாகுமேயன்றி, மற்றவர்களின் வீட் டுச் சட்டிப்பானை உன்னுடையதாகா தென்று புத்தி சொல்லி அனுப்பி னனும்!

***

---

யார் இருந்தாலும், யார் இறந்தாலும் உலகம் இருந்துகொண்டுதானிருக் கிறது. அவர் போய்விட்டதோடு உலகமும் போய்விடவில்லை.

"தமிழணங்கு இக்காலத்து அச்சுவாகனமேறிப் பழய நூல்களிலும் வர்த்தமானப் பத்திரிகைகளிலும் வெளிப்பட்டுக் கற்றாருங் கல்லாருந் தன் னைக் கண்டு களிகூறுமாறு உலவா" நிற்கின்றாள்.

அடுத்த தபாலில் மணியார்டர் அனுப்பி விடுகிறேனென்று எழுதி அதற்கு அடுத்தமாதம் சென்றுங்கூட அனுப்பாதவர்களைப் பற்றி எப்போதும் ஜாக்கிரதைப் படவேண்டுமென்று ஏமாந்தவர் சொல்கிறாராம்!

## அகப்பேய்ச் சித்தர் பாடல்.

8

தாக்ஷிண்யம் பார்க்காதே அகப்பேய்
தவனை பொறுக்காதே [பேய்
சூக்ஷ்மத்தில் மோக்ஷமுண்டு அகப்
சொன்னேனிது நிஜமே.

9

பொய்யும் புறட்டுநட்டும் அகப்பேய்
பொல்லாத பாதகமும்
செய்து பணந்தேடு அகப்பேய்
சீமானாகிடு வாய்.

10

பொய்ச் சத்தியம்பண்ணி அகப்பேய்
புண்ணியத்தைத் தள்ளி [ய்
கைச்சொத்துச் சேர்த்துக்கொள்வா
அகப்பேய் கண்யமிதுதானே.

---

## மிருகத்தனமான மூடத்தனம்.

நாயும் நாயும் சந்தித்தால் குலைப்பதேயன்றி சிரிப்பதில்லை. வீடுவிட்டுப் போனவன் எங்கெங்கேயோ அலைந்து வெயிலில் வாடிக் களைத்து ஏங்கிப் பசியுடன் வீடு திரும்பி வருகையில், அவனைக்கண்டதும் ஏன் இவ்வளவு நேரமென்று வீட்டுள் இருப்பவன் மற்றொருவரின் முன்பு நாயைப்போல் விழுந்து சிடுசிடு எனப்படுகிறான். வந்தவன் இதைக்கண்டு சகியாமல் தான் வழியில் பட்ட பாட்டை எண்ணிக்கொண்டு பதிலுக்குப் பதில் எரிந்துவிடுகிறான். இது இரண்டு நாய்கள் சந்தித்ததுபோலாகிறது. ஒருவனை அருகில் வைத்துக் கொண்டு அவன் முன்பாகத் தன்னை அந்தஸ்தில் உயர்த்தியபடி இன்னொருவனைக் கேவலமாய்ப் பேசுவதைச் சில மூடர்கள் ஒரு பெரிய கௌரவமென நினைக்கின்றனர். இது மிருகத்தனமான மூடத்தனமாகும். இவர்களை விட்டு விலகுக.

ஒன்றை—அது புஸ்தகத்தையோ சாமானையோ—அருமையானதென்று ஊரிலிருந்து வந்தவர்களுக்கு எடுத்துக் காட்டினால், அதைப் பார்ப்போர் தாங்கள் ஊருக்குப் போகும்போது அதையும் கொண்டுபோய் விடுகிறார்கள்!

தன் பண இருப்பையோ, தன்னிடம் உள்ளவற்றையோ வெளியிட்டுக் கொள்பவன் ஒரு முட்டாள். அவன் சீக்கிரத்தில் அதை இழந்துவிடுகிறான்.




1. **ரஸமான வாக்கு:**—இன்னும் சிறிது பேசமாட்டாரா வென்று நினைக்கும்படி அமிர்தவருஷம் வர்ஷிக்கும் சக்தி சிலருக்கேதான். ஓயமாட்டார்களா! வென்று சலிப்பு ஏற்பட வார்த்தைகளைக் கொட்டுவோரே அதிகம்.

2. **உபகாரத் தொல்லை :**—அவசரத்துக்கு ஒரு கார்டு கவர் கொடுக்கப்போக, பிறகு அடுத்தடுத்து வந்து கேட்கிறார்கள். அதற்குக் காசும் வருவதில்லை !

3. **அதிக யோசிப்புள்ளோர் :**—நோட்டுக்குச் சில்லரை இருக்கிறதா வென்று கேட்கையிலேயே, ஏதோ கடன் பெறுதற்கு இப்படிக் கேட்கிறார்களென்று எண்ணிச் சில்லரை இல்லை என்று உடனே சொல்லிவிடுகிறார்கள் !

4. **கமிஷனா ?:**—சாமான்கள் வாங்கிவர உறவினர்களிடம் கொடுத்த பணத்திற்கு மிச்சம் வருவதேயில்லை. கணக்குக் கேட்கவும் கூடவில்லை. பாக்கித் தொகை என்ன இவர்களுக்குக் கமிஷனா ?

5. **துள்ளுகிற கௌரவஸ்தர்கள் :**—கடைக்காரன் சாமான் கட்டித் தருகிறவரையில் தாங்கள் நிற்கக் கூடாதாம் ! வீட்டிற்கு அனுப்புங்கள் என்று சொல்லிப்போய் விடுகிறார்கள் ! வேறு சிலர் சோடா வெற்றிலைப் பாக்குக் கடையில் தாங்களே எல்லாவற்றையும் எடுத்துக்கொள்வது ஒரு நாகரீகமென எண்ணுகின்றனர்.

6. **இரு வகையினர் :**—சொல்பவரும்படியில் உள்ளதைப் புசித்து இருப்பதை உடுத்தி மானமாகவே குடித்தனம் செய்வோரும் உண்டு. செல்வத்திலும் பெரிய சம்பளத்திலும் மிகுந்து என்ன வரினும் 'போதவில்லை போதவில்லை' என்று சதாகாலமும் கடன் வாங்கிக் கஷ்டப்படுகிறவர்களும் இருக்கிறார்கள்.

7. ஓட்டுத் தாரகர்களின் யோக்கியதை எலெக்ஷன் வரையில்தான் ! அவர்களுடைய எஜமானரின் இனிப்பு வார்த்தையும் அப்படியேதான். பிறகு இல்லை. எல்லாம் அவரவர் பிழைக்கும் சுயநல தந்திரமே!

**K. விஜயராகவன்.**

---

"**பொதுநன்மைக்கு உழைத்தல்**" என்கிற வெளிமயக்கான போர்வையை யணிந்து கொண்டால், வீட்டுச் செலவுக்கும், தன் பிழைப்புக்கும் வேண்டிய பணத்தைத் தேடிக்கொள்வதுடன், கௌரவமும் பிரசித்தியும் கூடப் பெற்றுப் பெரிய மனிதனாகவும், ஜனத்தலைவராகவும் சபாநாயகராகவும் கூட ஆகிவிடலாமாம். இதற்கு ஆரம்பத்தில் சில பெரிய மனிதர்களின் தயவைப் பிடித்து அவர்கள் மனம்போல் நடக்கவேண்டுமாம் !




## Letter XXI.

### The Answer.

*Mr. Venugopal,*

I hope that from the whole of my conduct, ever since you first became my tenant, that you cannot have reason to allege anything against me. I never treated you with rigour, as I always considered you as an industrious honest man. Make yourself perfectly easy concerning the payment of your rent, till I come to the country in the summer, and if things are as you represent them (and I doubt not but they are,) you may be assured of every reasonable indulgence.

I am your.

*R. Sundaram.*

## 21-ம் கடிதம்.

### அதற்குப் பதில்.

மிஸ்டர் வேணுகோபால்,

நீர் என்னிடத்தில் குத்தகை பண்ணிக்கொண்ட கால முதற் கொண்டு நான் நடப்பித்த எல்லா வகையிலும் நீர் என்மேல் குறை சொல்ல உமக்கு இடமிராதென்றே நம்பியிருக்கிறேன். நீர் உழைப்புள்ள கிரகஸ்தரென்று நான் எப்போதும் எண்ணியிருந்ததால் உம்மை யொரு போதும் நிஷ்டூரமாக நடப்பித்த தில்லை. கோடைகாலத்தில் நான் நாட்டுக்கு வருமளவும் நீர் கொடுக்க வேண்டிய குத்தகைப் பணத்தைக் குறித்து ஒரு ஸஞ்சலமும் படவேண்டியதில்லை. காரியங்கள் நீர் எழுதிய படி இருக்குமென்பதற்கு நான் சந்தேகப்படவில்லை. அப்படி யிருக்குமாகில் நியாயமான ஸகல உபகாரங்களும் செய்யப்படுமென்று நீர் நம்பியிருக்க வேண்டியது.

இங்ஙனம்,

ஆர். சுந்தரம்.

புண்ணியம் கிடைக்கு மெனப் பறிக்கும் புரோகிதர் சூழ்ச்சியும், இன்பம் நல்குவதாய் நடிக்கும் தாசிகள் மயக்கும் இறுதியில்ஏமாற்றுதலே. வயிற்றுப்பிழைப்பு வித்தைகளே. இருவரும் பின் தூர ஒதுங்கி விடும் வஞ்சகரே. கொடுப்பவன் தன் மனப் பரிசுத்தத்தால் சுத்தனாகலாமன்றிப் புரோகிதனால் வரும் புண்ணிய மேதுமில்லை.

ஒருவனை யறிந்தவர்கள் இருக்கும்போதே கடவுள் மரணத்தை யனுப்பிவிடுகிறார். ஏனெனில், அறியாதார் முன்னம் அவன் வாழ்வதில் எவ்வித ருசியும் காணான். ஆனதால்தான் அறிந்தவர்கள் இருக்கையிலேயே அவர்களின் கை உபசாரம் பெற்றுக் கண் மூடிவிடக் கடவுள் அருள்கின்றார் போலும்! ஆனால் பிரிந்த ஏக்கமோ?




**சென்னைப் புத்தகாலயச் சங்கம்:-**

இச்சங்கத்தைக் குறித்த விதிகள் அடங்கிய புஸ்தகமொன்றும், புஸ்தக சாலைகள் அவசியமென்பதைக்குறித்த பல பெரியோர்களின் உபரிய வியாசங்கள் அடங்கிய நூல் ஒன்றும், ஒரு புஸ்தகசாலைக்கு அவசியமானதாகக் கருதப்படுகிற புஸ்தகங்கள் அடங்கிய அட்டவணை யொன்றும் வரப்பெற்றோம். இந்த அட்டவணையில் விடப்பட்டுப் போயிருக்கிற வெகுமுக்கியமான புஸ்தகங்களை அடுத்த பதிப்பில் சேர்ப்பிப்பார்களென்று நம்புகிறோம். மாதப்பத்திரிகைகளின் வால்யங்களில் "**தமிழர் நேசன்**" பத்திரிகை ஒன்றுமட்டுமே கண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இது போன்ற தவறுகளும் குறைகளும்அட்டவணையில் மிகுந்துள்ளன.

**சுகாதார பாடங்கள் :—**

வீரவநல்லூர் ஹிந்து ஸெகண்டரி பாடசாலை உதவி ஆசிரியர் ஸ்ரீமான் எம். எஸ். சுப்பிரமணியம் அவர்கள் இயற்றியது. இவை முதல் பாரத்துக்கும், இரண்டாவது பாரத்துக்கும் மூன்றாவது பாரத்துக்குமாக மூன்று விதமான புஸ்தகங்களாக ஆக்கப்பட்டு மாணவர்களின் அறிவுப் பெருக்குக்கு ஏற்றபடி அமைந்துள்ளன. படங்களுடன் கூடியது. பாடசாலைகளில் பாடபுஸ்தகங்களாக உபயோகிப்பதற்குத் தக்கவாறு இம்மூன்று புஸ்தகங்களும் அமைந்துள்ளன. இவற்றின் விலை முறையே அணா 6, 4, 6.

[இப்புஸ்தகங்கள் "**அமிர்த குணபோதினி**" ஆபீஸில் விலைக்குக் கிடைக்கும்.]

## துயில்.

துயிலே! மனிதரின் றுணையே! இமையினில்
நயனுற நடிக்கு நலங்கனி நாரியே!
வியப்புறு காட்சி விந்தைசெய் தாயே!
வருந்திய மனக்குப்பொருந்திய மருந்தே!
விண்ணவர் தமக்கு மேவரி தாகி
மண்ணுல கினர்க்கு வாய்த்தபே ரமுதே!
உவகையி னூற்றே! கவலையின் பகையே!
ஊக்கமுயர்த்தி யாக்க மளிப்பையால்.

5821

# மூளைக்கு வேலை.

## I

## விடுகதை வினா?

### (1) நடுவெழுத்து வினா?

(1) லாகிரிகளில் ஒன்றின் பெயர். (2) தட்டார வேலைக்குதவும் ஆயுதங்களில் ஒன்று. (3) இஸ்லாம் ராஜ்யங்களில் ஒன்று. (4) வாசனைகளில் ஒன்று. (5) ஊர்களில் ஒன்று. (6) நவரத்தினங்களில் ஒன்று. (7) மரங்களில் ஒன்றின் பெயர்.

**குறிப்பு:**—இந்த ஏழு பதங்களும் மூன்று எழுத்துள்ளதாக அமைத்து நடு எழுத்தை வரிசையாக நோக்கினால் நமது "**அமிர்த குணபோதினி**"யின் ஆசிரியர் நடத்திவரும் மற்றோர் பத்திரிகை **பிரஜானுகூலன் என ஆகும்**?

(2) தமையன் தம்பியை நோக்கி (1) பிராணிகளுக்குப் பிரதானமாயுள்ள உயிரும். (2) பதார்த்தங்களுக்குச் சிரேஷ்டமான ரஸமும், கொண்டுவா என்றதும் தக்ஷணமே தம்பியானவன் வீட்டினின்றும் வெளி புகாமலே கொண்டுவந்தான். அவ்விதம் அவன் கொண்டுவந்தது என்னென்ன?—

(3) ஒருவர் விருத்தாப்பிய தசையில் தனது நான்கு குமாரர்களைக் கூப்பிட்டு பெட்டியிலிருந்த தங்கக் கட்டிகளை சமமாகக் கொடுத்துவந்தார். கடையவனுக் ஒரு கட்டி குறைவுபட, எல்லாக் கட்டிகளையும் வாங்கி பெட்டியில் வைத்து, தான் ஒரு முனிவரிடம் கற்றுக்கொண்ட மந்திரத்தால் ஜெபித்தார். கட்டிகள் மந்திர சக்தியால் இரட்டிப்பு ஆகியது. தன்னிடம் முன்னால் எத்தனை யிருந்ததோ அத்தனையுடன் ஒரு கட்டியை அதிகம் போட்டு மூன்னவனுக்கு கொடுத்தார். மீதத்தை மீண்டும் ஜெபிக்க, முன்மாதிரியே பின்னவனுக்கும் கொடுத்தார். மீதியை மூன்றாம் முறை ஜெபித்து மூன்றாமவனுக்கு கொடுத்து போக மிச்சத்தை நான்காந் தடவை ஜெபித்து நான்காமவனுக்கு கொடுத்து விட்டார். இவ்விதமே நான்கு முறை ஜெபித்து நான்கு குமாரர்களுக்கும் கொடுக்க, பங்கும் சரிசமமாக அமைந்தது. கட்டிகளும் மிச்சமில்லையானால், அதிலிருந்த தங்கக்கட்டிகள் எத்தனை?

**வ. சு. நாராயணசாமி செட்டியார்.**

## II

## விடுகதை வினா?

ஒரு குளத்தின் கரையிலிருந்து ஜலத்தைப் போய்த் தொடவேண்டும். அதற்கு இரண்டு இரண்டாக சென்றால் ஒரு படி மிஞ்சும். மூன்று மூன்றாகச் சென்றால் ஒன்று மிஞ்சும். நான்கு நான்காகச் சென்றால் ஒரு படி மிஞ்சும். ஐந்துஐந்தாகச் சென்றால் ஒரு படி மிஞ்சும். ஆறு ஆறாகச் சென்றால் ஒரு படி மிஞ்சும்.ஏழு ஏழாகச் சென்றால் ஒரு படியும் மிஞ்சாது. குளத்தின் கரையிலிருந்து ஜலத்திற்கு எத்தனை படிகள்? **எஸ். இரத்தினசபாபதி பிள்ளை**

## III

## விடுகதை வினு ?

**(1) ஐந்தெழுத்திலோர் பெயர்:—**

1-வது எழுத்தை நோக்கில் செல்வமாகும்.
2-4-5-ம் பார்க்கில் தினுசு ஆகும்.
4-5-ம் சேரில் மோக்ஷமாகும்.

ஐந்தெழுத்தையும் கூட்டி வாசிக்குங்கால் ஓர் சிறந்த விஷ்ணு ஸ்தலத்தைக் காட்டும்.

**(2) நான்கெழுத்தி லோர் பெயர்:—**

1-வது எழுத்து ருசிபார்க்கு மோர் உறுப்பு.
1-2-ம் சேரில் ஓர் வாசனைத் திரவியமாம்.
1-4-ம் கூடிடில் ' தன்னை 'க் குறிக்கும்.
1-3-4-ம் பார்த்திடில் கணவனாகும்.

நான்கெழுத்தையும் கூட்டிப் பார்த்தால் இன்றியமையாததோர் ' தொழிலாளி ' யாம்.

ஜி. மகாதேவன்.

☞ இதற்கு விடுவிப்புகள் மறு ஸஞ்சிகையில் வரும்.

## VI

ஐப்பசி மாத ஸஞ்சிகையிலுள்ள விடுகதை வினவுக்கு விடை:—

**I விடுகதை வினு:**—2. "மா" (லக்ஷ்மி, மரம், குதிரை, இடித்த மா.)

| | | | |
|---|---|---|---|
| அ | பி | ரா | மி |
| பி | ர் | ம | ன் |
| ரா | ம | சா | மி |
| மி | ன் | மி | னி |

**II விடுகதை வினு:—**

ராஜம்மாள் }
ராஜகோபால் } ராஜபால்.

**III விடுகதை வினு :**—(1) கும்பகோணம். (2) புகையிலை.

**IV விடுகதை வினு:**—மதுராந்தகம்.
1-6-5-7-மகதம். 1-4-5-7-மந்தம். 3-6-7-ராகம். 1-2-மது. 1-2-3-மதுரா. 6-4-5-7-கந்தம். 1-6-7-மகம்.

(மற்றவை மற்றதில்.)

---

நமது வீட்டிற்குப் பந்துக்கள் ஆயிரம் முறை வரட்டும் உண்ணட்டும் போகட்டும். நாம் அவர்களின் வீட்டிற்குப் போவது அவர்கள் வேண்டியழைத்து—அதுவும் ஒரு விசேஷத்திற்காக வென்றிருக்கும்போதுமட்டும் போய்வரலாம். நம்மால் எவர்களுக்கும் ஒரு காசு செலவு வேண்டாம்.

# உள்ளே வரக்கூடாது.

"உள்ளே வரக்கூடாது" என்று ஒரு பலகையில் எழுதித் தொங்கவிட்டாலும், வரக்கூடியவர்கள் எவ்விதமும் உட்புகுந்து விடுவர். வரக்கூடாதவர்கள் மட்டுமே வராது வெளியில் நிற்பர். வரத் தகுந்தவர்கள் உள்ளே வந்துவிட்ட பிறகு "ஏன் வந்தீர்கள்" என்று கேட்பதில்லை. "வாருங்கள்" என்பதும், வந்த காரியத்தை முடித்து அவர்களை அனுப்புவதுமே உலக வழக்கம். வரத்தகாதவர் வரினோ அப்பொழுது முகமும் சொல்லும் வேறுபடக்கூடும். அவர்களும் அநேகமாக உட்புகார். அவர்கள் வித்தியாஸ மனமே தடுக்கும்.

| உள் வரக்கூடியவர்கள். | உள் வரப்பின்னடைவோர். |
|---|---|
| வைதீகப் பெரியோர்கள் | லௌகீக நரிகள் |
| அதிகம் பழகினோர் | அன்னியர்கள் |
| கலா நிபுணர்கள் | தாழ்ந்த மந்தமதிகள் |
| தனவந்தர்கள் | எளிய நிலையினர் |
| கௌரவ முள்ளோர் | இழிந்த தன்மையினர் |
| அன்பான நண்பர்கள் | ஒப்பாரி நண்பர்கள் |
| நெருங்கிய உறவினர் | ஒதுங்கும் போலி உறவினர் |
| சமய உபகாரிகள் | சமயத்தில் கம்பி நீட்டுவோர் |
| பொறுமை மிகுந்தோர் | பொருமைப் பேய்கள் |
| நன்மை நாடுபவர்கள் | வாழப் பொருதவர்கள் |
| உதவி புரிய வருவோர் | தருவதையும் கெடுப்பவர் |
| பாத்தியதை யுள்ளவர்கள் | பாத்தியதை யற்றோர் |
| களங்க மற்றோர் | வஞ்சக நெஞ்சினர் |
| குழந்தைகள் | வயது முற்றினோர். |
| தந்திரசாலிகள் | பேதை மனத்தினர் |
| விருந்தினர்கள் | அழையாது வருவோர் |
| வீட்டு வேலையாட்கள் | வேலையினின்று தள்ளுண்டவர் |
| பெண்களிடம் பழகியவர்கள் | பெண்களிடம் பழகாதவர் |
| பெண்கள் | ஆடவர் |

உள்ளே வரக்கூடியவர்களென்றும், வரத்தகாதவர்களென்றும் பிரித்துக் காட்டுவது அவரவர்களின் உள்ளமும் நினைவுமே. தன் நெஞ்சே தன்னைச் சுடும். வெள்ளைக்கில்லை கள்ள சிந்தை. புஸ்தகம் இரவல் இனும் தாமடியர் தென்று ஒருவர் கண்டித்துக் கூறினும், தரக்கூடிய தகுதியுடையார்க்கு அவர் தந்தே தீருவார். தகுதி யற்றோர்க்கு இல்லைதான். எல்லாம் மனதைப் பொறுத்தது. எல்லாம் நற்குண விநயாதிகளைத் தழுவிய சங்கதி.

# பழமொழிக் குறிப்புகள்

## 2. அற்ப குணம்.

(362-ம் பக்கத் தொடர்ச்சி.)

### 150. ஆறு நிறையப் போனாலும் நாய்க்கு நக்குத் தண்ணீர்.

எவ்வளவு தான் ஆறு நிறைய ஜலம் ஓடினாலும் நாய் தன் அற்பத்தனத்தின்படியும் தன் சுபாவத்தின்படியும் நக்கித்தான் குடிக்குமே யன்றி மொண்டு குடிக்காது. அவ்விதமே அற்பர்கள் போய் ஒட்டிக்கொள்ளுகிற இடங்கள் பெரிய செல்வமுள்ள இடங்களாயிருந்த போதிலும் அங்கு யோக்கியமாய் வாழ்வதற்கு அவர்களுக்குத் தெரியாது. தங்களின் அற்பத் தனமான பழக்கங்களாகிய குடி, கூத்தி முதலியவற்றால் கிடைத்த செல்வங்களையும் பாழ்படுத்தவே முயல்வார்கள். தங்களுக்குத் தந்தை கொடுத்த வீடு நிலம் முதலியவைகளையும் வெகு சீக்கிரமே விற்றுத் தொலைத்து விடுவார்கள். தங்கள் மனைவிக்கென்று போடப்பட்ட நகைகளையும் குடி முதலியவற்றில் செலவிட்டு விடுவார்கள். இவ்விதம் ஸகலத்தையும் அழித்துவிட்டு நக்கிக்கொண்டு வாழத் தெரியுமே யன்றி, இவற்றை யெல்லாம் பெருகும்படி செய்து நீரை மொண்டு குடிக்கும் வாழ்வில் அமர்ந்து வைபோகமாய் உயர்ந்து கொள்ள ஒருநாளும் அறியார்கள். நாய் நக்கிக் குடிப்பது அதன் அற்ப சுபாவமானால், இந்த அற்பர்களும் எவ்வளவு செல்வமிருந்தும் அத்தனையும் அழித்துவிட்டு நக்கியுண்ணுகிற தரித்திர வாழ்வுக்கே திரும்புவதும் இவர்களின் அற்பத்தனத்தையே குறிக்கும்.

### 151. பால் ஆறாக ஓடினாலும் நாய்க்கு நக்கித்தான் குடிக்கவேண்டும்.

சிலர் வெகு பெரிய மனிதர்கள். வீடுகளும் சொத்துக்களும் ஏராளமாக இருக்கும். அதற்கு ஏற்றபடி பக்ஷண பலகாரங்களாய் நன்றாக உண்டு அநுபவிக்கும் வகையை அறியமாட்டார்கள். கத்தரிக்காய் வத்தல் குழம்புதான் அவர்களின் வீட்டில் வைப்பார்கள். அக்குழம்பில் காரம் குறையும்படி தேங்காய்த் துண்டுகூட சேர்த்து அரைக்கமாட்டார்கள். ஒரு சொட்டு எண்ணெயில் ஒரு சட்டிக் குழம்பைத் தயார் செய்துவிடுவார்கள். இவ்வளவு அற்பத்தனமாய் உண்பதற்குத் தகுந்தபடியே அவர்களுடைய கையின் தாராளமும் வெகு சுருக்கத்தில் இருக்கும். தங்கள் குமாரனுக்கு எவர்களாவது அதிக சொத்துடன் பெண்கொடுக்க மாட்டார்களாவென்று இவர்கள் காத்துக்கிடக்க, ஏழைகளின் வீட்டுப் பையன்களுக் கெல்லாம் விவாகமாகிவிடும். இவர்களின்

“அமிர்த குணபோதினி” அருமையும் பெருமையும் வாய்ந்த பல பொருள்களை எடுத்துரைப்பது. மாணாக்கர் யாவர்க்கும் பெரிதும் பயன்படத் தக்கது. ஆங்காங்குப் புதிய கருத்துக்களடங்கியது. ஒரு புதுவிதமானது.

வீட்டுப்பையனே ரகசியத்தில் தாஸிகளின் தாஸனுய் விடுவான். இவ்வளவு அற்பத்தனமாய்ப் பிழைத்துவிட்டுக் கடைசியில் மாண்டுவிடுவதே தவிர எவ்விதம் அனுபவிப்பதில்லை. இதுவும் நாயின் நக்கிக் குடிக்கிற ஒரு அற்பத்தன்மைக்கே திருஷ்டாந்த மாக்கலாம்.

## 152. நாய்க்கு நறுநெய் இணங்காது.

**நா**ய்க்கு மாமிசத்தின் மீது பிரியமேயன்றி வாஸனையுள்ள நெய்யின்மீது விருப்பமில்லை. அதுபோலவே அற்பர்களும் தங்களை யொத்த அற்பர்களின் சகவாசம் தித்திப்பாயிருக்குமே யன்றி உத்தமர்களின் நட்பு பிடிக்கவே பிடிக்காது. இரண்டொரு நிமிஷம் அந்த உத்தமர்களுடன் இருக்க நேர்ந்தாலும் வெகு கஷ்டத்துடன் இருந்துவிட்டு, அப்பால் தங்களுக்குப் பிரியமான அற்பத்தோழர்களுடனேயே கூடிக்கொள்வார்கள். ஒரே வீட்டில் பெண் எடுத்த இருவரில் மூத்தவளை மணந்தவன் ஒரு அற்பமான கபடஸ்தனுய் இருந்தால், அவ்வீட்டில் இளையவளை மணந்த ஒரு உத்தமனிடம் நெருங்கிப் பழகான். அவ்வுத்தமனின் சகவாசமும் அவனுக்குப் பிடிக்காது. அந்த உத்தமன் உள்ளே சென்றுல் இந்த அற்பன் வெளியே வந்து வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கொள்வான். இந்த அற்பனுடைய போக்கைப் பார்த்து அருவருத்து அந்த அற்பம் உள்ளிருக்கும்போது உத்தமனும் வெளியில் வந்துவிடுவான். அற்பர்களுக்கு அவர்களை யொத்த அற்பர்களிடம் புத்தி போகுமே யன்றி நல்லோரிணக்கம் வேப்பங்காயாகவே கசக்கும். இது நாய்க்கு நறுநெய் பிடிக்காத அற்பத்தன்மை போலாம்.

## 153. எலும்பு கடிக்கிற நாய்க்கு பருப்புச் சோறு பிடிக்குமா?

எப்படிப் பிடிக்கும்? எவ்வளவு தான் நெய்யும் பருப்புமாய்க் கலந்து சோற்றை வைத்தாலும் நாய்க்கு அது அத்தனை இனிப்பாய் இராது. அந்த சோற்றின் பக்கத்திலே ஒரு மாமிசத் துண்டையோ எலும்பையோ போட்டு விட்டால் அதைத்தான் முதலில் கௌவிக்கொள்ளும். இது நாயின் அற்ப சுபாவம். இவ்விதமே அற்பர்களுக்கும் உத்தமர்களின் கூட்டுறவு தங்களுக்கு எவ்வளவோ நெருங்கி யிருக்கையிலும், பந்தத்துவ முறையில் அது வெகு சமீபத்திலே கிடைப்பதாய் இருக்கையிலும், அதை எட்டிப் பிடிக்க மனம் நாடாமல் ஈனமும்—மோசபுத்தியும்—குறுகிய சிந்தையுமுள்ள அற்பர்களுடனேயே கூடிக்கொண்டு தாளம் கொட்டுவார்கள். இது அவர்களின் ஜென்மத்திற் பிறந்த குணம். அதாவது அற்பத்தனம் விட்டுப் போகாது என்றபடி.

## 154. நாய்க்கு முழுத்தேங்காய் தக்குமா?

**நா**யின் அற்பகுணத்துக்கு அந்தத் தேங்காயை உடைத்துத் தின்ன வேண்டு மென்ற விசாலபுத்தி தோன்றுது. அவ்விதமே அற்பர்களுக்கு ஒருவர் ஒரு புஸ்தகத்தைக் கொடுத்தால் அதைத் திறந்துபாராமல் அப்படியே ஒரு மூலையிற்போட்டு வைத்திருப்பார்களே தவிர, அதைப் படித்து சந்தோஷப்பட நல்லபுத்தி யுண்டாவதில்லை. இவ்விதமே பெரியோர் சொன்ன உபதேசங்களும் முழுத்தேங்காய் போலவே ஆகி அவர்களுக்குப் பயன்படுவதில்லை.

---

யார் வைத்த கொள்ளியானுலென்ன? வீடு வேகிறது நிச்சயம். பற்றிக்கொள்ளாத கொள்ளி (கலகக் கொள்ளி) எங்கேயோ அபூர்வம்!

## 155. நாய் வாய்ப்பட்ட தேன் நல்ல தேன் ஆகுமா?

தேன் மிக்க உபயோகமும் சிறந்ததுமான வஸ்து. நாயின் ஸ்வபாவமோ எதைக் கண்டாலும் நக்கிப்பார்த்து விடுகிறதன்மை. அவ்விதமே தேனைக் கண்டதும் முன்பின் யோசிக்காமல் அதையும் நக்கிப் பார்த்துவிடும். அதற்குப் பிறகு அந்தத் தேனைக் கீழே கொட்ட வேண்டியதாய்த்தான் வருமேயன்றி அது நல்ல தேன் ஆகாது. இவ்விதமே அற்பர்களை நமது வீட்டுக்குள் வரவிடுவதில், வீட்டிலுள்ள பெண்பாலாரிடம் அவர்கள் எவ்வித சகவாசமும் பேச்சும் வைத்துக் கொள்ளாதபடி ஜாக்கிரதையாய் அவ்வளவுக்கு எட்டிப் போகாதிருக்கப் பார்த்துக் கொள்ளவேண்டும். இதில் சற்று தவறினால், இந்த அற்பர்கள் நாயின் நக்குகிற தன்மையைப்போல வீட்டிலுள்ள ஸ்திரீகளையும் கெடுக்கத் துணிந்துவிடுவார்கள். பிறர் மனைவியாயிற்றே யென்ற எண்ணம் அவர்களுக்குக் கிடையாது. எதையும் நக்கி ஒரு ருசி பார்த்துவிடவே தங்களைத் தூண்டிக் கொள்வார்கள். அவ்வளவுக்கு மிஞ்சிப் போகாதிருக்க எப்பொழுதும் இந்த அற்பர்களின்மீது கண்ணுயிருந்து எச்சரிக்கைப் படவேண்டும். ஏனெனில் "நாய் வாய்ப்பட்ட தேன் நல்ல தேன் ஆகுமா?" ஆகாது; ஆகலினால் தான். அற்பர்களுடைய ஸ்வபாவம் எத்தகையதெனில்,

## 156. நாயைக் கொஞ்சினால் வாயை நக்கும்.

என்கிற மாதிரிதான். எவருக்காவது நாய் தங்களின் வாயை நக்க வருவது பிடிக்குமா? சீ! என்று நாயை அப்பால் தள்ளித்தூர ஒதுங்குவார்கள். இவ்விதமே அற்பர்களுடன் நாம் கொஞ்சி உறவாடப் போனால் அந்த உறவைப் பிடித்துக்கொண்டு நமது வீட்டுப் பெண்களுடன் பழகி நக்கத் தொடங்கிக் கொள்ளுவார்கள். நாய்க்குத் தன்னைக் கொஞ்சுகிறவர்களின் வாயைநக்கப்போவது தனக்கு மரியாதையல்ல வென்பதைத் தெரிந்துக்கொள்ளுகிற புத்தி அதன் அற்பத்தனத்தில் என்றைக்குமே உண்டாகாது. அவ்விதமே தன்னுடைய அற்பத்தன்மைகளை எண்ணுமல் ஒரு பிரியம் வைத்து எவராவது நேசிக்கவோ, தனது உறவுத் தன்மையை மதித்து நெருங்கவோ துணிந்தால் அம்மட்டில் தானும் அந்த மதிப்பைக் காத்துக்கொள்ளாமல், இன்னும் எட்டிப்போய் அவர்கள் அருவருப்படையும்படி செய்யத் தகாதனவெல்லாம் செய்துவிடுவார்கள். இங்ஙனம் அதிகப் பிரசங்கமாய்ச் செய்வது தவறு என்பது அவர்களின் புத்தியில் என்றைக்குமே படப்போவதில்லை. இத்தகைய அற்பர்களுடன் நேசிப்பதிலும் உறவாடுவதிலும் நமக்குத் துன்பமும் தொல்லையுமேதவிர வேறு பயனேதுமில்லை. இன்னும் இந்த அற்பர்களிடம் பேச்சு வைத்துக் கொள்வதில் அவர்களைச் சேர்ந்த அற்பர்களிடமும் பழகச் சம்பவித்து, பிறகு அவர்களின் குணங்கள் நமக்குப் பிடிக்காமல் மனஸ்தாப சச்சரவுகளில் வந்து முடியும். ஆகவே, அற்பர்களிடமிருந்து நாம் தூர ஒதுங்கிவிடுவதே நன்மை.

(தொடரும்.)

---

"தலைவர்", "தேசாபிமானி" என்று பேர் படைப்பது ஒரு சாமர்த்தியமான வித்தை. கொஞ்சம் பண முடிப்பும், தீவட்டி வெளிச்சம் போடுவதற்கான பல தந்திரங்களும் இருந்தால்தான் அந்த வித்தை பலிக்குமாம். சில பெரிய மனிதர்களின் காலையும் ஆரம்பத்தில் பிடிக்கவேண்டி யிருக்குமாம்!




இன்று நமது கடையில் ஜெயலக்ஷ்மி என்ற பெண்மணியார் தமது அநுபவத்தை விவரித்தார். "நான் ஒரு தாசிப்பெண். என் தமக்கைகள் இருவரும் இன்னும் தாசித்தொழிலை நடத்திக்கொண்டு என் தாயாருடன் தாங்கள் பிறந்த வீட்டிலேயே இருக்கிறார்கள். அவர்களெல்லாம் நல்ல சிவப்பும் லக்ஷணமும் வாய்ந்தவர்கள். என் தாயின் அழகுக்குச் சரிசமானமானவர்கள். ஒரு கண்ணை அந்தப் பக்கம் அப்படித் திருப்பினால் அந்த வரிசையிலுள்ள ஆடவர்களெல்லாம் அப்படியே மயங்கிவிடுவார்கள்! பெரிய பிரபுக்களையே அவர்கள் 'கண்டிராக்டாக'ப் பெற்று வெகு ஆடம்பரமான நிலையில் வாழ்கிறார்கள். என் தாயாரிடம் கடைசியில் இருந்த ஒரு ஜமீன்தார் கன்னங்கரேலென்று கருப்பாய் 'புளூ பிளாக்' இங்கிபோல் அவ்வளவு நேர்த்தியாய் இருந்தாராம். தேகம் கருத்திருந்தால் அவர்கள் கொடுக்கிற பணமுங்கூடவா கருத்திருக்குமென்று என் தாயார் அந்த ஜமீன்தாரிடம் இரண்டு வருஷங்கள் இருந்தாராம். அதற்குப் பிறகு எனது பெரிய தமக்கை மங்கைப் பருவமுற்றுப் பரமசுந்தரியாய் ஒளி வீசினமையால் என் தாயாரை விட்டுவிட்டு என் தமக்கையைக் கைக்கொண்டு முதல் சோபனம் வெகு ஆடம்பரமாக அந்த ஜமீன்தார் நடத்திவைத்தாராம். இவர்கள் பறித்துக்கொண்ட ஏராளமான செல்வத்தில் அந்த ஜமீன்தார் பெரிய கடன்கள்பட்டு மனம் புண்ணாகி இனி தாசிகள் முகத்திலேயே விழிப்பதில்லையென்று சபதம் செய்துகொண்டு ஓடிவிட்டாராம். அந்த ஜமீன்தாருக்குத்தான் நான் பிறந்தபடியால் அவரைப்போலவே நல்ல கருப்புக்குட்டியாக,—ஆனால் தாயாரின் வதன சௌந்தரியமும் வாய்க்கப் பெற்றவளாய்,—பிறந்தேனும். இந்தக் கருப்புக்குட்டி என்ன பணத்தை வாரிக் கொட்டிவிடப் போகிறதென்றும், இந்தக் கருப்பை விரும்பி யார் வரப் போகிறார்களென்றும் என் தாயார் ஒரு நீண்ட யோசனை யோசித்துவிட்டுக் கடைசியில் என்னை நாகசுரம் வாசிக்கிற குமாரவேலு என்ற வாலிபருக்கு மணமுடித்து வைத்துவிட்டாராம். நான் தாசியாகாமல் குடும்ப ஸ்திரீயாக ஆனதையறிந்த என் தந்தையான ஜமீன்தார் எனக்குச் சொந்தமாய் ஒரு வீடு கட்டிக்கொடுத்து சில நிலங்களும் என் பெயருக்கு எழுதி சில வைர நகைகளும் போட்டு என்மீது மிகுந்த பிரியமுள்ளவரானார். மாதத்திற்கு இரண்டு தடவை பக்ஷணங்களுடனும் பழவர்க்கங்களுடனும் என் வீட்டிற்கு வந்து

---

அவரவர்கள் சோதனையிலும், வயிறு காய்ந்து கைவறண்டும் நொந்து கிடக்கையில்,——அந்த சமயம் தங்களைக் கவனிக்கவில்லையென்று வருத்தப்பட்டுக்கொள்கிற "நண்பர்கள்" (!) என்போரைச் சமாதானப்படுத்தவும், அவர்கட்கு சமாதானக் கடிதங்கள் எழுதவும் நேரமில்லையென்கிறார் ஒருவர்.

நான் குடித்தனம் செய்வதை வெகு ஆசையோடும் பார்த்துவிட்டு இரண்டு மூன்று தினங்கள்வரை இருந்து விட்டுச் செல்வார். ஜமீன்தாரவர்கள் வீட்டிற்கு நான் சென்ருல் ஜமீன்தாரரின் மனைவி தனது பர்த்தாவுக்குப் பக்கத்தில் என்னை உட்காரவைத்து ஒரே பந்தியில் அன்னம் பரிமாறி உண்ணச் செய்து நாங்கள் புசித்த பிறகு தாம் சாப்பிடச் செல்லுவார். என்னைத் தனது வயிற்றில் பிறந்த குழந்தைபோல் வைத்துக் கொஞ்சி வெகு அன்பாக நடத்துவார். இந்த வாழ்க்கையிலிருந்தும் நான் உணர்ந்துகொண்ட சில படிப்பினைகளையும் இங்கு தெரிவிக்கின்றேன்.

***

என் தமக்கைகள் என்ன சுக வாழ்வு வாழ்ந்தபோதிலுங்கூட அவர்களின் தேகம் ஆரோக்கியங் கொண்டதில்லை. காலமுழுமையும் ஒவ்வொரு வித மேக ரோகம் தான். தொள தொளத்துப்போன என் பெரிய தமக்கையை இப்பொழுது எந்த நாயும் விரும்பி வருவதில்லை. அவளும் என் தாயாரும் 'ருசி' பார்க்கப்பட்டவர்களால் ஒதுக்கப்பட்ட கட்டைகளாய் விட்டார்கள். இன்னும் அவர்களுக்கு மனச் சந்துஷ்டியாவது உண்டா? எந்தப் 'பிரபு'வினிடத்திலாவது நம்பிக்கையாவது உண்டா? அவர்கள் தருகிற பணத்திலேனும் திருப்தியாவது உண்டா? அல்லது நல்ல ஹிருதயமாவது உள்ளன்பாவது உண்டா? மோசபுத்தி யில்லாத—அகப்பட்டவரை சுற்றிக்கொள்ளாத—உத்தம நெஞ்சு உண்டா? எதுமில்லை. ஒரு தரம் என் தமக்கைகளின் வீட்டிற்கு நான் சென்றிருந்தேன். அவர்களின் வாழ்க்கையைக் கண்டு வாந்தி எடுத்தேன். எப்பொழுது பார்த்தாலும் புருடத் தடியர்களின் கனத்த கூட்டம். சதா வெற்றிலைப் பாக்குத் தட்டு! காமம் நிறைந்த கண்கள்! சித்த சுத்தியே யில்லாத கபட ஹிருதயங்கள்! இதனிடையே சந்தோஷமாம்! சிரிப்பாம்! பரிகாசமாம்! கேட்கத்தகாத ஆபாஸ மொழிகளாம்! அத்துடன் கொஞ்சம் சங்கீதமாம்! அந்தப் பணக்கார வாலிபனைப்பற்றி, இந்தச் சீமானைப்பற்றிக் கதைகளாம்! என் தமக்கைகளிடத்தில் சற்றுவது நாணுதல்என்பதையே காணேம்! நாணம் மிகுதிப்படுந்தோறும் காமக்கனியின் ரசமும் பெருகுமென்ருர் மதன நூலார். மனமொத்த சேர்க்கையில் இருவரின் உள்ளமும் தேகமும் ஒரு புது ஒளியைப் பெறுமென்பார். அந்த ஒளியும் இங்கில்லை! நாணுதலற்ற வெறுங்கட்டைகளாகவே என் தமக்கைகளுள்ளார். இதுவும் ஒரு வாழ்வா? இதென்ன 'எச்சில்' வியாபாரம்? எந்த ஆடவனும் மடமடவென்று வீட்டுக்குள் வந்து நுழைகிருனே! மிகவும் நெருங்கித் தொடப்படாத இடத்திலும் கைபடும்படிப் பேசுகிருனே! இது என்ன மரியாதை? குடித்தன வாழ்விலுள்ள ஒழுங்கு, சுகம், மனோரம்மியம், மதிப்பு, கௌரவம், மரியாதை, கற்பு, சுசீலம், உத்தம ஹிருதயம், யதார்த்தமான உள்ளன்பு, தெய்வபக்தி, ஊராருடைய சிலாகிப்பின் மேன்மை—இவைகளெல்லாம் இந்தத் தாசி வாழ்வில் வருமா? நான் கருப்புக் குரங்காய்ப் பிறந்தது என் பெரிய பாக்கியம். அதனுல்தான் எனக்கு இந்தக் குடித்தன அதிர்ஷ்டம் கிடைத்து என் நாயகனுடன் மனமொத்து வாழ்ந்திருக்கிறேன். ஒருமுறை நான் கனத்த ஜ்வரத்தில் விழுந்து

---

எதுவும் கல்வியே. பார்ப்பதெல்லாம் படிப்பே. கற்பதெல்லாம் பின்னுக்குத் துணையே. படித்தவனுடைய பெரிய சொத்து காகிதக் குப்பையே.

மிக்க மோசமாய்ப் போனபோது ஜமீன்தாரவர்களுக்குச் சொல்லி யனுப்ப, அந்த நிமிஷமே அவரும் அவரது மனைவியும் ஓடிவந்து நான் சுகப்படும்வரையில் என்னைச் சுற்றிக் கொண்டு என் காலடியிலேயே விழுந்துகிடந்தார்கள். வைத்தியர் களுக்குப் பை பையாகப் பணத் தைக் கொடுத்தார்கள். அந்த ஜமீன்தாரின் வீட்டுக்கே என் தமக்கைகள் இருவரும் சென்ற போது அவரது மனைவியார் வீட் டிற்குள் நுழையக் கூடாதென்று துரத்திவிட்டார். ஜமீன்தார் மாடியைவிட்டு இறங்காமலே இருந்துவிட, என் தமக்கைகள் வெட்கி வீடு திரும்பினர். குடித் தன ஸ்திரீக்கும், தாசித் தொழில் செய்கிற பெண்கட்குமுள்ள பேதத்தையும் அவர்களுக்கு நடக் கிற மரியாதைகளின் தாரதம் மியத்தையும் பார்த்தீர்களா? இதி லிருந்து நீங்கள் என்ன தெரிந்து கொள்கிறீர்கள்?'' என்ற வினு வுடன் தமது பிரஸங்கத்தை முடிவு செய்தார். அதன்பின் வேறு சிலர் பேசக் கடையும் பூர்த்திபெற்றது.

'பஹதூர்' பொன்வண்டுசெட்டியார்.

மனைவியைப் பணம் நகையா லும், குழந்தைகளைப் பொம்மை தின்பண்டங்களாலும், பத்திரா சிரியரை அவர் விரும்பிய வியா சங்களை எழுதித் தந்து அவரது சிறு வேலைகளைச் செய்வதாலும், நண்பர்களை உபகாரத்தாலும், உறவினறை விருந்துகளினாலும், பெண்தர விருப்போரைச் சொத் துகள் காட்டியும், ஸயனத்தின் போது அவன் கேட்கிற யாவற் றிற்கும் தலையை யாட்டியும், மயக் கிச் சரிப்படுத்தி விடலாமாம்.

## சிறிதே எனினும் அதன் வேலை பெரிது.

1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 0—கணித சாஸ்திரத்தின் எழுத்துகள் இவ்வளவே. இந்த எழுத்துகளே மாறிமாறி யும், பெருகியும், இடையிலும், மேலும் கீழும் வந்து உலகை ஆள்கின்றன. இவ்விதமே கவியின் சொற்களும் கொஞ்ச மே. அதுவும் உலகை ஆள்கின்றது. வைத்தியர் தரும் பஸ் பம் சொற்பமே யெனினும் அது பெரும் பிணியைத் தீர்க்க வல்லது. அந்த அல்பமான அவ்வொரு மனிதனாலேயே அக்குடும்பத்தின் வாழ்வு. தன் மனத்துட்கொண்ட அந்த ஒரு சிறு நம்பிக்கையே சோர்வை யகற்றி இன்னும் உற்சாக மாய் மனிதனை உழைக்கத் தூண்டுகிறது. கிடைத்த ஒரு சிறு தலைப் பெயரே ஒரு பெரிய வியாசம் எழுதத் துணை புரி கிறது. சக்தி சிறிதே எனினும் உலகை ஆள்வது அதுவே.

# * முகம்மது நபி அவர்களின் வைபவம்.

(முன் பக்கம் 366-லிருந்து.)

ஆத்திரம் மேலிடப் பெற்ற மக்காவிலுள்ள சிலர், இவ்வாறு மகம்மது நபிகள் செய்துவரும் ஸாகஸமான காரியங்களையெல்லாம் பார்க்கப் பொறாமல் அவரை அடித்துக் கொன்றுவிடுவதாகக் கூட நிச்சயித்தார்கள். அப்போது ஆலி என்பவர் நபிபிரானை மாறுவேஷம் பூண்டு ஓடிப்போகும்படி செய்திராவிட்டால் அவர் அன்றைக்கே இறந்துபோனவர்தாமென்கிறார்கள். அங்கிருந்து ஓடிப்போன மகம்மது நபிகள் தம் நேசரான ஆபூபேக்கர் என்பவருடன் ஒரு மலைக் குகையில் ஒளிந்து கொண்டிருந்தார். அங்கே அவர்கள் ஒளித்திருக்கும்போது ஒரு நாள் யாரோ வருவது போலக் காலடியோசை கேட்க, பேக்கர், "நாம் இரண்டு பேராயிருக்கிறோமே; யாராவது வந்தால் என்ன செய்கிறது" என்று பயந்து சொல்ல, அதற்கு மகம்மது நபிகள், "ஏன் இரண்டு பேர் என்கிறாய்; மூன்று பேரல்லவா? கடவுள் ஒருவர் நம்முடன் இருப்பதை மறந்து போனாய் போலும்" என்று பக்தியுடன் பேசினாராம். உடனே அந்தக் காலடியோசை கேளாமல் போய்விட்டதாம். இவ்வாறு மகம்மது நபிகள் மக்காவினின்றும் சென்றுவிட்ட நாள்தான் மகம்மது சகத்திற்கு முதனாளாகக் கருதப்பட்டிருக்கின்றது.

***

இங்கே இன்னொன்றும் சொல்லுகின்றனர். மகம்மது நபிகள் தம் தோழனுடன் அந்தக் குகைக்குள் புகுந்தவுடனே அதன் வாயிலில் குறுக்காய்ச் சிலந்தி வலை யொன்று பின்னப்பட்டு அதற்குள் ஒருவரும் புகாததுபோல் வெளியார்க்குத் தோன்றும்படி யிருந்ததென்கிறார்கள்.

***

மூன்றுநாள் அவ்விடத்திலிருந்து பிறகு அவர்கள் அங்கிருந்து யாத்ரப் என்னும் நகரம் போய்ச் சேர்ந்தார்கள். அந்த நகரத்தா ரெல்லாரும் மகம்மது நபிகளின் மதத்திற்கு உட்பட்டவர்களாகி அவரை ஆதரவுடன் வரவழைத்து அவர் சொற்படி கேட்டு நடந்தார்கள். உடனே அவ்விடத்தில் கோவில் ஒன்று கட்டப்பட்டது. சிறிது காலம் அங்கேயே அவர் சுகமாயிருந்து பின்னும் பல இடங்களிலும் தமது மதம் பரவுவதற்கு வேண்டிய வழிகளைத் தேடிக்கொண் டிருந்தார்.

***

இவ்விதமாக மகம்மது நபிகள் செய்துவரும் முயற்சியைக் கேட்டு விக்கிரகாராதனம் செய்யும் யூதர்கள் அநேகர், இனி நாம் சும்மா இருந்தால்

---

* முகம்மது நபிகளைப்பற்றிய இவ்விஷயம் சென்னைத் துரைத்தனத்தாரின் ஆதரவில் முன்பு வெளியான "ஜநவிநோதிநி"யிலிருந்தும் அப்படியே எடுத்ததாதலின், அவ்விஷயங்கட்குப் பத்திராசிரியர் உத்தரவாதி யல்லர்.

அநார்த்தம் விளையுமென்று அவர்மேல் படையெடுக்க எத்தனித்து, மக்காவிலுள்ள சேனைகளையும் கூட்டிக் கொண்டு சென்றூர்கள். ஆயினும் கடைசியில் அவரை வெல்ல முடியாமல் அவர்கள் தோற்றுப்போயினர். ***

பின்பு ஒருகால் மகம்மது நபிகள் மறுபடியும் தமது பிறப்பிடமான மக்கா நகரத்தைப் பார்த்து வரவேண்டுமென்று தம் கூட்டத்தாருடன் செல்ல, மக்காவிலுள்ளவர்கள் அவர்களை வரக்கூடாதென்று மறுத்தது மாத்திரமேயன்றி, மேலே கல்லெடுத்தெறிந்து துரத்தவும் ஆரம்பித்தார்கள். ஆயினும் பிறகு வெகுதூரம் தர்க்கம் பேசியதன்மேல், மறு வருஷம் வந்தால் தாங்கள் ஒன்றும் செய்வதில்லை, மூன்றுநாள் இங்கேயே வந்திருந்து போகலாமென்று அவர்கள் அனுமதி யளித்தார்கள். அப்படியே ஆகட்டுமென்று மகம்மது நபிகள் மறு வருஷம் அவ்விடத்துக்குச் செல்ல, மக்கா நகரத்தார் தாம் வாக்களித்தபடியே அவர்களை வரவழைத்துக் கொண்டனர். (மற்றதில் முடிவு.)

"ஜநவிநோதினி"

சிடுசிடு என்றுத் தன்னவர்மீது பட்டபேரெல்லாம், அங்ஙனம் தாம் படக்கூடியவர்கள் மாண்டொழிந்த பின்னர் தாம் சிடுசிடுக்க எவரையும் காணது ஏமாறிப் பரம சாந்தக் கட்டைகளாகி ஒரு மூலையில் அடங்கி விடுகின்றனர். தவறிப்போய் எவரையேனும் சிடுசிடுப்பினே அன்னேர் எட்டிப்பாராது தூரப் போய் விடுகின்றனர். இவர்களின் அதிகாரம் செல்வதில்லை. சிடுசிடு என்று பட்ட பழக்கமும் இலகுவில் விடுவதில்லை. தன்னை யறியாமலே வருகிறது. வந்து என் செய்ய?

---


# பிரஜாநுகூலன்

எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு பத்திராசிரியர்.

இது நாவல்கள் நிறைந்த அநுபவக் களஞ்சியமான சிறந்த மாதப்பத்திரிகை. **1904**-ம் வருஷ முதல் **25**-வருஷங்களாக நடைபெற்று வருகின்றது. வெகு ருசிகரமான அநுபவங்களுடன் அதி சிலாக்கியமாயிருக்கும். பக்கங்கள் **32**.—"அமிர்தகுண போதினி" நேயர்கள் அதன் ஆசிரியர் நடத்தும் பழமையான இப் பத்திரிகையையும் ஆதரிப்பது அவசியம். வருஷ சந்தா ரூபாய் **1**.

மாதிரி ஒரு அணு. ☞ "பிரஜாநுகூலன்" ஆபீஸ், ஸ்ரீரங்கம்.




# கமலாவதி

(All Rights reserved by the Author.)

(302-ம் பக்கத் தொடர்ச்சி.)

அரமனைக் கெதிரிலுள்ள மைதானம் சண்டைசெய்ய ஏற்பாடாயிற்று. அரமனைவாயிலில் இந்துக்கள் அமர்ந்தனர். மைதானத்துக் கெதிரில் முஸ்லிம்கள் கூடினர். இவர்கள் நடுவில் இறைவன் பீதாம்பரம் அணிந்து, தலையில் தங்கமுடி தரித்து ஓர் சிங்காசனத்தில் உட்கார்ந்திருந்தான். மேலே பொற்குடை கவிய, இருபக்கமும் சாமரை வீசலாயின. அரசிளங் குமரிகளுக்கு ஆண்மக்கள் காணுவாறு தனியிடம் அமைந்தது.

***

பத்ஜங்கும், இராம்சிங்கும் தோள் தட்டி வந்தனம் செய்து கத்திகளைக் கையிற் பிடித்தனர். அத்தருணத்தில் அந்தப்புரத்தின் சன்னல் வழியாய் அம்பொன்று வந்து பத்ஜங்கின் கவசத்தில் தைத்தது. உடனே அங்கிருந்த முஸ்லிம்கள் ஆறாக் கோபம் கொண்டு அமர்செய்ய எழுந்தார்கள். இந்துக்களும் ஆத்திரப்பட்டு அவர்களை எதிர்க்க ஆரம்பித்தார்கள். பத்ஜங்கு கவசத்தில் தைத்த அம்பைப் பிடுங்கிப் பார்க்க, அதில் கமலாவதியின் பேர் இருக்கக் கண்டு, இந்துக்களையும், முஸ்லிம்களையும் கையமைத்து,

"எனது இந்து நண்பர்களே! நாம் சமாதான ஏற்பாடு செய்திருந்தும், இவ்வாறு என்மீது பர்ணம் எய்தது தவறு; யுத்தமுறை அறிந்த ஆண்மகனெவனும் இவ்விதம் செய்யான். என் இஸ்லாமிய சகோதரர்களே! நீங்கள் ஆய்ந்தோய்ந் தறியாமல் ஆத்திரப்பட வேண்டாம். இக்கணை விட்டவள் என் மனத்தை வாரிச்சென்ற வனிதையாவாள். என் கண்ணினுண் மணியும், காமர் பூங்கொடியுமான கமலாவதி தன் காதலைக் காட்டும் மலர்க்கணை யென்றுமதிப்பேன்'' என்றான்.

***

அப்பால் அவ்வரவர்கள் உட்கார, பத்ஜங்கும், இராம்சிங்கும் திரும்பவும் சண்டை செய்ய ஆரம்பித்தார்கள். இராம்சிங்கு கையில் பிடித்த கத்திப் பிடியில் சித்திரங்கள் செதுக்கி யிருந்தன. கேடகமோ காண்டாமிருகத்தின் தோலிற் செய்து நடுவில் இருப்

---

நாம் இருக்கும் உத்தியோகசாலையில் தன்னையும் சேர்த்து வயிற்றுப் பிழைப்பு காட்டும்படி வெகு பணிவாக இன்றைக்கு நம்மை கெஞ்சுவோர்தான் நாளைக்கு நமது இடத்துக்குப் போட்டி மனிதராய் நம்மை வெளியே தூரத்தி நமது நாற்காலியில் உட்காரக்கூடியவர்களாகவும் இருப்பார்கள். எச்சரிக்கை.

புச் சலாகை யிருந்தமையால் தன்னைக் காத்துக்கொள்ளவும், ஈட்டியைப்போல் எதிரியைக் குத்தவும் அநுகூலமா யிருந்தது.

***

பத்ஜங்கினுடைய முகம் மனவுறுதியையும் தேகவலிமையையும் காட்டும். கண்கள் சிறியனவாயினும் அடிக்கடி சுழல்வனவாயும் ஊன்றிப் பார்ப்பனவாயு மிருந்தன. உயரத்தில் ஐந்தடிக்கதிக மிரான். கறுத்த தலைமயிர்க்கிடையில் இளநரை இங்கொன்றும், அங்கொன்றும் தோன்றும். அவன் அகன்ற மார்பினன்; வலியமைந்த தோளினன். அவன் கையிலிருந்த கத்தியும், கேடகமும் சித்திரங்களில்லா விடினும் மிக்க உறுதியுள்ளன. அவன் செய்த சண்டைகளி லெல்லாம் அவனுக்குத் துணை நின்றன.

***

முதல் முதல் இராம்சிங்கு தன்னைத் தாக்க எதிரியை வேண்டினான். இவன் இவ்வாறு வேண்டியது தன் இரக்கமுள்ள சிந்தையைக் காட்ட வேண்டு மென்பதோ, அல்லது தன் வீரத்தைத் தெரிவிக்க வேண்டுமென்பதோ, மற்று யாதோ அறியோம். ஆனால் வாய்த்த சமயத்தைப் போக்குவது தவறென் றெண்ணும் பத்ஜங்கு நல்லதென்று தன் கத்தியால் ஓங்கி இராம்சிங்கின் மேல் வீசினான். அவ்வீச்சால் இராம்சிங்கு தலையிலணிந்த இருப்புக் கவசம் வெட்டுண்டது. மூளை சிதறிச் சித்தம் கலங்கிற்று. ஆயினும் அவன் சிறிது நேரத்தில் தெளிந்து தன் கத்தியால் ஓங்கி பத்ஜங்கைத் தாக்க, அவ்வீச்சு பத்ஜங்கின் இடையிற் பட்டு அவன் தாங்க முடியாது தரையில் விழுந்தான்.

(மற்றதில் முடிவு.)

ப. சி. கோவிந்தசாமி ராஜா.

## கர்வப்பேயின் திருவிளையாடல்கள்!

தான் ஓர் இடத்தில் அந்தக் கருப்பனை வேலைக்குச் சிபாரிசு செய்து அமர்த்தியதும் ஒரு காலம்! அவனுக்கு என்ன சம்பளம் தரலாமென்று தன்னைக் கேட்டதற்குப் பத்து ரூபாய் அவனுக்குப் பெரிய சம்பளம் என்று கர்வத்தோடு சொன்னதும் ஒரு வேளை! தான் அமர்த்திய இடத்தில் பத்து ரூபாய்க்கு விலை மதித்ததற்காக அந்தக் கருப்பன் கோபித்து வேறிடம் சென்று இப்போது தன்னைப்போலவே நூறு ரூபாய் சம்பளத்தில் சரிசமமாக அமர்ந்திருப்பதைக் காணக் கண்கள் கூசுகிறது. அவன் முன்னால் வரவுங்கூட உடல் நாணுகிறது! கர்வப்பேய் படுத்தும் பாடு கொஞ்சமா?

இன்றைக்கு ஐயோ என்று இரக்கப்பட்டு நமது வீட்டுக்குள் சேர்த்தவர்கள் தான் நாளைக்கு நம்மை எதிர்க்கிற கொடிய சத்துருக்களாவார்கள். எப்போது குடும்பம் பிரிந்து தங்களுக்கு 'நடு லாபம்' கிடைக்குமோவென எதிர்பார்ப்பர்.

# மணிகளைப்பற்றிய சில விசேஷங்கள்.

பிள்ளைகள் பிறந்து ஒரு பொருளைக் கவனிக்கும்படி யான தருணம் வந்தவுடனே முதல் முதல் கருத்தோடு அறியத்தக்கது ஓசையே. மணியோசையையே முக்கியமாய்க் கேட்டுக் குழந்தைகள் களிக்கும். இது காரணமாகவே பலவிதமாய் ஓசையுண்டாக்குகிற கிலுகிலுப்புகளை அக்காலத்தில் குழந்தைகளுக்கு விளையாட்டுக் கருவிகளாகச் செய்து கொடுப்பது வழக்கம். அந்தக் கருவிகளைக் குழந்தைகள் தம் சிறு கைகளால் ஆட்டி ஓசையுண்டாக்கும்போது பார்ப்பவர்களுக்கும் வெகு பெருமையா யிருக்கும்; அம்மக்களுக்கும் மிக்க மகிழ்ச்சி யுண்டாகும். மணிகள் ஒலிக்கும்போது அவை ஏதோ தம்மோடு பேசுவதாகவே குழந்தைகள் எண்ணுகின்றன. எப்படி எண்ணினாலும் எண்ணட்டும். ஓசை குழந்தைகளுக்குக் கேட்கச் செவிக்குச் சுகமா யிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. குழந்தை கொஞ்சம் பெரிதானவுடனே கடியார யந்திரங்களின் மணி யோசையைக் கவனிக்கும். பிறகு இதென்ன இது, ஒன்றுமில்லாமல் தனக்குத் தானே அடித்துக் கொள்கிறதே யென்று தன் சிறு புத்தியைக்கொண்டு சிந்திக்கும். பின்னும் கொஞ்சம் வயது முதிர்ந்தால் ஆலயங்களிலுள்ள பெரிய மணிகளின் ஓசையையும் கவனிக்கும்படி யாகும். இவ்வுலகத்திலுள்ள பொருள்கள் பலவற்றுள்ளும் பிள்ளைகள் முதலில் அறிகின்ற பொருள் மணியோசைதான்.

***

முதல் முதல் மணி யென்று ஒரு பொருள் ஏற்பட்ட காலம் எப்போதோ அது ஒருவருக்கும் தெரியாது. ஆதியில் மணிகள் வழங்கினது இவ்விந்தியாவிலும் சீன தேசத்திலுமே. பின்பு வெகுகாலம் சென்ற பிறகுதான் ஐரோப்பா தேசத்தார்க்கு இது தெரியலாயிற்று.

***

ஆதியில் மணி இப்போது இருக்கிறவடிவமாய் இருந்ததாகத் தெரியவில்லை. தாசிரிகள் வைத்திருக்கிற சேமக்கலம் போலத் தட்டையான லோகத் துண்டையோ கல்லையோ வைத்துக்கொண்டு அவற்றையே கட்டைகளால் அடித்து நாதம் உண்டாக்கி மணியாகப் பாவித்திருந்தார்களெனக் காண்கிறது. அதே விதமாக லோகத்தால் செய்த வாத்தியமொன்று சீன தேசத்தார் இன்னும் வைத்திருக்கிறார்கள். அது தமது தேசத்தில் அநாதியா யிருக்கிற வாத்தியமென்று அவர்கள் சொல்லுகிறார்களாம். எந்த லோகமானாலும் ஒரு நுனியில் கயிறு கோத்துப் பிடித்துக்கொண்டு கொம்பால் அடித்தால் நாதம் உண்டாகும். அதே மாதிரி முதலில் எவனோ தற்செயலாய் அடித்துப்பார்க்க இனிய ஓசை உண்டாகவே, அது எங்கும் பிரசித்தமாகிப்

---

இல்லற மார்க்கத்தினியல்புகளை இனிதெடுத்து விளக்குவதோர் உறுதி நூலாய், இனிய தமிழ்நடை வாய்ந்ததாய் இலங்கும் "அமிர்த குணபோதினி"யை உங்களுக்கு அருகிலுள்ளோரும் பெற்றுப் பயனெய்துமாறு அன்னோரைச் சந்தாதாரராக்கச் சற்றுப் பிரயாசை எடுத்துக்கொள்ள வேண்டுகிறோம்.

பின்பு அம்மாதிரி அநேக விதமான ஓசைக்கருவிகளை உண்டாக்கிக்கொண்டிருப்பார்கள். வர வர நாகரிகம் விருத்தியாக, இப்போது காணப் படுகிறபடி பலவித விசித்திர வடிவமாகப் பெரிதும் சிறிதுமாய் வேண்டியபடி மணிகள் செய்துகொள்ள ஆரம்பித்தார்கள். காசி முதலான இடங்களில் ஹிந்து தேவாலயங்களில் பூஜா சமயங்களில் அடிப்பதற்கு உதவும் பெரிய மணிகள் பூர்வகால முதற் கொண்டு இருந்து வருகின்றன.

***

ஐரோப்பா தேசத்துக் கோயில்களிலே பெரிய மணி கட்ட ஆரம்பித்தது சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு தான். நெடுநாளைக்கு முன்னே ஜெயசீலனை வில்லியம் என்னும் அரசன் இங்கிலாந்தில் அரசாண்ட போது, அத்தேசத்தில்எவ்விடத்திலும் இரவு எட்டுமணிக்குமேல் நெருப்பு எரியக்கூடாதென்று கட்டளை யிட்டு, அதற்காகக் கர்ப்பியூ என்று ஒரு பெரிய மணி ஏற்படுத்தி அம்மணியின் ஓசை கேட்டவுடனே அனைவரும் அவரவர் வீட்டிலுள்ள தீபம் நெருப்பு எல்லாவற்றையும் அணைத்து விட்டுப் படுக்கவேண்டுமெனத் திட்டம் செய்தானென்பது எங்கும் பிரசித்தமான செய்தி.

***

இங்கிலாந்தில் வெஸ்டு மினிஸ்டர் என்னும் மாளிகையில் பெரிய மணி யொன்று இருக்கிறது. அது சுமார் அறுபது பாரம் எடை உள்ளது. ஐரோப்பா கண்டத்து இதர தேசங்களில் இன்னும் மிகப் பெரிதான மணிகள் செய்து கட்டி வைத்திருக்கிறார்கள். மாஸ்கோ பட்டணத்தில் ஒரு மணி யிருக்கிறது. அதன் எடை சுமார் அறுநூறு பாரம் இருக்கிறதென்கிறார்கள். அவ்வளவு பெரிய மணி எங்கும் கிடையாது. அந்தப் பெரிய மணி கட்டியிருந்த கட்டடம் அநேக வருஷங்களுக்கு முன்னே பற்றிக்கொண்டு எரிந்துபோக, அந்த மகா பூதம் ஆதாரமற்றுக் கீழே விழுந்துபோயிற்று. விழுந்த வேகத்தில் அம்மணி ஒரு புறத்திலே கொஞ்சம் உடைந்துபோய், இப்போது உதவியற்றுக் கிடக்கிறது. அந்தப் பட்டணத்திலேயே இன்னும் பல பெரிய மணிகள் இருக்கின்றன. அவற்றுள் நானூறு பாரம் எடையுள்ள மணி யொன்றிருக்கிறது. அதுதான் இப்போது இருப்பவைகளுள் பெரியது. மாஸ்கோ பட்டணத்தில் மணிகள் எப்போதும் விசேஷம். ஜர்மனி தேசத்து எர்பர்ட்டு என்னும் பட்டணத்தில் பெரிய மணி ஒன்று உண்டு. அதன் சுற்றளவு இருபத்து நான்கு அடிக்கு அதிக மிருக்கின்றதாம். நான்கின், பெகின் முதலிய சீன தேசத்துப் பட்டணங்களிலும் சில பெருத்த மணிகள் இருக்கின்றன.

***

மணிகள் செய்கையில் மற்ற லோகத்துடன் வெள்ளியும் கூட்டிவார்க்கலாமா வென்று சோதித்தனர். நாணயமாகச் செய்யும்போது வெள்ளி நல்ல நாதம் கொடுக்கிறதென்றாலும், மணிகளோடு சேர்ப்பதற்கு அவ்வளவு சிறந்த லோகமல்ல வெனத் தெரிய வந்தது.

***

யுத்தம் முதலான பெருங் காரியங்கள் ஜெயமானால் அதற்காக ஜய பேரிகை அடிப்பதுபோலவே, பெரிய மணிகளையும் அடித்து அந்தச் சந்தோஷ சமாசாரத்தை எங்கும் பிரசித்தப் படுத்துவார்கள். மேலும், மணிகள் தேவ பூஜை முதலிய பற் பல காரியங்களுக்கும் உபயோகமாகின்றன.




## தெய்வீக சக்தி வாய்ந்த அம்மையார்.

மேற்கண்ட தலைப்புடன் தமிழ்ப் பத்திரிகைகளில் விஷயங்களைக் கண்ணுற்ற நான் விவரமாக அவற்றை அறியவேண்டி எனது நண்பருடன் திருச்சியி லிருந்து புறப்பட்டேன். அம்மையார் வசிக்கும் மருதூர் என்னும் கிராமம் திருச்சி - விழுப்புறம், குறுக்குப் பாதையில் செந்துரை என்னும் ஸ்டேஷனிலிருந்து ஏழாவது மைலில் உள்ளது. திருச்சியிலிருந்து செந்துரைக்கு 14-அணா ரயில் சத்தம். ரயில் ஸ்டேஷனிலிருந்து மருதூர் போக இரட்டைமாட்டு வண்டிகள் கிடைக்கின்றன. காலை 9-மணிக்கு ஸ்டேஷனை அடைந்த நாங்கள், காட்டுவழிசீர்கேடான நிலையிலிருந்தபடியினால் அவ்வூரை யடைய பகல் 1-மணியாயிற்று. குளத்தில் நீராடி அம்மையின் இல்லத்தை அடைந்தோம். நான் தேங்காய் பழம் வாங்கிச் செல்லவில்லை. அங்கிருந்தவர்கள் அதன் கிரயத்தைத் தட்டில் வைத்துவிடின் பிரஸாதம் கிடைக்கும் என்றபடியினால் அந்த விபூதித் தட்டில் 4-அணா போட்டேன். விபூதிப் பொட்டலம் இரண்டு எடுத்து ஒன்றை என் கையிலும் மற்றொன்றை என் நண்பர்கையிலும் கொடுத்தார்கள். பிறகு தட்டை "முருகா" என்று உயர்த்தவே பணம் மாயமாக மறைந்தது. 5-நிமிஷம் கழித்துப் பொட்டணத்தைத் திறந்து பார்க்க, அதில் நெல்லும் சூடமும் இருந்தது. நெல், சூடம், மிளகு, பூ, இவற்றுள் ஏதாவதிருந்தால் நல்லதாம். உமி, கரி, சாம்பிராணி இவைகளிருப்பின் தீமையாம். எங்களை நோக்கி அம்மையார் "நலமுண்டாகும்" என்றனர். பிறகு தட்டை உயர்த்தினர். "கிண்" என்ற ஓசை உண்டாயிற்று. எனக்குத் தேங்காய் சூடம் பிரஸாதம் வந்து பெற்றுக் கொண்டேன். என் நண்பருக்கு மலைப்பழமும், ஊதுவத்தியும் கிடைத்தது. இன்னம் அங்கு வந்திருந்தவர்களுக்குக் கிடைத்த பிரஸாதங்களையும் கண்ணால் கண்டு ஆச்சரிய மடைந்தோம். அம்மையார் ஐந்து குழந்தைகளுடனும், கணவனுடனும் இல்வாழ்க்கை நடத்தும் ஓர் குடும்பப் பெண்மணி. வீட்டு வேலைகளையும் கவனித்துக்கொண்டு வந்தவர்களுக்கும் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அம்மையார் வயிற்றிலுதித்த குழந்தைகளைத் தட்டில் உயர்த்தி "முருகா" என்றதும் மாயமாக மறைந்து சிறிதுநேரங் கழித்து முடிமயிர் வாங்கி மொட்டை யடித்துக்கொண்டு திரும்பியதாகவும் அவ்வூர் ஜனங்கள் சொல்ல நாங்கள் கேள்விப்பட்டோம். இது மிகவும் ஆச்சரியமாகவே இருக்கிறது. பிறகு நானும் எனது நண்பருடன் ஊர் வந்து சேர்ந்தேன்.

K. விஜயராகவன்.

[ஒரு காரியத்தை உத்தேசித்துச் செல்பவர்களுக்கு அதை நிறைவேற்றிக் கொடுக்கும் பொறுப்பை அம்மையார் ஏற்றுக்கொள்ளாமல் அதைத் தமது வழிபடு கடவுளின் சித்தத்துக்கு விட்டு விடுகின்றனராம். சென்று வந்த சிலர் காரியசித்தி கண்டதாக ஏதுமே தோன்றவில்லை யென்றனர். ஆனால் அற்புதங்கள் மட்டும் அவ்வளவும் உண்மைதானாம்.—ப-ர்.]

# சந்திரனைப் பற்றி

வெகு நுட்பமாகப் பரீக்ஷித்தறியத்தக்க பொருளொன்று வேண்டுமானால், அதற்கு சந்திரனே ஏற்றது. சந்திரனைப்போல இவ்வளவு சமீபத்திலிருந்து சாஸ்திர விசாரத்திற்கு மிகவும் அனுகூலமானது வேறொன்றுமில்லை. முக்கியமாகக் கவிகளும் பல இடங்களில் சந்திரனையே விசேஷமாய்ச் சிறப்பித்து விதம் விதமாக வர்ணித்திருக்கிறார்கள், காதலுக்கு சந்திரன் வெகு ஸமீபம். இஷ்ட பூர்த்திகளைச் செய்வதும், பிரிவாற்றாமையை மிகுதிப்படுத்திக் காட்டுவதும் சந்திரனே. நிலவு தரும் இன்பம் வேறெதிலுமில்லை. இருளால் உண்டான உள்ளத்து நடுக்கம் நிலா தோன்றியதும் மறைகின்றது. சந்திரனுடைய சலனத்தினாலல்லவா வருஷம் பன்னிரண்டு மாதங்களாகவும், மாதம் இரண்டு பக்ஷமாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

* * *

சந்திரன் நமது பார்வைக்கு ஒரு சோதி மண்டலமாய்த் தோற்றினும் நுட்பமாய்ப் பரீக்ஷித்துப் பார்த்ததில் சந்திர மண்டலம், நீர்-காற்று-ஜீவகோடி-வருக்ஷகோடி இவை ஒன்றுமில்லாமல், கல்மலைகளும் அக்கினி மலைகளும் நிறைந்ததென்றும், தன் சொந்த நன்மைக்காக வல்லாமல் இப்பூமியின் நன்மைக்காகவே இதைச் சுற்றி ஓயாமலோடுகிற கல்மயமான கோளமென்றும் கண்டறிந்திருக்கிறார்கள்.

* * *

இப்பூமிக்கும் சந்திரனுக்குமுள்ள தூரம் சுமார் 240000-மைல். சூரியன் இப்பூமிக்கு அதமம் 93000000-மைல் தூரத்திலிருக்கச் சந்திரன் இவ்வளவு சமீபத்திலிருப்பதனாலே தான், இப்பூமியைப் போலப் பனிரண்டரை லக்ஷம் மடங்கு பெரிதான சூரியனும் இப்பூமியில் நாற்பதில் ஒருபங்கு அளவான சந்திரனும் நமது பார்வைக்கு ஒரே அளவாகத் தோன்றுகின்றன. சந்திரனுக்கு இயற்கையாய் ஒளி கிடையாதென்பதும், தன் மேல் விழும் சூரியகிரகணத்தாலேயே நமக்குத் தோன்றுகின்றதென்பதும் தெரிந்த விஷயம். சில காலங்களில் இப்பூமியில் பட்டு அங்கிருந்து பிரதிபலிக்கும் சூரிய கிரகணத்தாலும் சந்திரனுக்குப் பிரகாசமாவதுண்டு. சந்திரமண்டலமானது சூரிய கிரணத்தை ஏற்றுக்கொண்டு,மறுபடி அதைப் பிரதி பலிக்கச் செய்யத் தகுந்த ஒருவித மந்தமான உருவமாம். சூக்ஷ்மமாய்க் கணக்கிட்டுப் பார்த்ததில் அதன் குறுக்களவு 2160-மைல் என்கிறார்கள். அதாவது, இப்பூமியின் குறுக்களவில் நான்கிலொரு பங்காம். ஒரே அளவாய் இருபத்தேழரை நாளைக்கொருதரம் சந்திரன் தன்னைத் தானே ஒரு சுற்று சுற்றிக்கொண்டு இப்பூமியையும் ஒரு சுற்று வருகின்

---

எப்போது இவ்விரவு விடியுமோ என்று எண்ணுவோர் எவரெவர்?

(1) பிணியாளர். (2) தீய கனாக் கண்டோர். (3) நாளைக்குப் பலபல செய்யக் கருதுவோர். (4) தமக்கு வேண்டியவர்களின் வரவை எதிர்பார்ப்போர்.

றது. பூமி தன்னைத்தான் ஒரு சுற்று வர ஒருநாள் செல்லுகிற தென்றால், சந்திரன் தன்னைத்தான் ஒரு சுற்றுவர இருபத்தேழரை நாள் செல்லுகிறது. இப்படியாகச் சந்திரன் தன்னைத் தானே ஒருதரம் சுற்றிக்கொள்வதற்கும், இப்பூமியைச் சுற்றி ஒரு சுற்று வருவதற்கும் ஒரே அளவான காலம் செல்லுகின்றமையால், எப்போதும் சந்திரனுடைய ஒரே ஒரு பக்கமே இப்பூமியிலுள்ளவர்களுக்குப் புலப்படுகின்றது. சிலவேளைகளில் பாதிக்கு மேலும் சந்திரனில் சிறிதளவு நாம் காணலாம். அதாவது, ஏழில் நான்கு பங்கு காணும்படியாகச் சந்திரனுடைய நிலை அமைந்திருக்கின்றது. இந்த நுட்பத்தைக் கண்டறிந்த வித்வான் காலிலியோ ஆவர்.

***

சந்திர மண்டலத்தில் ஜலமும் வாயுவும் இல்லையாதலால், ஈரமென்பதே கிடைக்கமாட்டா. ஈரமற்ற இடத்தில் மேகம் உண்டாவதற்கு இடமில்லை. மேகம் இல்லையாகில் காலை மாலை வெளிச்சமும் இல்லை. ஆதலால் அங்கே சூரியன் அஸ்தமித்துப்போனால் திடீரென்று இருண்டுபோம். சப்தத்தைக் கொண்டுபோக வாயுமண்டலம் இல்லையாதலால் ஓசையும் உண்டாவதற்கு இடமில்லை. எப்போதும் அங்கே நிச்சப்தமாயிருக்கும். ஆகவே, அங்கு பிராணிகள் ஒருபோதும் பிழைத்திருக்கமாட்டா. பூமி, சந்திரன் ஆகிய இவ்விரு கோளத்திற்கும் சூரியனொளி மட்டும் சமமாயிருக்க, ஒரு கோளம் மிகவும் மனோகரமாய் உயிர் வாழ்க்கை யமைந்து சமுத்திரங்களாலும், வாயுமண்டலத்தாலும் சூழப்பட்டு வெவ்வேறு விதமான பருவங்கள் உள்ளதா யிருக்கிறது. மற்றொரு கோளமோ எவ்விதமான உயிர்க்குமிடமாகாமல் முழுதும் எரிந்து தீய்ந்துபோன வெட்டவெளியாக மிகவும் பயங்கரமாயிருக்கிறது. ஆ! இப்பூமியின் தன்மையும், அதையடுத்த உபக்கிரகமான சந்திரனது தன்மையும் ஒன்றுக்கொன்று எவ்வளவு விரோதப் பட்டிருக்கின்றன!

(மற்றவை மற்றதில்.)

## ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம்!

ஒரு முறை பால் கெட்டுவிடின் அது எவ்வாறு மீண்டும் நல்ல பாலாகாதோ, அதைப்போலவே மனித ரத்தத்தில் ஒருமுறை அன்னிய ஸ்திரீயின் விஷம் ஊறிவிடின், பின்பு எவ்வளவுதான் நல்லவர்களாக நடந்து கொண்டாலும் அந்த உடம்பு நல்ல உடம்பாவதில்லை. கடவுள் கிருபையால் எவரிடமும் அகப்படாதவர்கள் பாக்கியசாலிகளே. சென்றதைக் குறித்துச் சிந்திப்பதில் பயனில்லை என்றாலும், அந்த ஊறிய விஷம் வருஷங்கள் ஏற ஏற முற்றிக் கனத்த உபாதைப்படுத்தும்போது பழய தவறுதலுக்குக் கதறவே வைக்கும்! ஆஸ்பத்திரியில் டாக்டரும் கத்தியைக் கதறுகிறவனின் கண்ணுக்கெதிரே காட்டுகிறார்! ஐயோ! அப்பா!

# சென்றமாதம்

**இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து**

"நிமிர்ந்து போட்டதேன்ன, துனிந்து எடுத்ததென்ன?" என்று இம்மாத முதவில் வெளியான நமது ராஜப் பிரதிநிதியின் அறிக்கையைப் பற்றி அனைவரும் ஆராய்ந்துகொண்டிருக்கின்றனர். இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து வழங்கப் படுமென்றும், அதன் சார்பாய் ஸர்வ கக்ஷி மகாநாடு ஒன்று கூட்டப்படுமென்றும் அந்த அறிக்கையில் காணப் படுகிறது. அது விசேஷித்த நல்லுணர்ச்சியுடன் வெளியிடப்பட்டுள்ள தென்பதை ஒப்புக்கொள்ளுகிறோம். எனினும், இன்ன வருஷத்தில் குடியேற்ற நாட்டு அந்தஸ்து கொடுக்கப் படுமென்ற விவரம் அதனிற் காண வில்லை. அறிக்கையும் தெளிவாக இல்லை. ஆயினும், இராஜப்பிரதிநிதியுடன் ஒத்துழைத்து ஸர்வகட்சி நாட்டில் சுயராஜ்ஜிய திட்டத்தைத் தயாராக்கவே இந்தியா விரும்புகின்றது.

***

**பாச்சா சாகோ சுடப்பட்டமை**

"நானும் பூசாரி, எனக்கும் சுவாமி ஆட்டமுண்டு" என்று ஆப்கானிஸ்தானத்தின் அரசராய் அமர்ந்த பாச்சா சாகோவும், அவரைப் பின்பற்றியவர்களும் சுட்டுக் கொல்லப்பட்டனரென்று செய்தி எட்டுகின்றது. மகா விவேகியான அமானுல்லா அரசர் இந்த "சாகோ"வால்தான் நாடிழந்தார். இப்பொழுது இந்த "சாகோ"வும் தம் உயிரை யிழந்தார். இருவருக்கும் ஏற்பட்ட சண்டையில் மூன்றாவது மனிதரான நாதர்கானுக்கு ஆப்கன் அரசு பாக்கியம் கிடைத்துவிட்டது. "சாகோ" கலகம் செய்யாதிருந்திருப்பின், அவரும் உயிர்வாழ முடியும்; அமானுல்லாவும் அரசபதவியில் வீற்றிருக்கலாம். ஆனல், மூன்றாவது மனிதர் லாபமடைய வேண்டுமென்று காலவினையிருக்கையில், அதற்கேற்ப நிகழ்வனவற்றைத் தடுக்க இயலுமோ? குடும்பத்து சங்கதிகளுக்குக்கூட இதிலிருந்தும் வேண்டிய படிப்பினைகளைக் கிரகிக்கலாம். கலகம்—எப்பொழுதுமே மூன்றாவது மனிதருக்கு லாபமாம்.

***

**தன் சோறு தின்று தன் புடவை கட்டி வீண் சொல் கேட்க விதியா?** என்பது பழமொழி. வீண் சொல் கேட்க வருவதெல்லாம் தான் பிறருக்கு உதவி செய்தும் ஆதரித்தும் சம்பந்தப்பட்டுநின்ற காரணத்தால் தான் நேருகின்றது. செய்த உதவிகள் சரிதான், அதுவும் அதிகம்தான்; ஆயினும் அத்துடன்கூட அந்த சொற்ப சங்கதிக்கும் தனது கையைத் தாராளமாகக் காண்பித்து இசைந்து போயிருந்தால் இப்பொழுது இத்தனை பிரிவினையும் கலகமும் பட்டு வீணாகநோகவேண்டிய சம்பவங்கட்கு

---

"அமிர்த குணபோதினி" நகைச்சுவை நண்ணியது. நற்கோள் பல நலம்பெறக் காட்டுவது. மனிதவாழ்க்கையின் இரகசியங்களை இனிதெடுத் துரைப்பது. இளஞ்சிறுவர்கட்கு விவேகப் பிரகாசந் தருவதோர் ஸஞ்சிகை.

ஆளாக நேர்ந்திராது. அவ்விதம் அந்தச் சிறு சங்கதிக்கும் மனதொத்துப் போவதற்கு யோசிக்குமுன்னே நெஞ்சிலே ஒருவித ஆத்திரம் தோன்றிக் கொள்கிறது. அந்த ஆத்திரத்தை அருகிலிருப்பவர்கள் வெகு உறவான பாவனையில் யோசனை சொல்வது போல் இன்னும் அதிகப்படச் செய்து விடுகிறார்கள். இவ்விதம் தூண்டிவிடுவாருடன் சேர்ந்துகொண்டு, அந்த சிறு சங்கதிக்கு வேண்டிக்கொண்டவர்களை எட்டித்தள்ளி எதிர்த்துக் கொள்வதில் கலகத்துக்கு வேண்டிய சரக்கு ஜாபிதா சரியாய்க் கூடிவிடுகிறது. இது விட்டுக்கொடுத்து ஒத்துப் போகிற பெரிய புத்தியில்லாத சின்ன புத்தியின் சங்கதி. அந்தக் குறுகிய தன்மைக்குக் காலபேதமும் காரணமாகலாம். இதிலிருந்து தன்னைச் சூழ்ந்தோரிற்பலர் பகைவராகின்றனர்! கடைசியில், தான் ஆதரித்தவர்களின் குணங்களைக் கண்டுகொள்கிற சந்தர்ப்பம்மட்டுமே இதிலிருந்து ஒருலாபமாகக் கிடைக்கிறது. இதுவும் சென்ற மாதத்துடன் சேர்க்கவேண்டியவர்த்தமானச் சரக்குகளில் ஒன்றுதான்.

## ஜீவிய சந்தா

வெளிநாட்டில் பெரும்பாலான அன்பர்களும், உள் நாட்டில் சிலரும் தங்கட்கு ஆண்டுதோறும் சந்தா செலுத்துவதென்பது சிரமமாக இருக்கின்றதென்றும், சில சமயம் ஞாபக மில்லாமல் சந்தா அனுப்பாதிருக்க அதனால் பத்திரிகை கிடைக்கத் தாமதப்பட்டுவிடுகின்றதென்றும், தினமும் அரையணாவை தயிர் மோருக்குத் தருவது கஷ்டமாகி, மாதத்தில் சேர்த்துத் தருவது சுலபமாயிருப்பதுபோல் ஆயுள் சந்தா ஏற்படுத்தினால் தாங்கள் முதலிலேயே மொத்தமாய்ச் செலுத்தி நமது அமிர்தத்தை தங்கள் ஜீவகால பரியந்தம் யாதொரு இடைஞ்சலு மின்றிப் பெற்று ஆனந்திக்கக்கூடுமென்றும் வற்புறுத்தி எழுதுகின்றனர்.

எனவே, உள் நாட்டிற்கு ரூபா 15-ம் வெளிநாட்டிற்கு ரூபா 20-ம் ஆயுள் சந்தாவாக ஏற்படுத்தியுள்ளோம். அன்பர்கள் பலரும் ஜீவிய சந்தாதாரராய்ச் சேர்ந்து ஆதரிக்குமாறு வேண்டுகிறோம்.

மானேஜர்,

அமிர்த குணபோதினி ஆபீஸ், சென்னை.

ஒரு ஊரில் எத்தனை வைத்தியர்கள் இருக்கிறார்களென்று சாதாரண காலத்திலேயே தெரிந்துகொண்டு பழகி, நேசித்து, அதில் தக்கவர்களை ஆராய்ந்து வைப்பது அவசரத்திற்கு உதவக்கூடிய கைச்சரக்காக இருக்கும்.

"அமிர்த குணபோதினி" பிரஸ், 302, தங்கசாலைத் தெரு, சென்னை.